தர்மசக்கரம்



ரௌத்திரி ௵ தை ௴ சக்கரம் 30 ஆரம் 1

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை-639 115, திருச்சி ஜில்லா

இராமநாதபுரத்தில் ஸ்ரீ தாயுமானசுவாமிகளின் புதுப்பித்துள்ள கோயில்
கும்பாபிஷேகமும் குருபூஜையும்
1981 ஜனவரி மாதம் 28, 29, 30 ஆகிய மூன்று நாட்கள்

ஸ்ரீ தாயுமானசுவாமி கோவில் கும்பாபிஷேகம் ஜனவரி மாதம் 29ம் தேதி வியாழக் கிழமை நடைபெறுகிறது. இதில் அன்பர்களும் தாய்மார்களும் தங்களுடைய சௌகரியம்போல அங்குவந்து கலந்துகொள்ளலாம். நடைமுறை விபரம் வருமாறு :

ஜனவரி மாதம் 28ம் தேதி புதன்கிழமை அதிகாலை 5-30 மணிக்குப் புண்ணியதீர்த்தங்களின் ஆவாஹனம். அன்று காலை 6 மணியிலிருந்து 29ம் தேதி காலை 6 மணிவரையில் ஜபயக்ஞம் நிகழும். அன்பர்கள் தங்களுடைய வசதிக்கேற்றவாறு எத்தனை தடவை வேண்டுமென்றாலும் அதில் கலந்துகொள்ளலாம். தாய்மார்கள் 28ம் தேதி காலை 6 மணியிலிருந்து இரவு 8 மணி வரையில் எத்தனை தடவை வேண்டுமென்றாலும் ஜபயக்ஞத்தில் கலந்துகொள்ளலாம்.

29ம் தேதி காலை சூரியோதயத்தின்பொழுது கும்பாபிஷேகம் நிகழ்கிறது. அன்று காலை 7-30 மணிமுதல் இரவு 8-00 மணிவரை குருபூஜை நிகழ்ச்சிகள் நடைபெறும். 30ம் தேதி காலை 5-00 மணிமுதல் இரவு 7-30 மணிவரையில் அந்தர்யோகம் நடைபெறும்.

இங்ஙனம்
சித்பவானந்த

நிகழ்ச்சி முறை 28—1—81

காலை 5-30 மணிக்குப் புண்ணிய தீர்த்தங்களின் ஆவாஹனம். காலை 6-00 மணியிலிருந்து 29—1—81 காலை 6-00 மணிவரையில் தொடர்ந்து 24 மணிநேரம் ஜப யக்ஞம். இதில் ஆடவர் மகளிர் எல்லாரும் மேலே கண்டுள்ளபடி கலந்துகொள்ளலாம்.

29—1—81 காலை

மணிமுதல்	மணிவரை	
3-30	5-00	ருத்திரயக்ஞமும் விரஜாஹோமமும். சூரியோதயத்தின்பொழுது கும்பாபிஷேகம்.
7-30	9-00	ஸ்படிகலிங்கத்தின் வாயிலாகத் தாயுமானசுவாமிக்கு அபிஷேகம். அதே வேளையில் பஜனையும் நடைபெறும்.
9-00	9-30	தாயுமானவர் பாடல் சமர்ப்பணம்.
9-30	11-30	சிவ சகஸ்ரநாம அர்ச்சனை. தனித்தனியாகப் பூ சாத்தி வணங்குதல்.
11-45	12-00	நிவேதனம், தீபாராதனை
12-15		மகேஸ்வர பூஜை, அன்னப் பிரசாதம் வழங்குதல்.

மாலை

4-00	5-00	பஜனை
5-00	5-30	தலைமையுரை ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
5-30	6-00	திரு S. சாலமன் பாப்பையா M. A. அமெரிக்கன் கல்லூரி, மதுரை.
6-00	6-30	திருமதி R. ரேணுகாதேவி M. A. ஸ்ரீ சாரதா கல்லூரி, சேலம்.
6-30	7-00	புலவர் திரு S. K. ராமராஜ் வேலூர், சேலம் ஜில்லா.
7-00	7-30	திரு N. மகாலிங்கம், B. Sc. F.I.E. தொழிலதிபர், பொள்ளாச்சி.
7-30	8-00	தலைவர் முடிவுரை.

முத்தமிழ்ப்பண்ணை
13.1 | 81

83-2

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 30	ரௌத்திரி ஸு தை மீ	ஆரம் 1

பொருளடக்கம்

		பக்கம்
1. பிரார்த்தனை		1
2. அருள்விருந்து		2
3. பரமஹம்சர் புகட்டிய பெருநெறி விளக்கம்		3
4. எந்நாள் கண்ணி		6
5. இயேசுவின் மலை உபதேச விளக்கம்		8
6. நிலையாமையும் நிலைபேறும்		11
7. அநுமன் கண்ட சீதை	திரு. K. ராமமூர்த்தி M. Com.	17
8. விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்	திரு. V. சோமு B. Sc., M. Ed.	22
9. குமரகுருபரர்	வித்துவான் ஆதி. பாலசுந்தரன் M. A.	23
10. ஸ்ரீ லலிதா வியாக்கியானம் - 149		27
11. ஸத் ஸம்பாஷணை		30
12. ஜாதகக் கதைகள்	திரு. V. S நரசிம்மன்	32
13. பகவத்கீதையும் காந்தியடிகளும்	சுவாமி துருவானந்தர்	33
14. அமரநாத்யாத்திரை	சுவாமி குஹானந்தர்	36
15. செய்திகள்		40

வருட சந்தா:	உள்நாடு ரூ. 12-00	வெளிநாடு ரூ. 25-00
தனி இதழ்	,, ரூ. 1-25	,, ரூ. 2-25

அந்தர்யோக விவரங்கள்

திருநெல்வேலி ஜில்லா—தென்திருப்பேரையில் 18—1—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ கைலாசநாதர் ஆலயம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

மதுரை ஜில்லா—திருமங்கலத்தில் 18—1—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண—விவேகானந்த தபோவனம்
நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-15 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

தஞ்சாவூரில் 18—1—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: வீரராகவ உயர்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

[தொடர்ச்சி அட்டை 4ம் பக்கம் பார்க்க]

ஸ்ரீ தாயுமானசுவாமி கோயில் திருப்பணி



டிசம்பர் மாதம் 22ஆம் தேதி அதிகாலையில் தாயுமான சுவாமிகள் சமாதி மூலஸ்தானத்தில் மூர்த்தி பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. அன்று முதல் அங்கு நித்திய வழிபாடு முறையாக நடைபெற்று வருகிறது. மூலஸ்தானத்தில் மொசைக் வேலையும் முன் மண்டபத்தில் சிமிண்ட் தளம் போடும் வேலையும் பூர்த்தியாகி விட்டன. கோபுர வேலை பூர்த்தியாகும் தறுவாயில் இருக்கிறது. விருந்தினர் விடுதி முதல் மாடியில் சீலிங் கான்கிரீட் போட ஆயத்தமாய் இருக்கிறது. குரு பூஜைக்கு அந்த முதல் மாடியும் தாய்மார்கள் தங்குவதற்கு ஆயத்தமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1980 டிசம்பர் மாத நன்கொடை விபரம் வருமாறு:

விலாசம்		ரூபாய்
நவம்பர் மாதம் முடிய நன்கொடை வசூல்		9 96 573
ஸ்ரீ A. காசி தாயுமானசுவாமி	சங்ககிரி, சேலம்	3 500
,, B. S. வீரபத்திரன்	வீனஸ் எலக்ரிகல் ஸ்டோர்ஸ், திண்டுக்கல்	1 000
ஓர் பக்தை	எர்ணுகுளம், கேரளா	1 000
ஸ்ரீ M. விஸ்வநாத ரெட்டியார்	ஏந்தல், தென் ஆற்காடு மாவட்டம்	500
,, A. ராஜமாணிக்கம்	மேற்கு மாசிவீதி, மதுரை	111
,, சரவணு கார்ப்பரேஷன்	சுவாமி சன்னதி சந்து, மதுரை	105
,, T. S. சின்னையன்	சொக்கம் பாளையம், கோவை	101
ஓர் சிவபக்தன்	போர்ட் பிளயர், அந்தமான்	101
ஸ்ரீ N. கணேசன்	கோட்டார், நாகர்கோயில்	101
,, S. சுப்பிரமணியபிள்ளை	வலியசாலை, திருவனந்தபுரம்	101
,, S. சுப்பையா நாடார்	முனிசாலைரோடு, மதுரை	101
ஓர் பக்தை	விருதுநகர்	101
மங்கையர்க்கரசி மாதர் கழகம்	வடக்கு ராஜவீதி, சிவகங்கை	101
கவிக்குரிசில் G. V. அர்த்தனரி	கண்டர் மேல்நிலைப்பள்ளி, வேலூர்	100
ஸ்ரீ R. சுந்தரராஜ ரெட்டியார்	நாமக்கல்	100
,, K. N. ஸ்ரீ ராமலு நாயுடு	நாமக்கல்	100
,, இராம. நா. அண்ணுமலை	கண்டனூர்	100
,, T. C. சப்தரிஷி ரெட்டியார் ஞாபகார்த்தமாக	ஆலத்துடையான்பட்டி, திருச்சி	100
ரூபாய் நூறுக்குக் கீழ்வந்த நன்கொடைகள்		400
	ஆகக் கூடுதல் ரூ.	10 04 396

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 30 | ரௌத்திரி ஹூ தை மீ | ஆரம் 1

பிரார்த்தனை

या मामाजन्म विनयत्यति दुःखमार्गैः आसंसिद्धेः स्वकलितैर्ललितैर्विलासैः ।
या मे बुद्धिं सुविदधे सतत धरण्याम् साम्बा सर्वा मम गतिः सफलेऽफले वा ॥

யா மாமாஜன்ம விநயத்யதி து:கமார்கை:
ஆஸம்ஸித்தே: ஸ்வகலிதைர்லலிதைர்விலாஸை: ।
யா மே புத்திம் ஸுவிததே ஸததம் தரண்யாம்
ஸாம்பா ஸர்வா மம கதி: ஸபலேऽபலே வா ॥

தாயே, நீ விளையாட்டாகத் துக்கத்தின் வாயிலாக என்னைப் பக்குவப்படுத்துகிறாய். வாழ்வில் நீ எனக்கு நல்லறிவு புகட்டிவருகிறாய். வெற்றி தோல்விகளுக்கிடையில் நீயே எனக்குக் கதி.

— சுவாமி விவேகானந்தர்

வேண்டத் தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன் மாலுக்கு அரியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீ யாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில்
அதுவும் உன்தன் விருப்பு அன்றே.

— திருவாசகம்

அருள் விருந்து

மனபரிபாகம் விவேகத்தின் விளைவாம்.

முன்னேற்றத்துக்கு முகாமையாயிருப்பது சுதந்தர வாழ்வு.

நாவை வென்றவன் தன் சிறுமையை முற்றிலும் வென்றவனாகிறான்.

தன்னைத்தானே முறையாக ஆள்பவனுக்குப் புற ஆட்சி தேவையில்லை.

சத்தியத்தினின்று வழுவுபவன் வாழ்வினின்று வழுவியவன் ஆகின்றான்.

அன்பின் வாயிலாக உலகைத் தன்மயமாக்குவது பக்தனுக்குச் சாத்தியம்.

பெருநெறி கடைப்பிடித்துப் பாழ்பட்டுப்போனவன் எவ்வுலகிலும் இல்லை.

மனத்தூய்மை படைத்திருப்பவர்களுக்கு இவ்வுலக வாழ்வு யாண்டும் இன்பகரமானது.

தீய செயலின் விளைவு உடனே தென்படுவதில்லை; ஆயினும் அதன் விளைவைத் தவிர்க்க முடியாது.

அகங்காரத்தை அகற்றியவனே நல்ல தொண்டனாகிறான்; அன்னவனே முக்திக்கு வழிவகுக்கிறான்.

நெறி பிறழும் பொழுதெல்லாம் ஆத்ம சாதகன் இறைவனைச் சார்ந்திருந்து தன்னைச் சரிப்படுத்திக் கொள்வானாக.

பொருந்தாத பழக்கத்தை உடனே தவிர்க்க முடியாது எனினும் நற்பழக்கத்தால் அதை அகற்றுதல் வேண்டும்.

இலட்சியம் ஒன்றில் ஈடுபடுகிறவன் தன் மனம், மொழி, மெய் ஆகிய திரிகரணங்களையும் அதன்பால் செலுத்துதல் வேண்டும்.

மலரையோ, அதன் மணத்தையோ, நிறத்தையோ பாழ்படுத்தாது தேன் ஈ தேன் எடுக்கிறது. நல்லார் அங்ஙனம் இவ்வுலகைப் பயன்படுத்துகின்றனர்.

வியாபாரி ஒருவன் தினசரி கணக்கைச் சரியாகக் கவனிப்பது போன்று ஆத்ம சாதகன் சாதனத்தின் ஒழுங்குப்பாட்டை நாள்தோறும் ஊக்கத்துடன் கவனித்தல் வேண்டும்.

தனக்கு வாய்க்கும் நலனுக்கும், கேட்டுக்கும் காரணம் நல்லான் ஒருவனுக்கு விளங்குகிறது. ஆதலால் நலனைக் குறித்து மகிழ்வுறுவதும், கேட்டைக் குறித்துத் துன்புறுவதும் அவனுக்கில்லை.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பரமஹம்சதேவர் பக்தர்களோடு உரையாடிக்கொண்டு இருக்கிருர். கொன்னகர் என்னும் கல்கத்தா பட்டணப் பகுதியிலிருந்து பக்தர்கள் சிலர் படகில் ஊர்ந்து வந்து சேர்ந்தனர். பரமஹம்சதேவரின் அறைக்குள்ளே பிரவேசித்து அவர்கள் கீர்த்தனம் பாடினுர்கள். சிறிது நேரத்திற்குப் பிறகு அமுது பண்ணுதற்கு அன்னவர்களும்அறையை விட்டு வெளியேகினர். நரோத்தமன் அறையினுள் இருந்தார். அன்னவனையும் ஏனைய பக்தர்களையும் பார்த்துப் பரமஹம்சதேவர் பகர்ந்தார்: "கொன்னகரிலிருந்து வந்திருந்த பக்தர்களுடைய பாடலில் ரசம் ஏதுமில்லை. அது மந்தமாயிருந்தது. பாடல்கள் பாடும் பொழுது உற்சாகம் ததும்பிக் கொண்டிருக்க வேண்டும். பாடலின் வேகத்தால் ஆடல் தானுக வடிவெடுக்க வேண்டும். பகவானைக் குறித்துப் பாடுகிற பாடல்களில் ஊக்கமும், ஆர்வமும் ததும்பிக்கொண்டிருக்க வேண்டும். உயிரற்ற பாங்கில் ஏனே தானேவென்று யாருமே பாடலாகாது. உயிர்த் தத்துவம் ததும்புவதற்கேற்ப பக்தனிடத்துப் பக்தி ஓங்குகிறது". இங்ஙனம் பகர்ந்த பரமஹம்சதேவர் தாமே பாடல் ஒன்றைப் பாடினுர். அதில் அடங்கியிருந்த கருத்தாவது: "கௌராங்க தேவருடைய பேரன்பு அலைவீசிக்கொண்டிருக்கிறது. அந்த அலைகளால் மோதப்பெற்று அவருடைய பிறப்பிடமாகிய நாதியா என்னும் ஊர் நடுநடுங்குகிறது.

"கௌராங்க தேவரும் நித்தியானந்தரும் எழுந்தருளியிருக்கிருர்கள். ஹரி நாமத்தை ஓதுதற்கிடையில் ஆனந்தக் கண்ணீர் ததும்பிக் கொண்டு வருகிறது. போக்கிரிகள் கொடுத்த அடிகளுக்குப் பதிலாக அவர்கள் ஹரி நாமத்தை எடுத்து அப்போக்கிரிகளுக்கு வழங்கினுர்கள். அதன் விளைவாக அவர்கள் பக்தர்களாக மாறியமைந்தார்கள்.

"கௌராங்கரே, நித்தியானந்தரே, நீங்களிருவரும் பாக்கியவான்கள். இறைவனுடைய அருளுக்குப் பாத்திரமாகியுள்ள சகோதரர்கள்! அன்புக்கு உறைவிடம் நீங்கள் என்று நான் கேள்விப்படுகிறேன். ஆதலால் நான் உங்களிடம் வந்துள்ளேன்." படைக்கப்பட்ட பிரசாதத்தை அன்பர்கள் அருந்திக்கொண்டிருந்தனர். அது அறுசுவை நிறைந்த திருப்திகரமான உணவுவகையாயிருந்தது. மகேந்திரரிடம் பரமஹம்சதேவர் விஷயம் ஒன்றை விசாரித்தார்: "முகர்ஜி சகோதரர்களை அழைத்திருக்கிருயா? பாடகர்களுக்கு உணவு வழங்கும்படி சுரேந்திரரிடம் தெரிவிப்பாயாக."

வெப்பின்சர்க்கார் இப்பொழுது ஆங்கு வந்து சேர்ந்தார். அவரிடம் பரமஹம்சதேவரை அன்பர்கள் அறிமுகப்படுத்தினுர்கள். பரமஹம்சதேவர் நிமிர்ந்து அமர்ந்திருந்து பக்தர்களிடம் தெரிவித்ததாவது: "அவருக்கு அமர்ந்திருக்க ஆசனம் ஒன்றைத் தாருங்கள். பிறகு வெற்றிலையும் எடுத்து வழங்குங்கள்." வந்திருந்த வெப்பின்சர்க்காரிடம் பரமஹம்சதேவர் இனிது எடுத்துரைத்ததாவது: "இப்பொழுது உங்களோடு உரையாடிக்கொண்டிருக்க இயலாமைக்கு நான் வருந்துகிறேன். இன்று, இங்குப் பெரும் கூட்டம் ஒன்று கூடியிருக்கிறது."

பாபுராமிடம் கிரீந்திரரைக் குறித்துப் பரமஹம்சதேவர் இயம்பியதாவது: "அவருக்கு அமருதற்கு ஆசனம் ஒன்று எடுத்துக் கொடு." நித்தியகோபால் தரையின்மீது அமர்ந்திருந்தார். அவருக்கும் ஆசனம் ஒன்று எடுத்துக் கொடுக்கும்படி பரமஹம்சதேவர் இயம்பினுர்.

கல்கத்தாவில் சிந்தி என்னும் பகுதியில் வசித்திருந்த மகேந்திர வைத்தியர் வந்து சேர்ந்தார். அப்பொழுது பரமஹம்சதேவர் புன்னகை பூத்தவராக ராக்காலிடம் சைகை காட்டினுர்; பேசவில்லை. அந்தச் சைகையின் உட்கருத்து நாடி பிடித்துப் பார்த்து ராக்காலின் உடல்நிலையை அறிந்துகொள்ளும் பொருட்டேயாம். இப்பொழுது ராம்லாலரிடம் திரும்பி பரமஹம்சதேவர் பகர்ந்ததாவது: "கிரீஷ் கோசரிடம் உறவுகொண்டாடிப் பழகு; அவருடைய தயவால் அவருடைய நாடகக்கொட்ட

கைக்கு நாடகம் பார்க்கப் போவதற்கு உனக்கு இலவசமாக அனுமதி கிடைக்கும்."

தலைவாயில் மண்டபத்தில் அமர்ந்து கொண்டு நரேந்திரன் நெடுநேரம் ஹாஸ்ராவிடம் உரையாடிக் கொண்டிருந்தான். தன் தந்தை யார் மறைந்துபட்டுப்போன நாள்முதல் நரேந்திரனுக்கு வீட்டில் பொருளாதார நெருக்கடி மிகைப்பட்டு வடிவெடுத்திருந்தது. ஆனல் அவன் அதை எப்படியோ சமாளித்து வந்தான். ஹாஸ்ராவுடன் உரையாடுவதை நிறுத்திவிட்டு இப்பொழுது நரேந்திரன் பரமஹம்சதேவரின் அறைக்குள்ளே வந்து ஓரிடத்தில் அமர்ந்தான்.

பரமஹம்சதேவர் (நரேந்திரனைப் பார்த்து): "ஹாஸ்ராவுடன் நீ உரையாடிக் கொண்டிருந்தாயா? உங்களிருவருடைய நிலைமைகள் ஒரே பாங்கில் அமைந்திருக்கின்றன. இரண்டு தோழர்களைப் பற்றிய கூற்று ஒன்று உனக்குத் தெரிந்திருக்கும். ஊரைவிட்டு வெளியேறும் நெருக்கடி ஒரு நண்பனுக்கு ஏற்பட்டிருக்கிறது. தன் தலைவியிடமிருந்து பிரிந்திருக்கும் நெருக்கடி மற்றொரு நண்பனுக்கு ஏற்பட்டிருக்கிறது. நரேந்திரன் ஹாஸ்ரா ஆகிய இருவருக்கும் குடும்பத்தில் பொருளாதார நெருக்கடி மிகக் கடுமையாக இருந்தது. ஹாஸ்ராவுக்குக் கடனைக் கட்டுவதற்கு ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் தேவை." இதைக் கேட்டு எல்லாரும் வியந்தார்கள்.

ஹாஸ்ரா சொல்லுவதாவது: "நரேந்திரனிடம் சத்துவகுணம் முற்றிலும் நிறைந்திருக்கிறது. ஆயினும் இடையிடையே ரஜோகுணத்தின் இயல்பு தலையெடுக்கிறது. ஆனல் என்னிடத்து நூற்றுக்கு நூற்றிருபத்து ஐந்து பங்கு சத்துவகுணமே நிறைந்திருக்கிறது." இதைக் கேட்டு எல்லாரும் நகைக்கின்றனர்.

ஹாஸ்ராவிடம் நான் இயம்புவதாவது: "வெறும் விவாதத்திலேயே நீ மூழ்கியுள்ளாய். ஆகையினல்தான் உன்னுடைய பேச்சில் சுவை ஏதுமில்லை. அதற்கு ஹாஸ்ரா கொடுக்கிற விடையாவது, 'நான் சுவையற்றவனயிருப்பதற்குக் காரணம் சூரியனிடத்திருந்து வரும் ஆத்மப் பிரகாசத்தில் திளைத்திருப்பதனலேயே!'

"தூய பக்தியின் பாங்கை விளக்கிக் காட்டும் முறையில் ஹாஸ்ராவிடம் நான் கூறுவதாவது, உண்மையான பக்தனெருவன் பகவானிடம் பிரார்த்தனை பண்ணுவதில்லை. அதற்கு ஹாஸ்ரா கொடுக்கிற விடையாவது, பகவானுடைய கிருபை பெருக்கெடுத்து வருகின்றபொழுது நதிகள் கரைபுரண்டு ஓடுகின்றன; குளங்களும், குட்டைகளும், கால்வாய்களும் நிரம்பப்பெறுகின்றன. இறைவனுடைய பேரருளால் மானுடன் ஒருவனுக்குத் தூய பக்தி மட்டும் வாய்க்கப் பெறுவதன்று. அஷ்ட சித்திகளும் செல்வமும் சேர்ந்தே அவனுக்குக் கிடைக்கின்றன."

நரேந்திரனும் பக்தர்கள் பலரும் பரமஹம்சதேவரின் அறையில் தரையில் அமர்ந்திருந்தனர். கிரீஷ்சந்திரகோஷ் ஆங்கு அறைக்குள் வந்து அவர்களோடு சேர்ந்துகொண்டார். பரமஹம்சதேவர் கிரீஷரைப் பார்த்து, "நரேந்திரனை நான் ஆத்ம சொரூபமாகக் கருதுகிறேன். அவன் சொற்படியும் நான் நடந்து கொள்ளுகிறேன்."

கிரீஷ்: "யாருடைய சொற்படி தாங்கள் நடந்துகொள்ளாதிருக்கிறீர்கள்?"

பரமஹம்ச தேவர் (புன்னகை பூத்தவராக): "ஆண்மைப் பாங்கு அவனிடத்து ஏராளமாக அமைந்திருக்கிறது. பெண்மையின் பாங்கு என்னிடம் அமைந்திருக்கிறது. மகிமை மிக வாய்க்கப்பெற்றவன் அவன். அகண்டாகார பிரம்ம சொருபத்தைச் சேர்ந்தவன் அவன்."

கிரீஷர் அமைதியாக அறையை விட்டுவெளியேகினர்.

நரேந்திரர் (பரமஹம்சதேவரைப் பார்த்து): "கிரீஷ்சந்திரகோஷோடு நான் சிறிது உரையாடினேன். அவரிடம் பெருமைகள் பல அமைந்திருக்கின்றன. நாங்களிருவரும் தங்களைப்பற்றி உரையாடிக்கொண்டிருந்தோம்."

பரமஹம்சதேவர்: "என்னைப்பற்றி நீ என்ன பகர்ந்தாய்?"

நரேந்திரன்: "தாங்கள் அறிவிலி என்றும் நாங்களிருவரும் கற்றறிந்த பண்டிதர்கள் என்றும் பேசிக்கொண்டிருந்தோம். இந்தப் பாங்கில் நாங்கள் ஏராளமாக உரையாடினேம்!" இதைக்கேட்டு எல்லாரும் நகைக்கின்றனர்.

மணிமல்லிக்கர் பரமஹம்சரைப் பார்த்து: "எட்டுக்கல்வி ஏதுமில்லாது தாங்கள் ஒரு மகா பண்டிதர் ஆகியுள்ளீர்கள்."

பரமஹம்சதேவர் (நரேந்திரனையும் ஏனைய பக்தர்களையும் பார்த்து): "விஷயம் ஒன்றை நான் உங்களிடம் தெரிவிக்க விரும்புகிறேன். நான் வேதாந்தத்தையோ ஏனைய சாஸ்திரங்களையோ கற்றவன் அல்லன். அதைக் குறித்து நான் சிறிதேனும் விசனப்படுவதில்லை. பிரம்மம் சத்யம்; ஜகத் மித்தை என்னும் அடிப்படைக் கோட்பாட்டை நான் நன்கு அறிகிறேன். இனி, கீதையினுடைய சாரம்தான் என்ன? கீதா கீதா என்று தொடர்ந்து சொல்லிக்கொண்டு போனால் அது தாகீ தாகீ என்று ஒலிக்கிறது. தாகீ என்பது தியாகி என்னும் சொல்லின் சிதைவு ஆகிறது. மானுடனொருவன் தியாகி ஆகவேண்டும் என்பதே கீதையின் கோட்பாடாகிறது. சிஷ்யன் ஒருவன் குருவிடமிருந்து சாஸ்திரங்களின் உட்பொருளைச் சிரவணம் பண்ணவேண்டும். கூர்ந்து கவனித்துக் கேட்டு விஷயத்தை அறிந்து கொள்ளுதல் சிரவணமாகும். அப்படி அறிந்து கொண்டதைப் பிறகு அவன் அனுஷ்டானத்தில் கொண்டுவர வேண்டும். அது அனுஷ்டானமாக வடிவெடுக்கிறபொழுது அச்செயல் தவம் எனவும், பக்தி சாதனம் எனவும் பெயர் பெறுகிறது. வெளியூருக்குச் சென்றிருக்கும் மானுடன் ஒருவனுக்குச் சொந்தவூரிலிருந்து கடிதம் ஒன்று வந்திருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அக்கடிதம் அவனுக்கு எவ்வளவு காலத்துக்குத் தேவையாயிருக்கிறது? அக்கடிதத்தில் அடங்கியுள்ள விஷயங்களை அறிந்து கொள்ளும்வரை அது தேவைப்படுகிறது. அதைப் படித்து அறிந்துகொண்ட பிறகு அக்கடிதத்தின் தேவை பின்னணிக்குப் போகிறது. கடிதத்தில் கண்டுள்ளபடி பொருள்களை வாங்க அவன் முயலுகிறான். சாஸ்திரங்களின் பிரயோஜனமும் அத்தகையதேயாம். அவைகள் பகர்ந்துள்ளபடி சாதனத்தில் ஈடுபடுதல் முக்கியமானது. அப்படிச் சாதனத்தில் ஈடுபடுகிறவனுக்குப் பிறகு சாஸ்திரங்களின் பயன் ஒன்றுமில்லை."

மற்றொரு பாடலைப் பரமஹம்சர் பாடினார். "ஓ தாயே! கார் இருளில் உன்னுடைய வடிவமில்லாத அழகு மிளிர்ந்துகொண்டிருக்கிறது. ஆதலால்தான் யோகியர்கள், மகான்கள் உள்ளமெனும் குகையினுள் சென்று உன் சொரூபத்தைத் தியானிக்கிறார்கள்."

ஆனந்தப் பரவசம் அடைந்தவராகப் பரமஹம்சதேவர் தாமே திகழ்ந்துகொண்டிருந்தார். கட்டிலினின்று அவர் கீழே இறங்கி வந்து நரேந்திரருக்கு அருகில் அமர்ந்தார். பரவச நிலையில் இருந்தபடியே அவர் பகர்வாராயினர்.

பரமஹம்சதேவர்: "நான் பாடட்டுமா? வேண்டாம்! (நித்திய கோபாலரைப்பார்த்து) நீ என்ன சொல்லுகிறாய்? ஆத்மபோதம் உண்டாதல் பொருட்டுப் பக்தனொருவன் ஆனந்தப் பரவசமூட்டுகிற பாடல்களுக்குச் செவிமடுத்துக்கொண்டிருக்கவேண்டும். அங்ஙனம் ஆத்மபோதம் எழப்பெறுமானால் பிறகு அந்தப் பக்தனுக்குக் குறையொன்றுமில்லை. அவன் ஆர்வத் தீயை மூட்டியுள்ளான். அது மிக நன்று. இப்பொழுது யாண்டும் ஒரேமௌனம். இப்படி மௌனமுற்றிருப்பதும் நன்று. இப்பொழுது நான் வாய்பொத்தியிருக்கிறேன். நீயும் வாய் பொத்தியிருப்பாயாக. ஆனந்தப்பரவசத்தில் மூழ்கியிருப்பது ஒன்றே வேண்டப்படுகிறது.

"நான் பாடட்டுமா? மிக நன்று. நான் பாடுகிறேன். நீர் என்பது யாண்டும் நீரே. அது அலை வீசிக்கொண்டிருந்தால் என்ன? அலையற்று அமைதியாயிருந்தால் என்ன?"

பரமஹம்சதேவருக்கு அருகில் நரேந்திரன் அமர்ந்து கொண்டிருந்தான். தன் தாய்க்கும் உடன் பிறந்தவர்களுக்கும் விளைந்திருந்த வறுமைநோய் இடையிடையே அவன் உள்ளத்தை வந்து தாக்கியது. இப்பொழுது நரேந்திரனுக்கு வயது இருபத்து மூன்று. பரமஹம்சதேவர் அவனை ஆழ்ந்து உற்றுநோக்கினர்.

பரமஹம்சர் (புன்னகை பூத்தவராக) நரேந்திரனிடம்: "உண்மையாக நீ சிதாகாசம். ஆயினும் குடும்பத்தின் கஷ்டதசையைப் பற்றி இடையிடையே நீ நினைவு பூண்டாக வேண்டும். அத்தொல்லையைத் தவிர்க்க முடியாது." பரஞானியையும் பிரபஞ்சத் தொல்லைகள் இடையிடையே தோன்றி உபத்திரவப்படுத்துகின்றன என்பது பரமஹம்சரின் கருத்தாகும்.

27—1—81 செவ்வாயன்று ஸ்ரீ விவேகானந்தர் ஜன்மதினமாகும்.

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

1. **நீர்பூத்த வேணி நிலவுஎறிப்ப மன்றுஆடும்**
 கார்பூத்த கண்டனையான் காணுநாள் எந்நாளோ.

வேணி—ஜடாபாரம். எறிப்ப – எறித்தல்– ஒளி விசுதல். மன்று ஆடும்—சித்சபையில் தாண்டவம் புரிதல். கார்பூத்த கண்டனை–நீல கண்டனை.

சிதாகாசத்திலே ஆனந்தத் தாண்டவம் ஆடிக் கொண்டிருக்கும் நடராஜ மூர்த்தியின் ஒவ்வோர் அம்சமும் தத்துவ விளக்கமாக அமைந்திருக்கிறது. அச்சிவனார் நீர்பூத்த வேணியனாக இலங்குகிறார். கங்காதரனாகவும் ஜடாதரனாகவும் அவர் உருவெடுத்து இருக்கிறார். ஆகாசத்திலின்று வரும் கங்கையைத் தம் சிரசின் மீது அவர் ஏற்றிருப்பதால் கங்காதரன் என்னும் பெயர் அவருக்கு அமைந்துள்ளது. கங்காதரன் என்னும் சொல்லுக்கு வாச்சியார்த்தம், லட்சியார்த்தம் ஆகிய இரண்டு பொருள்கள் இருக்கின்றன. மண்ணுலக அமைப்பை அடிப்படையாகக் கொண்டிருப்பது வாச்சியார்த்தம். உலகில் உள்ள மலைகளிலெல்லாம் மிகப் பெரியதாகவும் உயரமானதாகவும் நீண்டதாகவும் இருப்பது ஹிமாசலம். இப்பர்வதம் முழுதும் சிவசொருபமாகக் கருதப்படுகிறது. அடுக்கடுக்காக இதில் அமைந்துள்ள மலைத்தொடர்கள் சிவனாருடைய ஜடாபாரத்திற்கு நிகராகின்றன. வானத்தினின்று நீர் ஆகவும், உறைபனியாகவும் இதன் மீது பொழிகிற மழை ஆகாய கங்கையாகக் கருதப்படுகிறது. அதில் பெரும் பகுதி உறைபனியாகவே மலையின்கண் படிந்து நிலைத்துநிற்கிறது. சிறு பகுதி மலையிடுக்குகளில் வளைந்து வளைந்து ஓடி ஹரித்துவாரத்திற்குப் பக்கத்தில் மலைப்பிரதேசத்தை விட்டுச் சமவெளிக்கு வருகிறது. மலையின் உச்சியில் உறைந்து கிடக்கும் உறைபனி கோடை வெப்பத்தில் சிறிது சிறிதாக உருகிப் பெருக்கெடுத்து ஓடி வருகிறது. எனவே குளிர்காலம், வேனிற்காலம், மழைக்காலம் ஆகிய பருவங்கள் நிறைந்த வருஷ முழுவதிலும் கிட்டத்தட்ட ஒரே பாங்கில் ஹிமாசலத்தினின்று சமவெளிக்குக் கங்காநதி வந்து கொண்டேயிருக்கிறது. இப்புண்ணிய நதிக்கரையில் ஆங்காங்கு க்ஷேத்திரங்கள் பல அமைந்திருக்கின்றன. மக்களுக்கு இது யாண்டும் உணவூட்டி வருகிறது. உலகிலுள்ள நீர்ப்பெருக்குகளுள் கங்காநதி ஒன்றுதான் யாண்டும் கேடுபடாது இருந்து வருகிறது. சிவபெருமான் எங்ஙனம் கேடுஇலிஆக, அக்ஷயன் ஆக அமைந்திருக்கிறாரோ அதே பாங்கில் அவருடைய ஜடாபாரத்தினின்று வரும் கங்கா ஜலமும் காலமெல்லாம் கெட்டுப்போகாது இருந்து வருகிறது. இது வாச்சியார்த்தம். இனி லட்சியார்த்தமாக யோக தத்துவம் கங்காதரன் என்னும் சொல்லில் அடங்கியிருக்கிறது. புனிதம் வாய்ந்த யோகியினுடைய சரீரத்தில் ஏழு ஞான பூமிகள் ஏழு ஆதாரங்களாக அமைந்திருக்கின்றன. ஏழாவது ஞானபூமியாக விருப்பது சஹஸ்ராரம். எண்ணிறந்த இதழ்களையுடைய தாமரைப்பூ என இது பொருள் படுகிறது. இது உச்சந்தலையிலிருக்கிறது. யோகியினுடைய சரீரத்தின் கீழ்ப்பகுதியிலிருக்கும் ஆதாரம் மூலாதாரம் என்னும் பெயர் பெறுகிறது. யோகம் பூர்த்தியாகிறபொழுது இந்த மூலாதாரத்தில் குண்டலினி சக்தி உருவெடுத்து மேல்நோக்கிப் பாய்கிறது. அது ஒரு சர்ப்பத்தோடு சீர்தூக்கி இயம்பப்படுகிறது. சஹஸ்ராரத்தைக் குண்டலினி சக்தி எட்டுகிறபொழுது ஆங்கு அமிர்தம் உருவெடுக்கிறது. அது கீழே சொட்டுங்கால் அமிர்த தாரை என்னும் பெயர் அதற்கு வருகிறது. அங்ஙனம் சொட்டுகிற அமிர்தத்தை யோகி சிறிது அருந்துவானாகில் அவன் பரமானந்தப் பிராப்தி அடைகிறான். உணவு உண்ணாமலேயே அவனுடைய உடல் பேணப்பெற்று வருகிறது. இந்த யோக தத்துவத்துக்கு இலக்காகச் சிவனார் இலங்குவதால் அவருக்குக் கங்காதரன் என்னும் பெயர் வந்துள்ளது. எனவே கங்கைக்கு வாச்சியார்த்தம் மண்ணுலகில் உள்ள கங்காநதி; லட்சியார்த்தம் யோகியின் சஹஸ்ராரத்தினின்று சொட்டுகிற அமிர்த தாரையாகும். நீர்பூத்த வேணி என்னும் பதப்பிரயோகத்தில் இந்த இரண்டு

பொருள்களும் அமைந்துள்ளன. நிலவு எறிப்ப எனும் பதப்பிரயோகம் சந்திரசேகரன் எனப் பொருள்படுகிறது. சிவனுர் ஜடாபாரத்தில் தாங்கியிருக்கும் சந்திரன் மூன்றும் பிறையாக அமைந்திருக்கிறது. மாசுபடியாத தூய நிலையில் மூன்றும் பிறை அமைந்துள்ளது. இறையவனுக்குப் புறம்பாகப் பொருள் ஏதுமில்லை. பொருள் ஒன்றை மாசுபடுத்துவதற்கு அதற்குப் புறம்பாக வேறு ஒரு பொருள் இருந்தாக வேண்டும். இதற்குச் சான்று ஒன்று எடுத்துக் கொள்வோம். ஹிமாசலத்தினின்று கிளம்பி வரும் கங்காஜலத்தைச் சுத்த கங்கை என்று சொல்லுகிறோம். பசுவினிடத்திலிருந்து கறந்து எடுக்கப்படும் பாலானது சுத்தமான ஆவின் பால் எனப்படுகிறது. சுத்தமான கங்கையும், சுத்தமான ஆவின்பாலும் ஒன்றோடொன்று சேருகிறபொழுது அந்தச் சேர்க்கையின் விளைவாகக் கிடைக்கிற பால் சுத்தமானதாகாது. பாலுக்கு அன்னியமான பொருள் பாலுக்குள் வரக்கூடாது. கங்கையும் ஆவின்பாலும் சுத்தமானவைகள் என்னும் மேலாம் தரத்தை விளக்குகின்றன. பிறை சூடியாகவிருக்கிற சிவனுரை மாசுபடுத்துதற்கு வேறு பொருள் ஏதுமில்லாதிருப்பதால் பிறைசூடி என்னும் பெயரை அவர் பெறுகிருர். அவருடைய ஜடாபாரத்தில் மாசுபடியாத மூன்றும் பிறை மிளிர்ந்துகொண்டிருப்பதால் ஜடாபாரத்தில் நிலவு எறித்தல் என்னும் தத்துவம் இடம் பெறுகிறது.

அகிலாண்டத்துக்கும் ஆதாரமாயிருப்பது சிதாகாசம். அந்தச் சித் ஆகாசமே சித் அம்பரம் எனவும் பெயர் பெறுகிறது. சித் ஆகாசத்தில் அல்லது சித் அம்பரத்தில் ஆனந்தத் தாண்டவம் ஆடிக்கொண்டிருப்பவர் நடராஜ மூர்த்தி. மன்று ஆடும் என்னும் சொல்தொடரில் இக்கருத்து அடங்கியிருக்கிறது. கார்பூத்த கண்டன் என்னும் சொல்தொடரில் சிவனுர் நீலகண்டன் என்னும் கருத்து அடங்கியிருக்கிறது. அவர் தியாக மூர்த்தியாக இருப்பதற்கு அடையாளமாகவிருப்பது அவருடைய கார்பூத்த கண்டம் ஆகும். தியாகராஜன் என்பது சிவனுருக்கு அமைந்துள்ள நாமங்களுள் ஒன்று ஆகும். அவர் நீலகண்டனுயிருப்பது அவர் அனுஷ்டித்துவரும் தியாகத்துக்குச் சின்னமாகும். உலக வாழ்வு என்னும் பாற்கடலை நல்லவர்கள் கெட்டவர்களாகிய மக்கள் எல்லாரும் கடைந்தெடுத்துப் பயன்படுத்தி வருகின்றனர். அதன் விளைவாக அவர்களுக்குக் கல்வி, செல்வம், ஆபரணம், வாகனங்கள், தொழில் அபிவிருத்தி, தனப்பெருக்கு முதலியன வாய்க்கின்றன. இவையாவும் இவ்வுலகுக்கான சம்பத்துக்களாகின்றன. இவைகளில் பங்கு கொள்ளுதற்குச் சிவனுர் ஒரு பொழுதும் ஒருப்படுவதில்லை. அந்த அளவில் அவர் தியாக மூர்த்தி ஆகின்ருர். அதற்குமேல் மற்றொரு பாங்கில் அவருடைய தியாகம் உச்சநிலையடைகிறது. வாழ்ந்திருக்கும் உயிர்களனைத்தும் தூய நிலையிலிருக்கும் பஞ்சபூதங்களை அழுக்குப்படுத்தி வருகின்றன. அப்படி அழுக்குப் படிவது ஆலாலவிஷத்திற்கு ஒப்பாகும். அந்த நஞ்சுகளனைத்தையும் அவர் நல்ல பொருளாகத் திருத்தியமைப்பது நஞ்சு உண்பதற்கு நிகராகிறது. உயிர்களை ஓம்புதல் பொருட்டு அவ்வுயிர்கள் உண்டுபண்ணும் நச்சுக் காற்று, நச்சு நீர், நச்சு நிலம் ஆகியவைகளைத் திருத்தியமைப்பது அவருடைய அரிய செயலாகிறது. அக்கோட்பாடு ஆலால விஷத்தை அருந்தி உலகை உய்வித்தவன் எனப் பொருள்படுகிறது. சிவனுர் உலகப்பொருள் எதிலும் பங்குகொள்ளாதிருப்பதுடன் உலக நலனை முன்னிட்டு விஷத்தை அமிர்தமயமாக மாற்றுதல் என்னும் செயலை இடையருது இயற்றி வருகிருர். துறவி ஒருவன் இவ்வுலக சம்பந்தமான இன்பம் எதையும் நாடாது இருப்பது மட்டுமல்லாது உலக நன்மைக்காகத் துயரங்களனைத்தையும் தான் எடுத்துச் சமாளிப்பவனுகிருன். அத்தகையவனே தலைசிறந்த தியாகி ஆகிருன் என்னும் கோட்பாடு கார்பூத்த கண்டன் என்னும் தொடரில் அடங்கியிருக்கிறது.

இசை கற்ற ஒருவனே இசை வல்லுநனை நன்கு அறிந்து கொள்ளுகிருன். அதே பாங்கில் சிவசொருபமாகத் தன்னை முற்றிலும் திருத்தியமைப்பவனே சிவனுரை அறியவும் அவரோடு இணங்கி இருக்கவும் வல்லவனுகின்ருன். அத்தகைய பரிபாகம் ஆத்ம சாதகன் ஒருவனுக்கு வந்து அமையவேண்டும் என்னும் கருத்து இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது.

இயேசுவின் மலை உபேதச விளக்கம்

(சுவாமி பிரபவானந்தரின் கருத்தைத் தழுவியது)

15. பிறர்மனை விழைதல் பெருங்குற்றமாகும் என்று முன்னைய மேலோர்கள் மொழிந்திருக்கிறார்கள். நீங்கள் அதைக் கேட்டு அறிந்திருக்கிறீர்கள்.

அதை நான் முற்றும் ஆமோதிக்கின்றேன். நான் அதற்கு மேலும் உங்களுக்கு ஒன்று கூறுகின்றேன். பெண் ஒருத்தியை யாரொருவன் காமநுகர்ச்சியோடு கண் எடுத்துப் பார்க்கின்றானோ அவன் மனத்தகத்தில் அவளைப் புணர்ந்தவனாகின்றான். ஆகவே புணர்ந்த பாவம் அவனைச் சேர்ந்துவிடுகிறது.

உன் வலக்கண் உனக்குக் கேடு விளைவிக்கும் நிலையில் இருக்குமாயின் அதைக் களைந்தெடுத்து எறிந்துவிடு. உன் உடல் முழுவதும் துன்பத்திற்கு ஆளாவதைவிட ஓர் அவயவம் அழிந்துபட்டுப்போவது உனக்குப் பெரும் நஷ்டம் ஆகாது.

உன் வலக்கை உனக்குக் கேடு விளைவிக்கும் நிலையில் இருக்குமாயின் அதை வெட்டி உன் உடம்பிலிருந்து பிரித்தெடுத்து எறிந்துவிடு. உன் உடல் முழுவதும் துன்பத்திற்கு ஆளாவதைவிட ஓர் அவயவம் அழிந்துபட்டுப்போவது பெரும் நஷ்டம் ஆகாது.

மணந்துகொண்ட மனைவியைச் சட்டபூர்வமாக ஒருவன் விலக்கிவைத்துவிடலாம் என்று பலர் கருதுகின்றனர். அவர்களுக்கு நான் இயம்பவேண்டியது ஒன்று உள்ளது. கணவனும் மனைவியும் மணந்துகொண்ட பிறகு பிரிந்துவிடல் ஆகாது. ஆனால் விபச்சாரத்தால் மாது ஒருத்தி ஒழுக்கம் தவறுவாளாகில் அவளைப் பிரித்து வைக்கலாம். ஒழுக்கம் உடைய மாது ஒருத்தியை விலக்கி வைக்கக் கூடாது. அப்படி விலக்கி வைக்கும் கணவன் அவள் ஒழுக்கம் தவறிப்போவதற்குத் தூண்டுதல் செய்கின்றான். அவள் ஒழுக்கம் குன்றும் குற்றத்துக்கு அவன் பொறுப்பாளியாகின்றான். தக்க காரணத்துடன் விலக்கப்பட்ட மாது ஒருத்தியை மறுபடியும் மணந்துகொள்பவன் விபச்சாரத்தனத்தை வளர்ப்பவன் ஆகின்றான்.

விரதங்களுள் பெரிய விரதம் பிரம்மச்சரிய விரதம். மனதாலும் காயத்தாலும் பிரம்மச்சரியம் கடைப்பிடிக்கப்பட வேண்டும். காயத்தால் மட்டும் பிரம்மச்சரியம் கடைப்பிடித்து மனதில் காம நுகர்ச்சிக்கு இடம் கொடுப்பவர்கள் பிரம்மச்சரியத்தினின்று வழுவியவர்கள் ஆவார்கள் என்று இயேசுநாதர் பகர்கின்றார். காம நுகர்ச்சியிலிருந்து மனதை விலக்கி எடுத்தல் வேண்டும். மனதில் காம எண்ணங்கள் வராமல் தடுப்பவனே பூரண பிரம்மச்சரியம் கடைப்பிடிப்பவன் ஆகின்றான்.

இன்பத்தை இரண்டு வழிகளில் பெறலாம். இந்திரியங்கள் மூலம் சுகத்தைப் பெறுவது ஒரு முறை. இந்திரியங்களை அடக்குவதின் மூலம் சுகத்தைப் பெறுவது மற்றொரு முறை. இந்திரிய சுகங்களைவென்று பழகுவதின் மூலம்தான் உண்மையான இன்பம் கிட்டுகிறது என்று பெரியவர்கள் பகர்ந்திருக்கிறார்கள். இந்திரிய சுகத்துக்கு அப்பால் ஒன்றும் இல்லை என்று சிலர் பகர்கின்றனர். தற்கால இளைஞர்களுக்கு இந்திரிய சுகம்தான் விளங்குகிறது. எனவே இந்திரிய சுகத்துக்கு அப்பால் ஒன்றும் இல்லை என்ற கொள்கையை அவர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். மேலும் அவர்கள் பிறருக்குத் துன்பம் விளைவிக்காத முறையில் இந்திரிய சுகத்தை அனுபவிப்பதில் என்ன குற்றம் இருக்கிறது என்ற கேள்வியையும் எழுப்புகின்றனர். இளைஞர்களுக்கு இன்னும் வாழ்க்கை அனுபவம் ஏற்படாததால் இந்திரிய சுகத்தின்மீது கொண்டுள்ள ஆசையினால் ஏற்படும் துன்பங்கள் அவர்களுக்கு விளங்குவதில்லை. தாற்காலிகமாகக் கிடைக்கின்ற சிறிதளவு சுகத்தில் அவர்கள் நம்பிக்கை உடையவர்களாக இருக்கின்றார்கள். அத்தகையவர்களுக்கு இந்திரிய சுகத்தைப்பற்றிய ஆசை பொல்லாதது என்றும் அந்தச் சுகம் நீடித்தது அன்று என்றும் கூறினால் அவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அப்படிக் கூறுகின்றவர்கள் பேச்சிலும் அவர்களுக்கு நம்பிக்கை உண்டாகாது. அவர்களிடத்திலுள்ள கீழான இயல்பு இந்திரிய சுகத்தைத்தான் நம்புகிறது. இந்திரிய சுகத்திலுள்ள ஆசையை வெல்ல வேண்டும் என்ற கூற்றை அவர்களுடைய கீழான மனது ஏற்க மறுக்கிறது.

யாரையும் பாவிகளென்றோ கேடுடையவர்களென்றோ சொல்லக்கூடாது. அப்படிச் சொல்வதை நிறுத்திவிட்டுத் தெய்வம் எல்லாரிடத்திலும் வீற்றிருக்கின்றார் என்ற உண்மையை எடுத்துப் புகட்டவேண்டும். உள்ளத்

தில் உறைகின்ற தெய்வத்தை அறிந்து கொள்வதற்கு நம் மனதின் ஆற்றல்களையெல்லாம் பயன்படுத்தவேண்டும். அதற்காகப் பொறிகளின் வாயிலாகச் சிதறுண்டுபோய்க்கொண்டிருக்கும் மனோசக்திகளை ஒன்று திரட்டி உள்ளே இருக்கும் தெய்வத்தின்பால் திருப்ப வேண்டும். அப்படிச் செலுத்துவீர்களானால் உங்கள் உள்ளத்தில் பேரானந்தம் பெருகி வருவதைக் காணலாம். அங்ஙனம் செய்யாது பொறிகளின் வாயிலாக மனோ ஆற்றலைச் சிதறுண்டு போகும்படி செய்து உலகசுகத்தை அனுபவிப்பவர்கள் பேரின்பத்தை இழக்கின்றார்கள். இங்ஙனம் இளைஞர்களுக்கு எடுத்துப் புகட்டினால் அவர்களுள் சிலராவது மேலாம் வாழ்வு வாழ்வதற்கு விரும்புவார்கள்.

பிரம்மச்சரியம் என்றால் என்ன என்பது மக்களுக்கிடையே சரியாக எடுத்து விளக்கப் படவில்லை.பிரம்மச்சரியத்திற்கு உடன்பாடான விளக்கம் தராததால் எதிர்மறை முறையில் மக்கள் அதைப் புரிந்துகொண்டார்கள். செய் செய் என்று புகட்டுவதற்குப் பதிலாகச் செய்யாதே செய்யாதே என்று கூறுவது மக்களிடையே வெறுப்புணர்ச்சியை வளர்க்கிறது. பிரம்மச்சரியத்தைக் குறித்துமக்கள் பயப்படத் தக்க நிலையில் போதிக்கப்படுகிறது. உணர்ச்சிகளை அடக்குதல் பிரம்மச்சரியம் என்று புகட்டப்படுகிறது. உற்சாகமின்மையையும் கோழைத்தனத்தையும் வளர்ப்பது பிரம்மச்சரியம் ஆகாது. பிரம்மச்சரியம் வழுவுதல் மூலமாகச் சுதந்திரமாகவும் கேளிக்கையாகவும் தைரியமாகவும் வாழலாம் என்ற கருத்து மக்களிடையே இருந்து வருகிறது. இத்தகைய முரண்பாடான கருத்துக்கள் மக்களிடையே நிலவி வருவதால் பிரம்மச்சரியத்தைப் போற்றாது பிரம்மச்சரியம் வழுவுதலையே போற்றுகிறார்கள். இத்தகைய போதனைகளின் மூலம் மக்களுக்கு நன்மை ஏற்படுவதற்குப் பதிலாகத் தீமையே ஏற்பட்டிருக்கிறது. பிரம்மச்சரியத்திற்கும் ஆத்ம போதத்திற்கும் இடையில் உள்ள இணக்கத்தை ஆடவரும் மகளிரும் நன்கு அறிந்திருத்தல் வேண்டும். அவ்விரண்டுக்கும் இடையில் உள்ள இணக்கம் அவர்களுக்குத் தெளிவான முறையில் போதனை செய்யப்படாவிட்டால் அவர்கள் மனோசக்தியை இழந்துவிடுவார்கள். அப்படி அவர்களிடம் உள்ள சக்தி விரயமாகிவிட்டால் அவர்களிடத்து ஆத்மபோத எழுச்சி உண்டாகாது. ஆத்மபோதம் விழிப்படைந்தால்தான் அவர்கள் தாங்கள் யார் என்பதை உணர்வார்கள். பேராற்றலும் பேரறிவும் ஆத்மபோத விழிப்பால் அவர்களிடம் உண்டாகும். ஆத்மபோத விழிப்பு ஏற்படாவிட்டால் அவர்கள் வாழ்வு அனர்த்தமாய்ப் போய்விடும்.

சக்திகளை எல்லாம் அடக்கி வைப்பது பிரம்மச்சரியம் அன்று. தம்மிடத்திலுள்ள சக்திகளை எல்லாம் ஒன்று திரட்டி மேலான லட்சியத்துக்குப் பயன்படுத்துவதுதான் பிரம்மச்சரியமாகும். மனம் அலையும் தன்மை உடையது. உலக விஷயங்களில் மனம் அலைவது நின்று தெய்வச் சிந்தனையில் மனம் நிலை பெறுவதற்குப் பிரம்மச்சரியம் நமக்குத் துணைபுரிகிறது. பிரம்மச்சரியத்தின் மூலம் உடல் சக்தியும் மனோசக்தியும் ஆத்மசக்தியாக மாற்றப்படுகின்றன. பிரம்மச்சரியம் கடைப்பிடிப்பவனுக்கு ஆத்மஞானம் சுலபத்தில் விரைவில் உண்டாகிறது.

பிரம்மச்சரியம் கடைப்பிடிப்பதால் நாம் அனுபவிக்க வேண்டிய சுகங்களை எல்லாம் இழக்க வேண்டி வரும் என்று மக்கள் கருதுகின்றார்கள். ஆனால் உண்மை அது அன்று. பிரம்மச்சரியம் கடைப்பிடிப்பவர்கள் எவ்வித நன்மையையும் இழப்பதில்லை. பிரம்மச்சரியத்தின் மூலம் விந்து விரயமாவது தடுக்கப்பட்டு அது ஆத்ம சக்தியாக மாற்றப்படுகிறது. அப்பொழுது உள்ளத்தில் பேரானந்தம் ஊற்றெடுத்து வருகிறது. ஆத்ம சக்தி விழிப்படையும்போது உண்டாகும் ஆனந்தத்திற்கு மேலான ஆனந்தம் எதுவுமே இல்லை. அவ்வானந்தம் தெய்வத்தின்பால் நம்மைக் கொண்டு சேர்க்கிறது. பிரம்மச்சரியத்தின் மூலம் மனம் அடங்கப்பெற்றவனுடைய நிலை கீழ்வருமாறு பகவத்கீதையில் விளக்கப்பட்டிருக்கின்றது.

"அசைவற்ற நிறைகடலில் ஆறுகள் சென்று அடங்குவனபோல் எம்முனிவன்பால் ஆசைகள் அனைத்தும் சென்று ஒடுங்குகின்றனவோ அவனே சாந்தியடைகின்றான். ஆசையுள்ளவன் சாந்தியடையான்.

"எவன் ஆசைகளை அறவே அகற்றிப் பற்

றற்று அகங்காரம் மமகாரம் இன்றி வாழ்கின் ருனே அவன் சாந்தியடைகின்ருன்.''

உலக மக்கள் ஞானியினுடைய சாந்தியை அறிந்துகொள்ள முடியாது. உயிரற்ற பிணத்திடம் சாந்தி இருப்பது போன்று ஞானியினுடைய சாந்தி உணர்ச்சியற்ற ஜடநிலை உடையதாக இருக்கிறது என்று மக்கள் கருதுகின்றனர். அவர்கள் கருதுவதற்கு மாருக ஞானியினுடைய சாந்தி பேரின்பத்தை நல்குகிறது. உலகப் பொருள்களிடத்து ஏற்படுகின்ற திருப்தியை ஞானியிடம் உண்டாகின்ற திருப்தியோடு ஒப்பிடும்போது அது பொருளற்றதாகத் தென்படுகிறது. உலகப் பொருள்களிடத்தில் உண்டாகிற திருப்தி கண நேரத்தில் மறைந்துவிடுகிறது. ஞானியினிடத்தில் ஏற்படுகின்ற திருப்தி நிரந்தரமாக இருக்கின்றது. நிரந்தரமான இன்பத்தையும் அமைதியையும் பெற விரும்பினல் மனதை நாம் கடவுளிடம் திருப்பவேண்டும். மனதில் கடவுள் பற்று அதிகரிக்க அதிகரிக்க அதனிடத்தினின்று உலகப்பற்று அகன்றுவிடுகிறது. மனம் கடவுளை நோக்கிச் செல்லும்போது நம் உள்ளத்தில் மறைந்து கிடக்கும் நல்லியல்புகள் வெளிப்பட்டுச் செயல்படுகின்றன. வாழ்வு தூயதாக மாறி அமைகின்றது.

தெய்வத்துக்கென்றே தங்கள் வாழ்வை ஒப்படைத்த துறவிகள் நைஷ்டிக பிரம்மச்சாரிகளாக இருக்கவேண்டும். வாழ்வு முழுவதும் அவர்கள் பிரம்மச்சரியம் கடைப்பிடிக்க வேண்டும். இயேசுநாதர் துறவிகளுக்காக இவ்வுபதேசம் செய்திருக்கிருர். மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரணங்களால் அவர்கள் பிரம்மச்சரியம் கடைப்பிடிக்கவேண்டும் என்று வற்புறுத்துகின்ருர். தூய வாழ்வுக்கு வரும் ஒவ்வொரு தடையையும் தகர்த்தெறிந்து மனதிலுள்ள ஆசையையும் அறவே அகற்ற வேண்டும். தங்கள் உள்ளத்தை மயக்கும் உலகப் பொருள்களைத் துறந்துவிட வேண்டும். இந்தக் கடுமையான விரதம் துறவிகளுக்கு உரியதாகும். மற்றவர்கள் இதைப் பின்பற்றுவது கடினம். ஆகையால் பிரம்மச்சரியம் கடைப்பிடிப்பது பற்றி இயேசுநாதர் பகர்ந்துள்ளதாவது: ''எல்லாரும் இவ்விரதத்தைக் கடைப்பிடிக்க முடியாது. முடிந்தவர்கள் இதைப் பின்பற்றட்டும். சிலர் தாயின் வயிற்றினின்றே பேடுகளாகப் பிறக்கின்றனர்; சிலர் மக்களால் பேடுகளாக்கப்படுகின்றனர்; இன்னும் சிலர் பரலோகப் பிராப்தியின் பொருட்டுத் தாமே பேடுகளாகின்றனர். இதை அறிந்துகொள்ள வல்லவன் அங்ஙனம் செய்யட்டும்.''

காம நுகர்ச்சி மனதில் இருக்கிறது. மன அடக்கத்தின் மூலம் அதை வெல்ல வேண்டும். காம உணர்ச்சியை அடக்கி வைப்பதன் மூலம் அதை வெல்ல முடியாது. காம உணர்ச்சியைத் தெய்வீக உணர்ச்சியாக மாற்ற வேண்டும். அதுதான் சரியான மனவடக்கம் ஆகிறது. காம சம்பந்தமான எண்ணங்களுக்கு மனதில் இடம் தருவது மன அடக்கம் ஆகாது. தண்டனைக்குப் பயந்து பிரம்மச்சரியம் கடைப்பிடிப்பது மனதைத் தூய்மைப்படுத்தாது. அது சரீரத்தைப் பலஹீனப் படுத்தும். கடவுள் நாட்டத்தில் மனம் தீவிரமாகச் செலுத்தப் படும்பொழுதுதான் மன அடக்கம் உண்டாகிறது. உலக சுகம் அற்பமானதென்றும், அது போலியானதென்றும் உணரும்பொழுது தான் அதை விடுவது சுலபமாகிறது. கடவுள் இன்பம் அனுபவித்தவர்களுக்கு உலக இன்பம் இன்பமாகத் தோன்றுவதில்லை. ''கற்கண்டு கட்டி சுவைத்தவனுக்குக் கருப்பட்டிக்கட்டி சுவைக்காது'' என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்ந்துள்ளார்.

மனதைத் தெய்வத்திடம் ஒப்படைத்தவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் கனவிலும் சிற்றின்ப ஆசைக்கு வசப்படாதிருக்கின்ருர்கள். பேருணர்வுக்கு வசப்பட்டவர்களுடைய உள்ளம் காம நுகர்ச்சிக்கு இடம் தருவதில்லை. ஆரம்பதசையில் உள்ள துறவிகள் பிரம்மச்சரியத்தை மிகக் கண்டிப்பாக அனுஷ்டிக்க வேண்டும். உயிரினும் பிரம்மச்சரியம் மேலானது என்பதை அவர்கள் அறிந்துகொள்ள வேண்டும். பிரம்மச்சரியம் அனுஷ்டிக்கும்பொழுது தான் பிரம்மஞானம் உண்டாகிறது. பெண்கள் அனைவரையும் ஆண்கள் பராசக்தி சொரூபங்களாகவும், ஆண்கள் அனைவரையும் பெண்கள் சிவ சொரூபங்களாகவும் கண்டு இணக்கம் வைக்க வேண்டும். இக்கருத்துக்களை இயேசுநாதர் இவ்வுபதேசத்தில் விளக்கியுள்ளார்.

நிலையாமையும் நிலைபேறும்

சத்பொருளை அறிந்தவர்கள் சான்ருேர் களாகின்ருர்கள். சான்ருேர்கள் உண்மையை யறிந்து அதில் நிலை பெற்றவர்களாக இருக் கின்ருர்கள். சான்ருேர்களைச் சார்ந்து அவர் களுக்குப் பணிவிடை செய்வது நல்ல சாதனம் ஆகிறது. யார் ஒருவருக்குப் பன்னிரண்டு ஆண்டுகள் மனப்பூர்வமாகப் பணிவிடை செய் கின்ருேமோ அவருடைய பண்புகள் பணி விடை செய்யும் நமக்கு உரியன ஆகின்றன. உயர்ந்த பண்புகள் எளிதில் நம் மனதில் உறுதி பெறுவதில்லை. சில உண்மைகளைத் திரும்பத் திரும்ப நம் மனதுக்குப் புகட்டிக் கொண்டே இருக்கவேண்டும். மனம் திருந்தி யமையும் வரையில் அதற்கு உபதேசம் செய் வதை நிறுத்தி விடக்கூடாது. சிறு குழந்தை களை ஒரு செயலைச் செய்யக்கூடாது என்று சொன்னுல் உடனே அவர்கள் நிறுத்திவிட மாட்டார்கள். நாம் எதைச் செய்யக்கூடாது என்று சொல்லுகின்ருேமோ அதைக் குழந்தை கள் செய்வதை நிறுத்தும் வரையில் நாம் அவர் களுக்குப் புகட்டிக்கொண்டே இருக்கவேண் டும். அதுபோன்று நம் மனதுக்கும் அது திருந்தியமைகின்ற வரையிலும் உபதேசம் செய்து கொண்டே இருக்கவேண்டும். பல ஜன்மங்களுக்கு மனதுக்கு உபதேசம் செய்து கொண்டே இருக்கவேண்டும்.

தேகம் நிலையானது அன்று என்ற உண்மை எல்லார்க்கும் தெரியும். ஆனல் அதன் மீது உள்ள பற்று நமக்கு நீங்குவதில்லை. தேகம் நிலைத்ததாக எண்ணி அதன்மீது பற்று வைத் திருக்கின்றனர். இந்தத் தவறைச் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை செய்துகொண்டு இருக்கிருர்கள். பொதுவாக மக்கள் தவறு செய்து விடுகிருர்கள். தவறு செய்ததற்குக் காரணம் என்ன என்று கேட்டால் தெரியாமல் செய்துவிட்டதாகக் கூறுவார்கள். பொதுப் படையாக இது எல்லாரும் கூறுகின்ற பதிலா கும். தவறு என்று தெரியாததினுல் அதைச் செய்துவிட்டதாகக் கூறுகிறவர்கள் தங்களுக் குத் தெரிந்த ஒன்றைச் செயலுக்குக்கொண்டு வருவதற்கு ஏன் தயங்கவேண்டும்? தேகம் நிலைக்காது என்ற உண்மை யாவர்க்கும் தெரிந் ததே. அவ்வுண்மைக்கு ஏற்ப நாம் வாழ்ந்து வர வேண்டும். தேகம் நிலைக்காது என்ற உண்மையை யாருக்கும் புகட்டவேண்டிய அவ சியம் இல்லை. ஆறிலும் சாவு நூறிலும் சாவு என்பதை எல்லாரும் அறிந்திருக்கின்ருர்கள். ஆனல் நாம் தேகத்தைப் பாதுகாப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்து வருகின்ருேம். உயிருக்கு ஆபத்து என்ருல் எதையும் செய்ய ஆயத்தமாக இருக்கின்ருேம். மரணம் வரு கின்றதென்ருல் நம்மையறியாது பயம் வந்து விடுகிறது. தேகம் நிலைத்து இருக்காது என்ற உண்மை மரணம் வரும்போது எங்கேயோ போய்விடுகிறது. தேகத்தைக் காப்பாற்றுவதற் காக வெகு சிரமம் எடுத்துக்கொள்கின்ருேம்.

தேகம் நிலைத்திருக்கும் என்று எண்ணியே செயல் புரிந்துகொண்டிருக்கின்ருேம். தேகத் தின் நிலையாமை குறித்து ‘இன்றைக்கு இருப் பாரை நாளைக்கு இருப்பர் என்று எண்ணவோ திடமில்லை’ என்று தாயுமானவர் பகர்கின்ருர். நாம் இளமையில் மோகம் கொண்டிருக்கின் ருேம். அந்த இளமை நிலைக்காது என்பதை “நரை திரை வருமென்று நல்லறிவாளர் குழவி யிடத்தே துறந்தார்” என்று நாலடியார் பேசு கிறது. உடலுக்கு நரை திரை வரும் என்ப தும், இளமை நிலைத்து இருக்காது என்பதும் நாம் யாவரும் அறிந்த விஷயங்களேயாகும். எனினும் நாம் இளமையில் கொண்டிருக்கும் மோகம்தான் என்னே!

பண்பைப் பாதுகாக்க வேண்டும். பலர் உடலைப் பாதுகாப்பதற்காகப் பண்பை இழக் கத் தயாராக இருக்கிருர்கள். ஒருவன் திருடி ஜீவனம் பண்ணுகின்ருன். அவனைத் திருடு வதற்குரிய காரணம் கேட்டால் உடலைப் பாது காப்பதற்காகத் திருடியதாகக் கூறுகிருன். உணவு கொடுத்து உடலைப் பாதுகாக்கின்ருேம். அவ்வுணவைப் பெறுவதற்காகச் சிலர் திருட வும் செய்கின்றனர். திருடுவதன் மூலம் உள்ளத் தின் பண்பு கெட்டுப்போய்விடுகிறது. உள்ளம் கெட்டுப் போவதைப்பற்றி அவர்கள் கவலைப் படுவதில்லை. அழிந்து போகும் உடலைக் காப்பதற்குக் கவலைப்படுகின்ருர்கள். உள் ளத்தைப் பாதுகாக்கின்ற செயலைச் செய்ய

வேண்டும் என்ற உண்மையை உடல் நிலையாது என்ற உண்மை நமக்குப் புகட்ட வேண்டும். “உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே” என்று திருமூலர் பகர்கிறார். அவர் உடல் நிலையாமையை உணர்ந்து தெய்விக வாழ்வில் நிலைபெற்றவராக இருந்தார். அத்தகைய பெரியாருக்கு மனப்பூர்வமாகப் பணிவிடை செய்யும்போது அவருடைய பேரியல்பு நமக்கும் வருகிறது.

விவேகானந்த சுவாமிகள் தேகம் நிலைத்தது அன்று என்ற நினைவில் வாழ்ந்திருந்தார். அவர் பரிவ்ராஜகராக இந்தியா முழுவதையும் சுற்றிப் பார்க்கத் திட்டம் போட்டார். கையில் பணத்தைத் தொடுவதில்லை என்றும், உணவைத் தேடித் தாம் போவதில்லை என்றும், தம்மைத் தேடிவரும் உணவைத்தான் உண்பதாகவும் அப்பொழுது விரதம் எடுத்துக்கொண்டார். விரதம் எடுத்துக்கொண்டபடி நடந்துகொண்டார். சில சமயம் உணவு கிடைக்காவிட்டால் பட்டினி கிடப்பதற்கும் ஆயத்தமாக இருந்தார். அவர் ஒரு முறை வனத்துக்குள் ஒரு பாறையின் மேல் உட்கார்ந்து இருந்தபோது வெகு தூரத்தில் ஒரு புலி வந்ததைப் பார்த்தார். அழிந்துபோகும் இவ்வுடல் இப்புலிக்கு உணவானால் ஓர் உயிர்க்கு அது பயன்பட்டதாக ஆகும் என்று எண்ணி மகிழ்ச்சியடைந்தார். ஆனால் அப்புலி அவரிடம் வராது வேறு திசையை நோக்கிப் போய்விட்டது. மற்றும் ஒரு முறை கழனியில் உலாவிக்கொண்டிருந்த போது போலிகாளை ஒன்று அவரைத் தாக்க வந்தது. அவர் அசையாது அக்காளை தம் சரிரத்தைத் தூக்கி விசினால் சரிரம் எவ்வளவு தூரம் மேலே போகும் என்பதை அளந்தெடுக்கத் திட்டம் போட்டு நின்று கொண்டிருந்தார். ஆனால் அக்காளை எட்ட நின்று அவரைச் சிறிது நேரம் பார்த்துவிட்டுப் போய்விட்டது. மேற்கூறிய நிகழ்ச்சிகளிலிருந்து சுவாமி விவேகானந்தர் தேகம் அழிந்து போகும் என்ற உண்மையை உணர்ந்திருந்தார் என்பது வெளியாகிறது.

இனி ஹரிச்சந்திரனை எடுத்துக்கொள்வோம். சத்தியத்திலிருந்து அவன் தவறவேயில்லை. நாட்டையும் மனைவி மக்களையும் அவன் இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. தன்னையே விலைக்கு விற்க வேண்டிய சூழ்நிலை உண்டாயிற்று. நாடு நகரங்களையும் மனைவி மக்களையும் தன்னையும் இழக்க நேரிட்ட போதிலும் சத்தியத்தை இழப்பதற்கு ஹரிச்சந்திரன் ஒருப்படவில்லை. எதை இழந்தால் எல்லாவற்றையும் இழந்ததாகுமோ அதை இழக்க விரும்பவில்லை. எவற்றை இழந்தால் மீண்டும் அவற்றைப் பெற்றுவிடலாமோ அவற்றை இழக்க ஆயத்தமாக இருந்தான். சோதனையில் வெற்றிபெற்ற ஹரிச்சந்திரன் இழந்தவைகளை எல்லாம் இறுதியில் மீண்டும்பெற்றான். தேகம் நிலைக்காது என்ற உண்மையை ஹரிச்சந்திரன் அறிந்து நடந்துகொண்டான்.

நசிகேதன் என்னும் சிறுவன் எமனிடமிருந்து ஆத்ம ஞானத்தைப் பெறவிரும்பினான். எமன் ஆத்ம ஞானத்தைத் தவிர மற்ற எல்லாச் சம்பத்துக்களையும் தருவதாகக்கூறினான். ஆத்ம ஞானந்தான் நிலைத்ததாகும்; மற்றவைகளெல்லாம் அழிந்துபட்டுப்போம். நிலையில்லாத பொருள்களை ஏற்கமறுத்து நிரந்தரமான ஆத்ம ஞானம் ஒன்றையே நசிகேதன் விரும்பினான்.

இங்ஙனம் யாரோ சிலர் தேகம் நிலைத்து இருக்காது என்று அறிந்து அதற்கேற்ப ஒழுகி வந்துள்ளனர். நமக்குத் தேகம் நிலைத்திருக்காது என்ற அறிவு மட்டும் இருக்கிறது. அவ்வறிவுக்கேற்ப நடந்துகொள்ளும் திறன் நமக்கு இல்லை. “தேகம் நீங்குமென என்னிலோ நெஞ்சம் துடித்து அயர்வேன்” என்று தாயுமானவர் பகர்கிறார். தெரிந்ததை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு நாம் தயங்குகின்றோம்.

சான்றோர்கள் தங்கள் வாழ்க்கையின் மூலம் தேகாத்ம புத்தியை விட்டு விலகி மௌனமாக இருப்பதைக் காட்டித் தந்திருக்கிறார்கள். பாரமார்த்திகப் பெருநிலையில் மூழ்கி இருக்கும் உபாயத்தை அவர்கள் அருளி இருக்கின்றார்கள். “காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே” என்ற வாக்கியத்தைப் பார்த்ததும் பட்டினத்தடிகள் துறவு வாழ்க்கையை மேற்கொண்டார். உலகப்பற்றை ஒழித்து வாழ்வது எப்படி என்பதைப் பட்டினத்தடிகள் வாழ்ந்து காட்டியிருக்கிறார்.

உலகத்தைவிட்டு நீங்குவதாலும் உடலை

விட்டு நீங்குவதாலும் நமக்கு ஒரு குறையும் வந்துவிடாது. அவற்றை விட்டு நீங்கும் பொழுது இன்பமே நமக்கு உரியதாகிறது. இவ்வுண்மை நாள்தோறும் நமக்குப் புகட்டப் படுகிறது. கனவற்ற ஆழ்ந்த உறக்கத்தில் உலகைவிட்டும் உடலைவிட்டும் பிரிந்துவிடுகின்றோம். அப்பொழுது நாம் உலகைப்பற்றியோ உடலைப்பற்றியோ நினைப்பதில்லை. விழித்திருக்கும் வேளையில் உடலுக்கு வசதிகள் பல வேண்டியிருக்கின்றன. புழுக்கத்திலிருந்தும் குளிரிலிருந்தும் உடலைப் பாதுகாக்கின்றோம். கொசுக்கடியைக் குறித்து வெகுவாகப் பிரலாபிக்கின்றோம். தூங்கிவிட்டால் புழுக்கமும் இல்லை; குளிரும் இல்லை; கொசுக்கடியைப் பற்றிய கவலையும் இல்லை. இராமனுக்கு அரண்மனை வாசமும் ஆரண்ய வாசமும் சமமாகத் தென்பட்டன. ஆழ்ந்து உறங்குகின்ற நிலையில் நாமும் அந்தச் சமநிலைக்குப் போய் விடுகின்றோம். தூங்கிக்கொண்டிருக்கின்ற நம் சரீரம் மெத்தையிலிருந்தாலும் கட்டாந்தரையிலிருந்தாலும் ஒன்றே. புழுக்கமான அறையில் படுத்து உறங்குகின்றவனுக்கு மின் விசிறி சுழல வேண்டிய அவசியம் இல்லை. கொசு நிறைந்த இடத்தில் படுத்து உறங்கிவிட்டவனுக்குக் கொசு வலையும் தேவையில்லை. கொசுக்கடியைப்பற்றி அவன் கவலைப்படுவதும் இல்லை. ஆழ்ந்த உறக்கம் கூடிவிட்டால் உடலிலுள்ள நோயும் தெரிவதில்லை. ஆழ்ந்த உறக்கத்தில் அனைவரும் ஆனந்தத்தில் இருக்கின்றார்கள். உலகத்தையும் உடலையும் மறந்திருந்தால் பேரானந்தம் உண்டாகிறது என்ற உண்மையை ஆழ்ந்த உறக்கத்தை இறைவன் நமக்கு அருளி நாள்தோறும் புகட்டி வருகின்றார். சான்றோர்கள் தங்கள் வாழ்க்கையின் மூலம் பேரானந்தநிலை எது என்பதைப் புகட்டு கின்றார்கள். சான்றோர்களைச் சார்ந்திருந்து அவர்களுக்குப் பணிவிடை பண்ணுகின்றவர்களுக்குத் தேகாத்ம புத்தி நீங்கி வருகின்றது. தேகத்தைவிட்டு விலகி இருக்கவும் அவர்கள் கற்றுக்கொள்கின்றார்கள். மற்றவர்களுக்கு இவ்வுண்மை விளங்குவதில்லை. சிலருக்கு அறிவளவில் இவ்வுண்மை விளங்குகிறது. அனுபவத்துக்கு வருமிடத்து அவர்கள் இவ்வுண்மையைக் கடைப்பிடிக்க முடிவதில்லை.

சான்றோர்கள் உண்மையை அறிந்து அதன் படி ஒழுகுகின்றார்கள். நூலறிவு மட்டும் உடையவர்கள் உண்மையை அறிகின்றார்கள் ; ஆனால் உண்மைக்கு ஒப்ப ஒழுகத் திறனற்றவர்களாக இருக்கின்றார்கள். உண்மையை அறிந்து அறிந்தபடி ஒழுகுவதற்குப் பண்பட்டவர்களுக்கே சாத்தியம். பண்பாடு அடையாத மனதைக் கல்லாதமனம் என்று தாயுமானவர் குறிப்பிடுகின்றார். உண்மையைப் பழக்கத்திற்குக் கொண்டு வருவதற்குப் பண்படாத மனது தடையாக இருக்கின்றது. பண்பட்ட அல்லது கற்ற மனது தெய்வச் சிந்தனை செய்கிறது. கல்லாத மனது தெய்வச் சிந்தனை செய்ய மறுக்கிறது. உலக விஷயங்களிலிருந்து விட்டு விலகித் தெய்வத்தைப்பற்றிப் பிடிப்பதற்குக் கல்லாத மனதுக்குச் சாத்தியமாவதில்லை.

நாம் எங்குச்சென்றாலும் நம் மனதை அங்கு எடுத்துச்செல்லவேண்டும். கடைசிக்காலத்தில் குடும்பத் தொல்லைகளை விட்டு விலகி இருக்கக் கருதிச் சிலர் காசிக்குச் செல்கின்றார்கள். அவர்கள் சரீரம் காசியில் இருந்தாலும் அவர்களுடைய மனம் குடும்பத்தைப்பற்றி நினைத்துக் கொண்டிருக்கும். சிலர் க்ஷேத்திர யாத்திரை செல்வார்கள். புண்ணிய க்ஷேத்திரங்களில் அவர்கள் உடல் உலாவிக்கொண்டிருக்கையில் அவர்களுடைய மனம் குடும்ப விவகாரங்களில் உழன்றுகொண்டிருக்கும். குடும்பப் பற்றை அவர்கள் விட்டுவிட முயன்றாலும் குடும்பப் பற்று அவர்களை விடாது பிடித்துக்கொள்ளுகிறது. ஆறு ஒன்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தது. நட்டாற்றில் கம்பளி மூட்டை ஒன்று மிதந்து போவது கரையில் நின்றவனுக்குத் தென்பட்டது. அதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நினைத்து ஆற்று நீரில் குதித்து நீந்திச் சென்றான். ஆற்றில் நீந்திப்போய் அதைக் கையால் பற்றினான். கையால் பற்றின பிறகுதான் அது கரடி என்பது அவனுக்குத் தெரிந்தது. கரடி அவனைப் பற்றிக்கொண்டது. கரடியின் பிடியிலிருந்து விலகுவதற்குப் போராடினான். கரையிலிருந்த நண்பன் அவன் சிரமப்படுவதைப் பார்த்தான். ‘கம்பளி மூட்டைக்காகச் சிரமப் படவேண்டாம். அதை விட்டு விட்டு வந்து விடு’ எனக் கூறினான். அப்போது அவன்

கூறியதாவது: "நான் அதை விட்டு விட்டு வருவதற்குத்தான் முயலுகின்றேன். ஆனால் அது என்னை விடாது பிடித்திழுத்துக்கொண் டிருக்கிறது." பண்படாத மனம் படைத்தவர் நிலை இத்தகையதாக இருக்கிறது. கல்லாத மனம் படைத்தவர் நிலை இத்தகையதாக இருக்கிறது. கல்லாத மனம் படைத்தவர்கள் உலகப் பற்றை விட்டுவிட முயன்றாலும் உலகப் பற்று அவர்களை விடுவதில்லை. உலக நினைவை மறந்து தெய்வச் சிந்தனை பண்ணுவதற்குத் தியானத்திலமர்ந்தால் அப்பொழுதுதான் உலக எண்ணங்கள் படலம் படலமாக உள்ளத்தில் இருந்து தோன்றிவர ஆரம்பிக் கும். கல்லாத அல்லது பண்படாத மனம் படைத்தவர்களுடைய நிலை இத்தகையது. கற்ற அல்லது பண்பட்ட மனம் படைத்தவர் கள் நிலையை "எத் தொழிலைச் செய்தாலும் ஏதவஸ்தைப் பட்டாலும் முத்தர் மனம் இருக் கும் மோனத்தே" என்று பெரியவர் ஒருவர் விளக்கியிருக்கிறார். பூஜை செய்வதற்கும் தியா னம் செய்வதற்கும் நேரம் கிடைப்பதில்லை என்று பலர் கூறுகின்றனர். இவ்வுல கத்திற்கு வந்திருப்பது மனதைத் திருத்தி யமைப்பதற்கு என்பது அவர்களுக்கு விளங்குவ தில்லை. மனதைத் திருத்தியமைப்பதற்குத்தான் இவ்வுலகுக்கு வந்திருக்கிறோம் என்பதை உணர்ந்துவிட்டால் ஜபம் தியானம் செய்வ தற்கு நேரம் இல்லை என்று சொல்லமாட்டோம். கல்வியில் கருத்துச் செலுத்திப் படிக்காத மாணுக்கர்கள் படிப்பதற்கு நேரம் இல்லை என்று சொல்வார்கள். பொழுதுபோக்கிக் கொண் டிருப்பதற்கு இடையில் படிப்பதற்கு நேரம் இல்லை என்று சொல்வது அவர்கள் இயல்பு. படிப்பில் கருத்துடைய மாணுக்கர்கள் படிப்ப தற்கு நேரமில்லை என்று சொல்லமாட்டார்கள். அவர்களைப் போன்று மனதைத் திருத்தி அமைக்க வந்திருக்கிறோம் என்பதை உணர்ப வர்கள் ஜபம் தியானம் செய்ய நேரம் இல்லை என்று சொல்லமாட்டார்கள். நாம் இவ்வுல கத்திற்கு ஜபம் தியானம் செய்வதற்குத் தான் வந்திருக்கிறோம். ஜபம் தியானம் செய்ய நேரம் இல்லை என்றால் வந்த வேலையைப் புறக்கணித்ததாக ஆகிறது. பண்பாடடைந்த மனது உலகக் காரியங்களைச் செய்துகொண் டிருக்கும்போதும் கடவுள் சிந்தனை பண்ணிக் கொண்டிருக்கிறது. பண்பட்ட மனம் படைத்த சான்றோர்கள்யாண்டும் மனதைத் தெய்வத்தின் பால் வைத்துச் சாந்த மூர்த்திகளாக இருக்கின் றார்கள். தேன் ஈ மதுவை மட்டும் அருந்துவது போன்று அவர்களுடைய உள்ளம் கடவுள் சிந்தனை மட்டும் செய்து வருகிறது. அத் தகையவர்களுக்கு நாம் பணிவிடைபண்ணினால் நம் மனதும் உலக விஷயங்களை விட்டு விலகி ஈசுவர சிந்தனை பண்ண ஆரம்பித்து விடும். பண்படாத மனதைப்பற்றித் தாயுமான வர் பகரும்பொழுது "கல்லாத மனமோ ஒடுங்கி உபரதி பெறக் காண இலை" என்று பகர்கின்றார். மேலும் நம் மனதில் எழும் போராட்டத்தை "கண்மூடி ஒரு கணம்இருக்க என்றால் பாழ்த்த கர்மங்கள் போராடுதே" என்று தாயுமானவர் பகர்கிறார். அருணகிரி யாரும் "சரணகமல ஆலயத்தை அரை நிமிஷ நேரமட்டில் தவமுறை தியானம் வைக்க அறி யாத" என்று தம் மனதின் பாங்கை வெளி யிடுகின்றார். பண்படாத மனது ஐந்து நிமிஷங் களாவது ஈசனுடைய சந்நிதானத்தில் ஒடுங்கு கிறதா என்றால் ஒடுங்குவதில்லை. கல்லாத மனதுக்கு அறிவு புகட்டிக் கொண்டே இருக்க வேண்டும். அப்படி அறிவு புகட்டுவதற்கு இடையில் அது கீழ்மையில் போய்க்கொண்டே இருக்கும். அத்தகைய மனம் படைத்தவர்கள் கரதல பிச்சையெடுத்துத் துறவு வாழ்க்கையை மேற்கொள்ள இயலாது. உலகத்தை விட்டு விலகாத மனதைச் சத் கைங்கரியத்தில் ஈடு படுத்தாவிட்டால் வேண்டாத சிந்தனை பண் ணிக் கொண்டிருக்கும்.

அகத்துறவு வாய்க்கப்பெறாதவர்கள் அகத் துறவு வாய்ந்த பெரியோர்களுக்கு அல்லது அருள் இயக்கத்துக்குப் பணிவிடை செய்ய வேண்டும். அகப்பட்டதை உண்டு கண்மூடி மௌனியாக இருப்பதற்கு ஏற்ற மனநிலை அமையாதவர்கள் சான்றோர்களுக்கு அல்லது அருள் இயக்கத்துக்குக் கைங்கரியம் பண்ண வேண்டும். இமயமலையில் சத்திரங்களும், சப் பாத்தியும் இலவசமாகக் கிடைக்கின்றன. ஆங்குக் கிடைக்கும் சப்பாத்தியை வாங்கிச் சாப்பிட்டுக்கொண்டு ஜபம் தியானம் பண்ணச் சிலர் விரும்புகின்றார்கள். முறைதவறிச் சம்

பாதித்த பொருளைப் பயன்படுத்தி ஆங்குச் சத்திரங்கள் கட்டி வைத்திருக்கிறார்கள். தாங்கள் செய்த பாவங்களைப் போக்க அன்னதானம் என்னும் தர்மகாரியம் செய்து வருகிறார்கள். ஆங்கு அவ்வுணவை வாங்கிப் புசிக்கின்றவர்கள் அவ்வுணவுக்கு ஏற்பாடு செய்தவரின் பாபத்தையும் ஏற்று ஜீரணம் செய்தாகவேண்டும். அவ்வுணவை ஏற்றுக்கொண்டவர்கள் தாங்கள் செய்கின்ற ஜபத்தின் பெரும்பகுதியை அவ்வுணவு கொடுத்தவர்களுக்காகச் செய்தாக வேண்டும். அவர்களுக்குக் கொடுத்தது போக மீதி உள்ள ஜபம்தான் அவர்களுக்குப் பயன்கொடுக்கும். எனவே ஆங்குச் சென்று பல மணிநேரம் ஜபம் செய்வதை விடச் சமுதாயத்துக்குப் பயன்படும் சத்கைங்கரியங்களைச் செய்துகொண்டு சில மணிநேரம் ஜபம் செய்தால் போதும். ஆங்குப் பல மணிநேரம் ஜபம் செய்து பெறும் பலனைவிட அதிகப் பலன் பெற்றுவிடலாம். சமுதாயத்துக்குத் தொண்டு புரிகின்றபோது நம் உடல் வாழ்க்கைக்காக நாம் யாரையும் சார்ந்திருப்பதில்லை. மனதைப் பிறர்க்கு நலன் செய்கிற தொண்டில் ஈடுபடுத்துவதால் மனம் நல்லியல்பு உடையதாக மாறுகிறது.

யமம் நியமம் முதலிய ஒழுக்கங்களில் நிலை நின்று பெருந்தவம் செய்கின்ற மனவலிவு உடையவர்களுக்குப் பணிவிடைசெய்வது நல்ல சாதனையாகும். அத்தகையவர்கள் அந்தணர்கள் எனப்படுகிறார்கள். அவர்கள் முற்றும் இறைவனையே சார்ந்திருக்கிறார்கள். அவர்களுடைய அந்தக்கரணங்களும் புறக்கரணங்களும் அடங்கி இருக்கின்றன. அந்தக் கரணத்தையும் புறக்கரணங்களையும் அடக்குவது அவர்களுக்கு இயல்பாக அமைந்திருக்கிறது. மீன் நீருக்குள் வாழ்வதற்கு எவ்விதச் சிரமமும் எடுத்துக் கொள்வதில்லை. அங்ஙனம் சான்றோர்கள் ஒழுக்கத்தில் நிலைபெற்று இருக்கின்றார்கள். மனம் அடங்கினவர்களுக்குப் புறக்கரணங்களும் தாமாக அடங்கிவிடுகின்றன. ஆன்று அவிந்து அடங்கிய சான்றோர்கள் என்று அவர்களைக் கூறலாம். அவர்கள் உலகத்தில் வாழ்ந்து வந்தாலும் அவர்கள் மனது யாண்டும்தெய்வச்சிந்தனைசெய்து கொண்டிருக்கிறது. அவர்கள்தாம் வீரர்களுக்கெல்லாம் பெரிய வீரர்களாகிறார்கள். மனதைக் கீழ்மையின்கண் போகவொட்டாது தடுத்து நிறுத்தும் ஆற்றல் அவர்களுக்குண்டு. அறிவைக்கொண்டு மனதைக் கீழ்மையின்கண் போகாது தடுக்க முடியாது. பேருணர்வையும் தியாக புத்தியையும் கொண்டுதான் மனதைக் கீழ்மையின்கண் போகாது தடுத்து நிறுத்த முடியும். மனதின்கண் நல்லியல்பை வளர்த்து வருகின்றபொழுது கீழ்மையின்கண் செல்லாத உறுதிப்பாடு அதற்கு வருகின்றது. தங்கள் உள்ளத்தை அவ்வுறுதிப்பாடே வடிவெடுத்ததாகச் செய்தவர்கள் சான்றோர்கள் ஆகின்றார்கள்.

சான்றோர்களுக்குத் தொண்டு புரிவதும் சான்றோர்கள் ஏற்படுத்திய பேரியக்கத்துக்குத் தொண்டுபுரிவதும் ஒன்றேயாம். ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரு தெய்வீக புருஷராக இருந்தார். தேவியின் காட்சி பெற்றுத் தேவியின் அருளைப் பூரணமாகப் பெற்றிருந்தார். அல்லும் பகலும் அவருடைய உள்ளம் தெய்வச் சிந்தனையிலேயே மூழ்கியிருந்தது. அவர் இப்பொழுது இல்லை. ஆனால் அவருடைய அருள் இயக்கம் இன்று இருக்கிறது. அவருடைய பெயரால் அமைந்திருக்கும் அருள் இயக்கத்துக்குத் தொண்டு புரிவது அவருக்குத் தொண்டு புரிவதற்கு நிகராகும். அவர் தாம் வழிபட்ட தேவியை நோக்கி "தாயே! எனக்குத் தூய்மையும் ஞானமும் படைத்த இளைஞர்கள் சிஷ்யர்களாக வந்து வாய்க்கவேண்டும். அவர்கள் மூலம் நான் பெற்ற ஞானம் உலகுக்கு எடுத்து வழங்கப்பட வேண்டும்" என்று பிரார்த்தித்துக் கொண்டார். தேவியும் அவருடைய பிரார்த்தனையை நிறைவேற்றிவைத்தாள். சுவாமி விவேகானந்தர் போன்றவர்கள் அவருக்குச் சிஷ்யர்களாக வந்து வாய்த்தார்கள். சுவாமி விவேகானந்தருக்கு அவர் நிர்விகற்ப சமாதி நிலையைக் கூட்டி வைத்து அந்நிலையினின்றும் அவரைக் கீழே இறக்கிக் கொண்டு வந்தார். அப்பொழுது விவேகானந்தரைப் பார்த்து "உனக்கு இப்பொழுது என்ன தேவை?" என்று கேட்டார். "சற்று நேரத்துக்கு முன்பு என்னை நிர்விகற்ப சமாதிக்கு எடுத்துச் சென்றீர்கள். அதே நிலையில் நான் யாண்டும் இருக்கும்படி அருள் செய்யுங்கள்" என்று சுவாமி விவேகானந்தர் கேட்டுக்கொண்

டார். "நீ ஒரு பெரிய நீராவிக்கப்பல் போன்று இருக்கவேண்டும். சிறு செத்தைபோல் வாழ விரும்பாதே. சிறு செத்தை தான் மட்டும் நீரில் மூழ்கிப் போகாது நீரில் மிதந்து செல்லும். சிறு பொருளை அதன்மீது வைத்தாலும் அது உடனே நீரில் மூழ்கிப் போய்விடும். ஜீவன் முக்தர்கள் இந்தச் செத்தை போன்றவர்கள் ஆவார்கள். தாங்கள் மட்டும் பிறவிக் கடலில் மூழ்கிப் போகாது மிதந்து சென்று முக்தி என்னும் கரையை அடைந்து விடுகிறார்கள்; மற்றவர்களைப் பற்றி அவர்கள் கவலைப் படுவதில்லை. நீராவிக்கப்பலில் ஏராளமான சாமான்களை ஏற்றி மக்களும் ஏறிக்கொள்கிறார்கள். நீராவிக்கப்பல் தானும் நீரில் மூழ்கிப் போகாமலும் தன்னிடத்திலுள்ள மக்களையும் பொருள்களையும் நீரில் மூழ்கச் செய்யாமலும் பாதுகாத்துக் கொண்டு கரை சேர்கிறது. நீ அந்த நீராவிக்கப்பலைப்போன்று இவ்வுலகில் வாழவேண்டும். நீயும் பிறவிக் கடலில் மூழ்கிப் போகாமல் மற்ற மக்களும் பிறவிக்கடலில் மூழ்காமல் காப்பாற்றி முக்தி என்னும் கரைசேர வந்திருக்கின்றாய். நீ அந்தக் காரியத்தைப் பூர்த்திபண்ணுகின்ற வரையிலும் அப்பேரின்ப நிலையை உனக்கு மறைத்து வைத்திருப்போம். நீ அக் காரியத்தைச் செய்து முடித்தான பிறகு அப்பேரின்ப நிலையை உனக்குக் காட்டித் தருவோம்" என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் விவேகானந்தரிடம் பகர்ந்தார். சுவாமி விவேகானந்தர் எத்தகைய அருட்பணி உலகுக்குச் செய்தார் என்பதை நாம் அறிவோம். அவர் இராமகிருஷ்ண இயக்கத்தைத் தோற்றுவித்தார். அவர் தோற்றுவித்த இராமகிருஷ்ண இயக்கம் இன்று உலகுக்குச் சிறந்த முறையில் கல்வித்தொண்டும் சமயத் தொண்டும் செய்து வருகிறது. ஏராளமான இளைஞர்கள் அவ்வியக்கத்தில் சேர்ந்து தங்களுடைய வாழ்க்கையைச் சமுதாயப்பணிக்காகவும் சமயப் பணிக்காகவும் அர்ப்பணித்து வருகிறார்கள். "ஆத்மனோ மோட்சார்த்தம் ஜகத் ஹிதாய ச" என்பது அவ்வியக்கத்தின் நோக்கமாகும். தன்னுடைய முக்திக்காகவும் உலக நலனுக்காகவும் துறவு வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும் என்று அக்கோட்பாடு புகட்டுகிறது. "அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே" என்று தாயுமானவர் பகர்ந்துள்ளார். நரசேவை நாராயண சேவை ஆகும் என்று சுவாமி விவேகானந்தர் பகர்ந்துள்ளார். நரசேவை புறக்கணிக்கப்பட்டிருந்ததால் சுவாமி விவேகானந்தர் நர சேவையை வற்புறுத்தினார். மக்கள் அனைவரையும் தெய்வங்களாகப் பாவித்து அவர்களுக்குப் பணிவிடை பண்ணுவது இந்தக் காலத்திற்கு ஏற்ற சாதனையாகும். துறவிகள் இத்தகைய நரசேவையில் தீவிரமாக ஈடுபடவேண்டும் என்பது விவேகானந்தரின் கருத்தாகும்.

துறவிகள் தங்களுக்கென்று எதையும் தேடிக்கொள்ளக் கூடாது. தங்களையே அவர்கள் தெய்வத்துக்கு அர்ப்பணித்திருக்கிறார்கள். தங்களைத் தெய்வத்திற்கு அர்ப்பணித்திருப்பதை மக்களுக்குச் சேவை செய்வதின்மூலம் விளக்கிக்காட்ட வேண்டும். விவேகானந்தர் அன்னதானம், அறிவுதானம், அருள் தானம் என்ற மூன்றைக் குறிப்பிட்டு இருக்கிறார். உடல் வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களைத் தேடிக் கொள்வதற்கு மக்களுக்கு வழிகாட்டித் தருவது அன்னதானமாகிறது. ஊக்கமும் உற்சாகமும் உடையவர்களாகத்தங்கள்வாழ்க்கைக்குவேண்டியவற்றைத் தாங்களே தேடிக்கொள்ளமுடியும் என்ற நம்பிக்கையை மக்களுக்கு ஊட்டவேண்டும். தொழில்களைப் பெருக்கி மக்களுக்கு வேலை கொடுத்து அவர்களை வாழ வழிகாட்டுவதே அன்னதானமாகும். அறிவைக்கொண்டு நல்லது கெட்டது எது என்பதை ஆராய்ந்து கெட்டதைப் புறக்கணித்துவிட்டு நல்லதைப் பின்பற்றுவது நல்லறிவாகும். எல்லா உயிர்களிடத்திலும் இறைவனைக்கண்டுஅவ்வுயிர்களிடத்து அன்பு செலுத்துவது அருள்எனப்படுகிறது. அருள் பெற்றவர்கள் மோகம் அடைவதில்லை. மோகத்தைக் களைந்து காமத்தை வென்று இன்ப நிலையில் இருப்பது அருள் நிலையாகும்.மோகத்தைக் களைவதற்கும் காமத்தை வெல்லுதற்கும் மக்களுக்கு உதவி புரிவது அருள்தானம் எனப்படும். மேற்கூறிய முறையில் மக்களுக்கிடையில் அன்னதானம், அறிவுதானம், அருள்தானம் நிகழ்ந்து வருவதற்கு நம்மை அர்ப்பணிப்போமானால் நாம் சிறந்த பணி செய்தவர்களாகின்றோம். (தொடரும்)

அனுமன் கண்ட சீதை

(திரு K. ராமமூர்த்தி M. Com)

10. கம்பன் காட்டும் காட்சி

ஆதிகவியின் காப்பியத்தில் ராவணன் சீதை உரையாடலைப் பார்த்தோம். அதில் ராவணன் மூன்று முறையும் சீதை இரண்டுமுறையும் பேசுவார்கள். கம்பன் காவியத்தில் ராவணன் இரண்டுமுறையும் சீதை ஒரே ஒருமுறையும்தான் பேசுகின்றனர். சீதையின் பதிலை இரு காவியங்களிலும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நாம் நினைவிற்கொள்ளவேண்டிய விஷயம் ஒன்று உண்டு. வான்மீகி ராமாயணத்தின் கதைப்போக்குப்படி ராவணன்-சீதை சந்திப்பிற்குப் பின்னர்தான் சீதைக்கு நன்னிமித்தங்கள் தோன்றுவதும், அவற்றிற்குத் திரிசடை விளக்கம் கூறித் தன் கனவுபற்றி விவரிப்பதும் காணப்படுகின்றன. ஆனால் கம்பராமாயணத்தில் இந்த நிகழ்ச்சிகள் இடம் மாற்றப்பட்டுள்ளன. முதலில் சீதையின் நன்னிமித்தங்களும், அவற்றிற்குத் திரிசடையின் விளக்கமும் கனவும் கூறப்பட்ட பின்பே ராவணன்-சீதை சந்திப்புப்பற்றிப் பேசப்படுகின்றது. எனவே ராவணன் வந்து சீதையிடம் பேசியபோது வான்மீகத்தில் சீதை இருந்த மனநிலை வேறு, கம்பனில் சீதை இருந்த மனநிலைவேறு. கம்பனில், சீதை தனக்கு நன்னிமித்தங்கள் தோன்றியபோது அவை தாற்காலிகமானவையென்றும், பின்னல் வரப்போகும் பெருந்துன்பங்களுக்கு அவை முன்னேடியாகத் தனக்கு ஆசைகாட்டி ஏமாற்ற ஏற்பட்டவை என்றே நம்புகின்ருள். தன் வாழ்வில் தனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியான அனுபவங்கள் யாவும்பின்னர் மிகப் பெரிய துன்பத்திற்கே தன்னை ஆளாக்கிவிட்டதைச் சீதை நினைவு கூர்ந்தே இந்த முடிவுக்கு வருகின்ருள். நாயகன் முடிசூடப்போகிருன் என்ற மகிழ்ச்சியைத் தொடர்ந்துபேரிடியாக வனவாசம் ஏற்பட்டது. ஆரண்யத்தில் அழகிய மான் கிடைக்கப் போகிறது என்று மகிழ்வோடு எதிர்பார்த்தவளுக்குக் கிடைத்ததோ அரக்கருலகில் கடும் சிறைவாசம். எனவே அசோகவனத்தில் தனக்கு ஏற்பட்ட நன்னிமித்தங்களைப்பற்றிச் சீதை அவ்வளவாக மகிழ்ச்சி கொள்ளவில்லை. இருப்பினும் திரிசடையின் விளக்கத்தினுலும் அவள் கண்ட கனவு செய்தியாலும் ஓரளவு மனச் சமாதானம் அடைந்திருந்தாள். ஆனல் அந்த மன அமைதியும் சிறிது நேரம் கூட நீடிக்க முடியாத வண்ணம் ராவணனின் பேச்சும் செயலும் தடைசெய்து விட்டன. எனவே ராவணன் பேச்சிற்குப் பதில் சொல்லும்போது சீதைக்கு மிகுந்த ஆத்திரமும் கோபமும் ஏற்பட்டதாகக் கம்பன் கூறுவது பொருத்தமானது. வான்மீகியில் சீதையின் பதில் முதலில் ஓரளவு அமைதியாக ஆரம்பித்துப்போகப் போக ஆவேசமாக வளர்ந்து முடிவதுபோன்று கம்பனில் இல்லாமல் எடுத்த எடுப்பிலேயே சீதை முழுவேகத்துடன் பதில் சொல்வதன் காரணம் இரண்டு காவியங்களின் கதைப் போக்கில் உள்ள மாறுதல்தான். கம்பனில் சீதையின் பேச்சு முழுவதிலும் இந்த ஆத்திரத்தையும் வேகத்தையும், கோபத்தையும் நன்கு பார்க்கலாம்.

வான்மீகி ராமாயணத்தில் சீதையின் முதல் பேச்சு 33 சுலோகங்களிலும் இரண்டாவது பேச்சு 10 சுலோகங்களிலும் காணப்படுகின்றன. கம்பராமாயணத்தில் சீதையின் பதில் 21 பாடல்களில் அமைக்கப்பட்டுள்ளது. ஆதிகாவியத்தைப்பின்பற்றியே இங்கும்சீதை ஒருதுரும்பினை முன்னிலைப்படுத்தியே பேசுகின்ருள்.

ஆரண்யத்தில் முதன் முதலில் துறவிவேடம் பூண்ட ராவணனைச் சீதை "விருந்தினர்" என்று கருதி, ஈண்டு எழுந்தருளும் என்று அன்புடன் வரவேற்று உபசரித்தாள். ஆனல் அசோகவனத்தில் அதே ராவணனைக் கண்ட போது பார்வையில் வெறுப்பையும் வார்த்தைகளில் நெருப்பையும் காட்டுகின்ருள் சீதை. அந்தக் காமுகனின் சொற்கள் காய்ச்சிய இரும்புபோன்று அவள் காதில் பாய்ந்து அக்காதுகளை எரித்துப் பொசுக்கின. அப்போது சீதை இருந்த மனநிலையில் அவனுடைய பேச்சைக் கேட்டதும் சீதையின் மனம் இயல்பான சாந்தத்தைத் துறந்துவிட்டது; கண்கள் இரண்டும் செக்கர்வானம் போன்று ரத்தச் சிவப்பாயின; தன் பேச்சினல் தன் உயிருக்கே ஊறு

வரும் என்ற தயக்கம் சிறிதும் அவளிடம் இல்லை; பெண்மையின் மென்மையும் நளின மும் அவளை விட்டு விலகின; பிரளய காலத் தில் தோன்றும் ருத்ரமூர்த்திபோன்று சினத் துடன் ராவணனைச் சொல்லம்புகளால் தாக்க முற்பட்டாள்.

11. "தலைபத்தும் சிந்துவாயோ"

எதைச் சொன்னால் ராவணன் மனத்தைச் சுருக்கென்று தைக்கும் என்பதை ஒரு விநாடி சீதை எண்ணிப் பார்க்கிறாள். கபட சந்நியாசி யாகக் கானகத்துக்கு வந்தபோது ராவணன் தன்னைப் பற்றியே உயர்வாகப் பேசிக் கொண்ட வார்த்தைகள் சீதையின் நினைவுக் குத் தற்போது வந்தன. எதைச் சொல்லி ராவணன் அவள் முன் அகந்தையோடு பேசி னானோ அதைக் கொண்டே தொடங்குவதுதான் பொருத்தமானது என்று சீதை நினைத்திருக்க வேண்டும். ராவண சந்நியாசியின் தற்புகழ்ச்சி இதுதான் :-

'மேருவைப் பறிக்க வேண்டின்,
விண்ணினை இடிக்க வேண்டின்,
நீரினைக் கலக்க வேண்டின்,
நெருப்பினை அவிக்க வேண்டின்,
பாரினை எடுக்க வேண்டின்,
பலவினை சில சொல் ஏழாய் !
யார்எனக் கருதிச்சொன்னாய் ?
ராவணற்கு அரிதுஎன் ?' என்றான்.

— ஆரணிய-ராவணன் சூழ்ச்சிப்படலம் 60.

[சில சொல் ஏழாய் - மனம் போன போக் கில் சில சொற்களைக் கூறுகின்ற பேதைப் பெண்ணே! நெருப்பு-வடவாமுகாக்கினி]

இந்த வார்த்தைகள் சீதையின் நினைவில் தங்கி விட்டன. தக்க சமயத்தில் இவை வெளி வந்து ராவணனை அவனுடைய சொற்களினா லேயே தாக்கவும் பயன்படுகின்றன. இதோ எரிமலை குமுற ஆரம்பிக்கின்றது :-

"மேருவை உருவல் வேண்டின்,
விண்பிளந்து ஏகல் வேண்டின்,
ஈரேழு புவனம் யாவும்
முற்றுவித் திடுதல் வேண்டின்,
ஆரியன் பகழி வல்லது;
அறிந்திருந்தும், அறிவிலாதாய் !
சீரிய அல்ல சொல்லித்
தலைபத்தும் சிந்துவாயோ?"

— சுந்தர-நிந்தனைப் படலம் 40.

[ஆரியன் பகழி-ராமனுடைய அம்பு; ஈரேழு புவனம்—பதினான்கு உலகங்கள்]

"மேரு மலையைத் துளைக்க விரும்பினாலும், விண்ணைப் பிளந்து கொண்டு செல்ல விரும்பி னாலும், உலகங்கள் பதினான்கினையும் ஒழிக்க விரும்பினாலும் ராமபிரானுடைய அம்புகளால் முடியும் என்று நீ அறிந்திருந்தும், அறிவில் லாத மூடனே!, சீர்கெட்ட வார்த்தைகளை என் முன் சொல்லி உன் தலைகள் பத்தும் சிந்தும்படி ஏன் நடந்து கொள்கின்றாய்?"

சீதாபிராட்டியின் இந்த வீர உரையின் தொடக்கமே கம்பீரமாக, ராவணனை "அறிவு கெட்ட மூடனே!" என்று விளித்து ராமனு டைய பெருமைகளையெல்லாம் ஒரே பாட்டில் தொகுத்துக் கூறுகின்றது. நீதிநெறி தவறித் தன் கணவனைக் கள்வனென்று கொலை செய் வித்த நெடுஞ்செழியனைப் பார்த்துக் கண்ணகி சொன்ன முதல் வார்த்தையே "தேரா மன்னா!" என்பதாக இளங்கோவடிகள் சிலப்பதிகாரத் தில் கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. இலங்கேசுவரனான ராவணன் "ஆயிரம் மறைப் பொருள் உணர்ந்து அறிவு அமைந்தவன்" என்று போற்றப்படுபவன். அவனையே பார்த் துச் சீதை 'அறிவில்லாதவனே' என்று சொல் லும் அளவு காமம் அவனுடைய நிலையைத் தாழ்த்திவிட்டதென்பதும், எத்தனை கற்ற வரும் காமத்தின்பாற்பட்டு நெறி தவறினால் இவ்வாறு இழிசொல் கேட்க வேண்டிவரும் என்பதும் தெளிவாகின்றது.

சீதையின் வார்த்தைகளில் காணப்படும் இரண்டு செய்திகளும் பின்னால் மெய்யாக்கப் பட்டன. ராமனுடைய அம்புகளின் வலிமை யைப்பற்றிய சீதையின் கணிப்பை, முதல்நாள் போரில் ஏற்பட்ட அனுபவத்திலிருந்து ராவ ணன் ஏற்றுக்கொள்கின்றான். போர்க்களத் தில் முதல்நாள் தனக்கு ஏற்பட்ட அனுப வத்தை மாலியவானிடம் ராவணன் விவரிக்கும் போது ராமனுடைய அம்புகள் பற்றி இவ் வாறு பேசுவான் :-

"மேருவைப் பிளக்கும் என்றால்,
விண்கடந்து ஏகும் என்றால்
பாரினை உருவும் என்றால்,
கடல்களைப் பருகும் என்றால்

ஆருமே, அவற்றின் ஆற்றல்;
ஆற்றுமேல், அனந்த கோடி
மேருவும், விண்ணும், மண்ணும்,
கடல்களும் வேண்டும் அன்றே''

—யுத்த-கும்பகர்ணன் வதைப் படலம்-20

[அவற்றின்-அம்புகளின்; ஆற்றுமேல்-அந்த அம்புகளின் ஆற்றலைத் தாங்கவேண்டுமாயின்.]

ராமனுடைய அம்புகளின் வேகத்தையும் ஆற்றலையும் தாங்கவேண்டுமானல் எண்ணில் கோடி மேருவும், விண்ணும், பூமியும், கடல்களும் வேண்டும் என்பதே ராவணனுடைய அனுபவம் அவனுக்குக் கற்றுத் தந்த பாடம். எனவே ராமபிரான் அம்புகள்பற்றிச் சீதை சொன்னது முற்றிலும் உண்மையானதே என்பதை ராவணன் சில நாட்களிலேயே உணர்ந்துகொண்டுவிட்டான்.

சீதையின் உரையில் காணும் மற்ரொரு செய்தி ராவணன் செயலின் விளைவாக ராமனுடைய அம்புகளால் அவன் தலைகள் பத்தும் அறுபட்டுப் பூமியில் சிதறி ஓடும் என்பதாகும். இதுவும் மெய்யாக ஆனதைப் பின்னர் காண்கிறோம். ராமபாணத்துக்கு இரையான ராவணன் மார்பில் தொங்கிக்கொண்டிருந்த பொன்னும் மணியுமான ஆபரணங்கள் தகர்ந்து சிந்தின என்பான் கம்பன்.

"கார் நின்ற மழைநின்றும் உரும்
உதிர்வ என, திணிதோட் காட்டினின்றும்,
தார்நின்ற மலைநின்றும், பணிக்குலமும்,
மணிக்குலமும் தகர்ந்து சிந்த''

—யுத்த-ராவணன் வதைப்படலம்-198.

[கார்நின்ற மழைநின்றும்-கருநிறம் பொருந்திய மேகத்திலிருந்து. உரும் உதிர்வ என-இடி உதிர்ந்து விழுவது போன்று. திணிதோள் காட்டினின்றும்-திண்மையான தோள்களிலிருந்தும். தார் நின்ற மலை நின்றும்-மாலையணிந்த மலை போன்ற மார்பிலிருந்தும். பணிக்குலமும்-அணிகலன்களின் தொகுதிகளும்; மணிக்குலமும்-ரத்தினங்களின் தொகுதிகளும் தகர்ந்து சிந்த - உடைந்து தரையெங்கும் சிதறி ஓட.]

எனவே உண்மையும் உயிர்த்துடிப்பும் மிக்க சீதையின் ஆவேச மொழிகள் சில நாட்களிலேயே உண்மையாக்கப்பட்டன. தூய்மையான மனத்தினின்று வெளிவரும் சொற்கள் சக்தி வாய்ந்தவை அல்லவா?

12. விசித்திர இலக்குகள்

எதிர்பாராத இந்த முதல் தாக்குதலிலிருந்து ராவணன் விடுபடுமுன் இரண்டாவது கணையைத் தொடுக்கின்ருள் காகுத்தன் மனைவி:-

''ராமனுடைய ஆற்றல் உனக்குத் தெரியும். அதனுல்தானே அவர் இல்லாத வேளையில் வஞ்சக மான் ஒன்று ஏவித் துறவி வேடம் தாங்கித் திருட்டுத்தனமாக என்னைச் சிறையெடுத்து வந்தாய் கோழையைப் போல! உன் குலத்தையெல்லாம் அழிக்க வந்த ஆலகால விஷம்போன்ற ராமபிரான் வந்து உன்னை எதிர்க்கும்பொழுது அவருடன் நீ யுத்தம் செய்வது ஒருபுறம் இருக்க அவரை நேருக்கு நேர் பார்ப்பதற்காவது உனக்கு அருகதை உண்டோ? ராமனுக்கு முன்னல் நின்று அவரை ஏறிட்டுப் பார்ப்பதற்குக்கூட உனக்கு யோக்கிதை இல்லையே! உன்னுடைய பத்துத் தலைகளும் இருபது தோள்களும் ராமன் அம்பு எய்து விளையாடுவதற்கேற்ற விசித்திரமான இலக்குகளாகுமே தவிர உன்னை எதிர்ப்பதை ஒரு யுத்தம் என்று கருதமுடியுமோ? கேவலம் ஒரு கிழப் பறவையினல் அடிபட்டு விழுந்தவன் நீ! ராமனுடன் போர் செய்ய உனக்குத் தைரியம் இருக்கிறதா என்ன?''

ராவணனுடன் யுத்தம் செய்வது என்பது ராமனுக்கு விளையாட்டுப் போன்றதாகும்; அவனுடைய பத்துத் தலைகளும் இருபது தோள்களும் விசித்திரமான, வேடிக்கையான இலக்குகளே தவிர வீரத்தின் சின்னங்களல்ல; எனவே ராமன் ராவணனுடன் வரப்போகும் யுத்தத்தை விளையாட்டாகவே செய்து முடித்துவிடுவான். சீதையின் இக்கருத்தைத் தன் அனுபவத்தின் மூலம் ராவணனே ஒத்துக்கொள்கின்ற சந்தர்ப்பம் முதல்நாள் போரில் ஏற்படுகின்றது. ராமன் ராவணனுடைய சேனைகளை யெல்லாம் அழித்துவிட்டு அவனையும் ஆயுதங்களற்றவனுகச் செய்து, எளிதில் அவனை அழிக்கும் வாய்ப்பு இருந்தும் கூட அவனை மன்னித்து உயிர்ப் பிச்சை அளித்து, மறுநாள் யுத்தத்திற்கு வரும்படி சொல்லி அனுப்பிவிடுகின்ருன். உடலும் உள்ளமும் சோர்ந்து, கர்வம் அழிந்து ராவணன் அரண்மனைக்கு வந்து தன் பாட்டன் மாலியவானிடம் முதல் நாட்போர் அனுபவத்தை விரித்துரைக்கின்ருன். அப்

போது ராமனுடைய போர்த்திறன்பற்றி ராவணன் கூறுவது இங்குச் சிதை ராமன் திறத்தைப் பற்றிக் கூறுவதை ஏற்றுக்கொள்வதாகவே இருக்கின்றது.

"கடல்போன்ற அரக்கர் சேனையை அழித்த போதும், என்னுடைய படைக்கலன்களை யெல்லாம் பயன்படாமல் செய்து என்னைத் தோற்கடித்தபோதும் அந்த ராமனின் முகத்தில் கோபமோ, சிரமமோ, களைப்போ தோன்றவில்லை. அயோத்தியில் சிறுவயதில் கூனியின் முதுகில் மண் உருண்டைகளை எறிந்து விளையாடியபோது அவன் முகம் எவ்வளவு களிப்புடையதாக இருந்திருக்குமோ அதுபோன்றே நான் இந்தப் போர்க்களத்திலும் ராமன் முகம் இருந்தது; அவன் முகத்தில் சினமோ, சிரமமோ தெரியவில்லை" என்பது ராவணன் தரும் செய்தி :

> "...அன்னுன் அந்தக் கூனிகூன் போகஉண்டை.
> தெரிந்தபோது ஒத்தது அன்றிச் சினம் உண்மை
> தெரிந்ததில்லை"

[—யுத்த — கும்பகர்ணன் வதைப்படலம்-17
அன்னுன்-ராமன்; உண்டை-மண்உருண்டை.]

இதிலிருந்து, ராமனுடைய வாழ்க்கைபற்றிய பல செய்திகளை ராவணன் தெரிந்து வைத்திருந்தான் என்பதும், போர்க்களத்தில் ஏற்படும் நெருக்கடியான நிலையிலும் ராமனுடைய முகபாவத்தைக் கூர்ந்து நோக்கி அவனுடைய திறமையை எடைபோட்ட ராவணனின் திறனும் தெரியவருகின்றது. ராமனைப்பற்றி வான்மீகி முனிவர் சொல்லும் 'அக்லிஷ்டகர்மா:' — சிரமமின்றிச் செயல்புரியும் வீரன் என்ற வர்ணனை இங்கு நினைவுகூரத் தக்கது.

13. பறவையிடம் தோற்றவன் :

ராவணனுடைய வரபலத்தின் பலவினத்தைச் சுட்டிக் காட்டுகின்றுள் சிதை :—

"கிழப்பறவையாகிய சடாயுவிடம் தோற்று மயங்கி விழுந்தவன் நீ! உன் வீரமே வீரம்! உன் வலிமையினுல் சடாயுவை வெல்லமுடியாத நிலையில் நீ பெற்ற வரத்தினுல் வெற்றி பெற நினைத்தாய். சிவபெருமான் அளித்த சந்திரஹாசம் என்ற வாளால் சடாயுவைக் கொன்ற பாவியே! அந்த வாள்மட்டும் இல்லாதிருந்தால் அன்றே சடாயுவினுல் கொல்லப்பட்டிருப்பாய் நீ! ஆனுல் இந்த வரபலத்தை யெல்லாம் நம்பி ராமனையும் வென்றுவிடலாம் என்று கனவு காணுதே! உன்னுடைய மூன்றுகோடி வாழ்நாட்களும், உன்னுடைய பெருந்தவத்தினுல் நீ பெற்ற வரங்களும் எமனிடமிருந்து வேண்டுமானுல் உன்னைக் காப்பாற்றலாமே தவிர ராமனின் அம்புகளிலிருந்து உன்னை அவை காக்கும் என்று மனக்கோட்டை கட்டிக்கொள்ளாதே! ராமனின் அம்புகள் தாக்கிய மாத்திரத்தில் உன்னுடைய வரபலமெல்லாம் விளக்கினைக் கண்ட இருள்போன்று மறைந்து ஒழிந்து போகும்! எனவே உன்னுடைய செருக்கும், வரபலத்தினுல் நீ செய்யும் அக்கிரமங்களும் ராமனுடைய அம்புகள் உன்னை நோக்கி வரும்வரையில்தான் என்பதை நினைவிற்கொள்!"

இவையும் சீதையின் மனத்தில் நின்ற சடாயுவின் வார்த்தைகள்தாம். சீதையின் உடல் ராவணனின் சிறையில் சிக்கிவிட்டிருந்த போதும் அவளது சிந்தனை சடாயுவின் வார்த்தைகளில் சிக்கிச் சுகம் கண்டிருக்கிறது என்பது தெளிவு. ராவணன் சிறையிலிருந்து சீதையை மீட்க முதல் முயற்சி செய்த சடாயு ராவணனுக்குக் கூறிய அறிவுரைகள் :-

> "புரம் பற்றிய போர் விடையோன் அருளால்
> வரம் பெற்றவும், மற்று உள விஞ்சைகளும்,
> உரம் பெற்றன ஆவன—உண்மையினேன்
> சரம் பற்றிய சாபம் விடும் தனையே"

—ஆரணிய—சடாயு உயிர் நீத்த படலம். 15.

[புரம்பற்றிய போர் விடையோன்- திரிபுரங்களை எரித்துப்போர்செய்த ரிஷப வாகனனை சிவன். விஞ்சைகளும்—வித்தைகளும்—மந்திர தந்திர மாயைகளும். உரம் பெற்றன ஆவன—வலிமையுடையவையாயிருக்கும். உண்மையினேன்—உண்மையே கடைப்பிடிக்கும் ராமன். சாபம் பற்றிய சரம்-வில்லில் தொடுத்த அம்பு]

என்று ராவணனுடைய வரபலத்தின் வரம்பினை எடுத்துக் காட்டுவான். இதனையே அசோகவனச் சீதையும் அரக்கனின் மனத்தில் பதியுமாறு அறிவுறுத்துகிறுள்.

14. பெண்ணிடம் வீரம் பேசும் பேதை :

ராவணன் வாழ்வின் பொய்மைகளையும் ராமனைப் பற்றிய உண்மையையும் எடுத்துக் காட்டி ராவணனுடைய சிறுமைத்தனத்தைச் சாடுகின்றுள் ஜானகி :-

"மூன்று கடவுளரிடமும் வரம் பெற்ற செருக்கினுல் வரம்பின்றித் தகாத செயல்களைச் செய்கின்ருய் நீ! அம்மூவரில் ஒருவரான சிவபெருமான் தன் சிவந்த பாதத்தின் விரல் நுனியினுல் நீ எடுக்க முயன்ற கயிலைமலையை அழுத்தியபோது அதனுள் சிக்கி நீ அலறியதை மறந்து விட்டாயா என்ன? அப்பேர்ப்பட்ட சிவபெருமான் திரிபுரங்களையும் எரிப்பதற்குப் பயன்படுத்திய மேருவைப் போன்ற 'திரியம்பகம்' என்ற வில் அறந்தரு சிந்தையனுகிய ராமபிரானின் ஆற்றலைத் தாங்காது இரண்டாக ஒடிந்து விழுந்த சப்தம் உலகமெல்லாம் கேட்டதே, உனக்குக் கேட்கவில்லையோ? அந்தச் சிவபெருமானின் வில்லே உடைந்து விட்டபோது அவரிடமிருந்து நீ பெற்ற வரங்கள் என் ராமனை என்ன செய்ய முடியும்? அவ்வாறு அந்த வரபலத்தினுல் ராம-இலக்குவரையும் உன்னுல் வெல்ல முடியுமென்ருல் நீ ஏன் அவர்களுடன் போர் செய்யாமல் திருட்டுத்தனமாக என்னை அபகரித்து வந்தாய்? இவ்வளவு கோழையாகிய நீ அடிக்கடி "திசை யானைகளை வென்றேன்" என்றும் "கயிலையை எடுத்தேன்'' என்றும் பீற்றிக் கொள்வது எவ்வளவு பேதமை?

''வில்லேந்திய இலக்குவன் என்னைக் காத்திருக்கும் வரையில் அவன் முன்வரப் பயந்த நீ இன்னமும் வீரன் என்று கூறிக்கொண்டு இங்கு வந்து பெண்ணின் காலடியில் பணிந்து விழுந்து கிடக்கின்ருயே, உன்னைவிட மூடன் வேறு யார் இருக்கமுடியும்? வெட்கமில்லாமல் ஆண்பிள்ளை என்று பிதற்றிக்கொண்டு நீயும் என் எதிரில் நிற்கின்ருயே?

''நீ என்னை ஒளித்து வைத்திருக்கும் இடத்தை ராமன் நிச்சயம் கண்டுபிடித்துவிடுவார். அப்போது இங்கு வந்து உன்னைத் தண்டிக்க ராமன் கொள்ளும் கோபம் உன்னை அழிப்பதோடும் இந்த இலங்கையை அழிப்பதோடும் நிற்குமோ? இவ் அரக்கர் குலத்தை எல்லாம் அழிப்பதுடன் அச்சினம் ஆறுமோ? நீ ஒருவன் செய்த அநியாயத்தால் உலகம் எல்லாம் ராமனின் சினத்திற்கு ஆளாகி அழிந்துவிடுமே என்றுதான் நான் அஞ்சுகின்றேன். உன்னுல் தோற்கடிக்கப்பட்ட மூவருக்கும் முதலானவர் ராமபிரான். எனவே அவர்களைப்போன்று உன் வரபலத்தைக்கொண்டு ராமபிரானையும் ஆட்டிவைக்கலாம் என்று நினைத்துவிடாதே! உலகத்திற்குத் தீமை செய்வதையே குறியாகக்கொண்ட கொடியவனே! உன் சிறுமைத்தனத்தைக் கைவிட்டு மூவர்க்கும் முதல்வரான ராமனைப் பணிந்து அவர் மன்னிப்பை வேண்டிப் பெற்றுக்கொண்டு உயிர்பிழைக்கும் வழியைத் தேடிக்கொள்!''

ராமனை மூலமுதற்பொருளின் அம்சமாகவே கம்பன்கருதினன்என்பதை இங்குக்காணலாம். காப்பியம் முழுவதிலும் சந்தர்ப்பம் நேரும்போதெல்லாம் இந்தக் கருத்தைக் கம்பன் வலியுறுத்த மறப்பதேயில்லை. எனவேராமனின் உண்மைத் தன்மையைக் கூறி ராவணனை இடித்துரைக்க முயலும் சீதையின் பேச்சிலும் தன் கருத்தைக் கம்பன் கலந்து விடுகின்ருன் என்பது தெளிவாகும்.

ஆலய வழிபாடு

ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பது ஆன்ரோர் வாக்கு. ஆலய வழிபாட்டை முறையாகச் செய்யும்பொழுது மனத்தூய்மையும் மனத் தெளிவும் உண்டாகின்றன. ஆலயத்திற்குச் செல்பவர்கள் புறத்தூய்மையும், அகத்தூய்மையும் உடையவர்களாக இருக்கவேண்டும். ஸ்நானம் செய்து புறத்தூய்மை செய்துகொள்ளவேண்டும்· பலி பீடத்துக்கு முன் சாஷ்டாங்கமாக வீழ்ந்துவணங்கி பாப எண்ணங்களையெல்லாம் பலி பீடத்தில் பலி கொடுத்துவிட்டதாக ஆழ்ந்து சங்கல்பிக்கவேண்டும். தூய சாந்த உள்ளத்துடன் எழுந்திருந்து ஆலயத்துக்குள் நுழைய வேண்டும். ஆலயத்துக்குள் நுழையும்பொழுது கடவுளைப் பற்றிய சிந்தனையே சித்தமிசை குடிகொண்டிருக்கவேண்டும். உலக விஷயங்கள் எதுவும் உள்ளத்துக்குள் நுழைய அனுமதிக்கக் கூடாது.

விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

(திரு. V. சோமு B. Sc., M. Ed.,)

8. உடற்பிணியும் பிறவிப்பிணியும்

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது ஆன்றோர் வாக்கு. இராமலிங்கரும் 'நோயற்ற வாழ்வில் நான் வாழ வேண்டும்' என்று இறைவனை வேண்டுகிறார். மனிதன் நோய்க்கு ஆளாகக் காரணமாக இருப்பவை பாக்டீரியாக்கள், வைரஸ்கள், காளான்கள் போன்ற நுண்ணுயிரிகள் (microbes). பாக்டீரியாக்கள் என்பவை ஒரே செல்லையுடைய கண்ணுக்குப் புலனாகாத ஒருவகை உயிரினங்களாகும். இவை மிக நுண்ணியவைதாம். ஆனால் இவற்றின் செயல்களில் இவை எதிர்மாறானவை. சில பாக்டீரியாக்கள் நோய்களையும், சில நேரங்களில் மரணத்தையும் விளைவிக்கும் அளவுக்குத் தீயனவாய் உள்ளன. மனிதனுக்கு நன்மைசெய்யும் பாக்டீரியாக்களும் உண்டு. நாம் பருகும் நீர், சுவாசிக்கும் காற்று, உண்ணும் உணவு போன்ற பலவகைப் பொருட்களிலும் பாக்டீரியாக்கள் உள்ளன. பாக்டீரியாக்கள் நன்மை பயப்பனவென்றும் தீமை பயப்பன வென்றும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படும். இவற்றை முறையே சாறுண்ணிகள் என்றும் ஒட்டுண்ணிகள் என்றும் வழங்குவர். வாயுமண்டல நைட்ரஜனை நிலைப்படுத்தித் தாவரங்களுக்கு உரமாகப் பயன்படச் செய்தல், பாலைப் புளிக்கச் செய்தல், தோலைப் பதனிடுதல், புகையிலையைப் பதப்படுத்துதல், மது பானங்களைப் புளிக்கச் செய்தல் முதலியன சாறுண்ணிப் பாக்டீரியாக்களின் வேலைகளாம். டைபாயிடு, என்புருக்கி நோய் (T.B.), காலரா, தொழுநோய் போன்ற கொடிய நோய்கள் ஒட்டுண்ணிப் பாக்டீரியாக்களினால் உண்டாகின்றன.

உடலில் புகுந்த பாக்டீரியா இனப்பெருக்கம் செய்கிறது. இவற்றின் உடலில் வளர்சிதை மாற்றத்தின் விளைவாக ஏற்படும் நச்சுப் பொருட்களால் (Toxins) மனிதன் நோயுறத் தொடங்குகிறான். கிருமிகள் மேலும் மேலும் பெருகி மேலும் அதிகப்படியான நச்சுப்பொருளைச் சுரக்கின்றன. இதனால் நோய் கடுமையாகிறது. கடைசியில் உடல் அளிக்கும் எல்லா எதிர்ப்புக்களையும் கிருமிகள் அழித்துவிடுவதால் போதுமான அளவு நஞ்சு உண்டாகி மரணம் சம்பவிக்கவும் செய்கிறது. உடலின் ரத்தத்திலும், நிணநீரிலும் உள்ள வெள்ளணுக்கள் நோயை எதிர்க்கின்றன. இவை கிருமிகளைச் சூழ்ந்து அழிக்கின்றன. இதனால் உடல் நிலை தேறும்.

1929-ல் சர் அலெக்சாண்டர் பிளமிங் என்ற அறிவியல் அறிஞர் பெனிசிலின் (Pencillin) பாக்டீரியாவை அழிக்கவல்லது என்று கண்டு பிடித்தார். நிமோனியா, டிப்தீரியா, ஆந்திராக்ஸ், டெட்டனஸ், தொண்டைப் புண், டான்சில் புண் போன்ற நோய்களைப் பெனிசிலின் குணப்படுத்துகிறது. என்புருக்கி நோய்க்கு ஸ்டெரெப்டோமைசின் (Streptomycin) சிறந்த மருந்தாகிறது. டைபாயிடு, பாராடைபாயிடு நோய்களுக்கு குளோரோமைசிட்டின் (Chloromycetin) மருந்தாகிறது. நிமோனியா, சிறுநீர்க்குழாய் நோய், இன்புளுயென்ஸா, குடல் நோய்களுக்கு ஆரியோமைசின் (Aureomycin) மருந்தாகிறது. டெர்ராமைசின் (Terramycin) என்ற மருந்தும் நிமோனியாவைப் போக்கும் தன்மை உடையது. இப்படி எண்ணற்ற நோய்களுக்கு மருந்து கண்டு பிடித்த மனிதன் பிறவிப் பிணியைப் போக்க என்ன மருந்தைக் கண்டு பிடித்தான்? பிறப்பு, இறப்பு ஆகிய சம்சார சாகரத்தை அழிக்கின்றவனும், அதினின்று விளைகின்ற துன்பத்தை அகற்றுபவனும் ஆண்டவன் அன்றோ! "பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்" "அல்லற்பிறவி அறுப்பான்" என்று மணிவாசகர் இறைவனைப் போற்றுகிறார். ஆண்டவன் ஒருவனால் தான் பிறவிப்பிணியை அகற்ற முடியும். அல்லும் பகலும் அவரைச் சார்ந்து வாழ்வதே பிறவிப்பிணியைப் போக்க உற்ற உபாயமாகும்.

"நோயினால் அவதியுறும் ஒருவனுடைய நோயை டாக்டர் குணப்படுத்துகிறார். இவ்வுலகம் எனும் ஆஸ்பத்திரியில் நம் பிறவிப் பிணியை அகற்றுபவர் வைத்தீசுவரனாகிய கடவுள் ஒருவரே."

—ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேசம்

குமரகுருபரர்

(வித்துவான் ஆதி. பாலசுந்தரன் M. A.)

"துவாத சாந்தப் பெருவெளியில் துரியம் கடந்த பரநாத மூலத் தலத்து முளைத்த முழு முதலே"—என ஸ்ரீ மீனுட்சியம்மையைக் குமர குருபரர் போற்றுகிறுர்.

"துவாத சாந்தப் பெருவெளி" என்பது, மூலாதாரம் முதலான ஆறு ஆதாரங்களையும் கடந்து, தலை உச்சிக்குப் பன்னிரண்டு அங்கு லத்துக்குமேல் உள்ள பெருவெளி-வெட்ட வெளி என்பார்கள்.

மூலாதாரம் முதலான ஆறு ஆதாரங்களையும் கடந்து சென்றவர்கள் ஜீவன் முக்தர்கள். இந்த உலகத்தில், இதே மானிட தேகம்தாங்கி இருந்தே, பரநிலையாகிய பெருநிலையை அடைந் தவர்கள் ஜீவன் முக்தர்கள்.

துரியன் என்னும் சொல்லுக்குச் சுத்தான்மா, கடவுள் என்னும் பொருள்கள் உண்டு. துரியம் என்ருல் பேருணர்வுநிலை.

ஜாக்கிரதம் [நனவு], சொப்பனம் [கனவு], சுஷுப்தி [துயில் அல்லது உறக்கம்], ஆகிய மூன்று அவஸ்தைகளும் [நிலைகள்] ஆன்மாக்க ளிடத்திலே ஒடுங்கும், தோன்றும். ஆன்ம நிலைகளுள், சிவஞான நிலை துரிய நிலை; சிவா னந்த நிலை துரியாதீத நிலை. ஆன்மா, துரிய நிலையில் நுகரப்படுவது பேருணர்வு நிலை.

துரியம் கடந்த நிலை என்பது துரியாதீத நிலை. துரியாதீதநிலை முக்திநிலையாகும்.

துரியாதீத நிலையை அடைந்தவர்கள் யோகி யர். இவ் யோகியர், தாங்கள் தாங்கியிருக் கின்ற மானிட தேகத்திலேயே சிவசாயுஜ்யம் என்னும் பெரும்பேறு பெற்றவர்கள் ஆவார்கள்.

மூலாதாரம் முதலான ஆறு ஆதார நிலை களிலும் பரம்பொருளை ஒளிமயமாக நிறுத்தி, அப்பேரொளியையே எப்போதும் நினைத்து நினைத்து, துவாத சாந்தம்வரை உந்தி உலாவு கிற சாதகர்கள் அவ் யோகியர்கள்.

இச்சாதகர்கள், இறைவனேடு எப்பொழு தும் இடையருது தொடர்பு கொண்டுள்ள சக மார்க்கத்தினர் ஆவார்கள்.

சாலோகம் என்பது இறைவன் இருக்கும் இடத்தை அடையக்கூடிய நிலை. சாமீபம் என்பது இறைவன் அருகில் சமீபத்து இருக் கும் பெருநிலை. சாரூபம் என்பது இறைவ னுடைய உருவத்தையே அடையக்கூடிய திரு வருள்நிலை. இறைவனுடன் இரண்டறக் கலந்து ஐக்கியமாவது சாயுஜ்யம் ஆகும்.

துவாத சாந்தப் பெருவெளியில், துரியாதீத நிலையில் இறைவனைக் கண்டு அனுபவிக்கும் சாதகர்கள் சாரூபம் பெறுவதற்கு உரிய தகுதி படைத்தவர்கள் ஆவார்கள். "துவாத சாந் தம்" என்ருல் என்ன?

"சரீரத்தில் மேருதண்டம் எனச் சொல்லப் படும் முதுகு நடு எலும்பினுள் "சுழுமுனை" என்ற ஸுஷும்ஞ நாடி இருக்கிறது. அதன் அடிஸ்தானத்தில் இருந்து மூலாதாரம், ஸ்வா திஷ்டானம், மணிபூரகம், அனுஹதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் ஆறு ஆதார கமலங்கள் இருக்கின்றன.

இவை ஆறுக்கும் மேல், "ஸஹஸ்ராரம்" என்னும் ஆயிரம் இதழ் தாமரை இருக்கின் றது; இந்த ஆறு சக்கரங்களோடு இருக்கும் பிரதேசத்தை மூன்று கண்டங்களாகப் பிரித்து, அவை முறையே கீழிருந்து மேலாக அக்னி கண்டம், சூரியகண்டம், ஸோமகண்டம் என்று சொல்லப்படும்; ஒவ்வொரு கண்டத்தின் முடி விலும் " க்ரந்தி" என்ற முடிச்சு இருக்கிறது; இந்த முடிச்சுக்கள் சுழுமுனையில் இடகலை, பிங் கலை இரண்டும் சேருவதால் உண்டாகின்றன.

ஒவ்வொரு கண்டத்திலும் இரண்டு ஆதார கமலங்கள் இருக்கின்றன; அக்னி கண்டத்தில் மூலாதார சுவாதிஷ்டான கமலங்களும், சூரிய கண்டத்தில் மணிபூரக, அனுஹத கமலங்களும் ஸோமகண்டத்தில் விசுத்தி, ஆக்ஞை என்ற கமலங்களும் இருக்கின்றன.

மூன்று கிரந்திகளுக்குக் கீழ் இருந்து மேலே பிரம்ம கிரந்தி, விஷ்ணுகிரந்தி, ருத்திரகிரந்தி என்று பெயர். ஆக ஆறு ஆதாரங்கள், மூன்று கிரந்திகள், மூன்று கண்டங்கள் சேர்ந்த எண் ணிக்கை பன்னிரண்டு ஆகின்றன. அதற்கு மேல் இருப்பது ஸஹஸ்ராரம். பன்னிரண்டுக்கு மேல் இருப்பதால், "துவாதசாந்தம்" என்று பெயர் பெறுகிறது."

இவ்வாறு, "துவாத சாந்தத்திற்கு" விளக்

கம் சொல்லப்படுகிறது.

யமம், நியமம், ஆசனம், பிராணுயாமம், பிரத்யாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன ராஜ யோகத்தில் கூறப்படும் எட்டுப் படிகள் ஆகின்றன, மனத்தை அடக்கி அந்த யோக முறையைக் கையாளுகின்றவர்கள் உண்மைச் சாதகர்கள் ஆவார்கள்.

உலகப் பற்றுக்கள், உலக நடைமுறைகள் எவையும் இவர்களின் உள்ளத்தைப் பாதிப்பது இல்லை.

"துரியம் கடந்த பரநாத மூலத் தலத்து முளைத்த முழுமுதலே" என இறைவி மீனுட்சியம்மையைக் குமரகுருபரர் குறிப்பிடுகின்ருர்.

மாயையிலுல் தோன்றிய சராசரங்கள் அனைத்தும் மீண்டும் மாயையில் ஒடுங்குகின்றன. அவ்வாறு ஒடுங்கியவை மீண்டும்தோன்றுமாறு மனத்திலே கருதி, ஞானசக்தியாக நிற்கும் நிலையில் சிவன் பரநாதம் எனப்படும். பரநாதத்தைப் பரபிந்து என்று சாக்த சித்தாந்தம் கூறும். இப்பரநாதம் பிரணவம் ஆகும். பிரணவமே வேதத்தின் மூலம் அல்லது வித்து ஆகும்.

துரிய நிலையைக் கடந்த, துரியாதித நிலையில் தாம்பெற்ற பரம்பொருள் அனுபவ இன்பத்தை இவ்வாறு குறிப்பிடுகின்ருர்.

பரம்பொருள் அனுபவ இன்பம் பெற்றவர்களுக்கு-யோக நிலை கைவரப்பெற்றவர்களுக்கு-இறைவன் என்றே இறைவி என்றே பாகுபாடு தோன்ருது. உண்மையாகிய சக்தி உள்ள இடத்தில் அன்பாகிய சிவம்தோன்றும்; காட்சிக்கு வரும் என்று சொல்லுவார்கள்.

இங்கே, குமரகுருபரருக்கு அன்பாகிய சிவம் உள்ள இடத்தில், உண்மையாகிய சக்தி, மீனுட்சியம்மை வடிவத்தில் காட்சிக்குப் புலனுகிறுன்.

கடவுள் காட்சி காணும் பேறு பெற்றவர்கள், பரம்பொருளோடு ஒன்றுபட்டு-ஐக்கியப்பட்டு-கலந்த நிலையில், பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கம் அற நிறைகின்ற, பரிபூரண ஆனந்த போதமாக அறியப்படுகின்ற இறைவனை ஆண் என்றே பெண் என்றே உருவ பேதம் கொண்டு அறியவோ உணரவோ மாட்டார்கள். அத்தகைய ஞானியர்க்கு இரண்டு உருவங்களும் ஒரே உருவந்தான்.

"பரமே பார்த்திருப்பார். பத பதார்த்தங்கள் பாரார்" என்னும் ஆன்ருேர் வாக்கு இங்கு நினைக்கத் தக்கது.

இவ்வாறு இறை உணர்வை அனுபவிப்பது, இறைக் காட்சியைக் காண்பது சாத்தியம் ஆகுமா? சாத்தியம் ஆகும். எப்படி?

ஆத்மாக்களிடத்தில் இயல்பாகவே ஞான சக்தி அமைந்துள்ளது என்பது சான்ருேர்கள் கண்ட அனுபவ உண்மையாகும். இறை உணர்வை அனுபவிக்க உதவும் இந்த ஞான சக்தியை, ஆத்மாக்களிடத்தில் அமைந்துள்ள மல சக்திகள் தடை செய்கின்றன. கடவுள் அனுபவத்தைப் பெறச் செய்யாமல் தடையாக இருக்கும் மலசக்திகளை அஷ்டாங்க யோக சாதனையால் கெடுக்கலாம். அவ்வாறு கெடுத்து, எக்காலத்தும், எங்கும் இயல்பாக விரிந்து பரந்து நிற்கும் பரம்பொருளை ஒரே இடத்தில் ஒரே காலத்தில் இருந்தபடியே இருந்து ஞான சக்தியால் அறியலாம்.

ஆனுல், மூலாதாரத்தில் உள்ள அனலை (நெருப்பை) அன்வத்தால் (நெருப்பை எழுப்பும் ஆற்றலால்) முறைப்படி எழுப்பி, நடு நாடியில் ஒழுங்குறச் செலுத்தி, நாத மூலமான இறைவனைக் காணுதல் என்பது மிகவும் எளிதான செயல் ஆகாது. "மூலாதாரத்து மூண்டெழு கனலைக் காலால் எழுப்பும் கருத்து அறிவித்து" என விநாயகரிடத்து வேண்டுகின்ருர் ஔவையார். யோக நிலை கைகூடியவர்களுக்கு இப் பேறு வாய்க்கப்பெறுவதாகும்.

ஆதார யோகத்தைப் பயின்று, தியானம் செய்து, படிப்படியாக நிராதார யோகத் திறத்தை அடைந்து அகண்டாகார ஜோதிக் காட்சியைப் பெறுவது, பரநாத மூலத்தலத்தில் முழுமுதலாகிய பரம்பொருள் காட்சியைக் கண்டு அனுபவிப்பதாகும்.

கருவி கரணங்கள் ஒன்ருேடும் கூடாத நிலை, இந்த உடம்பு என்னுடையது, இந்தக் கண் என்னுடையது என்ற உணர்வு அற்ற நிலை, தன்னை மறந்த நிலை, மனம் அற்ற, அழிந்த நிலை நின்மல துரியாதீத நிலை எனப்படும். இந்த நிலை ஜீவன் முக்தர் நிலையை அடையப் பெரிதும் உதவும் என்பது ஆன்ருேர் எண்ணம்.

குமரகுருபரர் தாம் அனுபவித்த ஆத்மானந்தத்தை இங்கே குறிப்பிடுகின்ருர்.

ஸ்ரீ குமரகுருபரர், பகவான் ஸ்ரீ இராம கிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், ஸ்ரீ தாயு மான சுவாமிகள், ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் போன்ற ஞானியர் யோகக் காட்சியைப் பெற்ற வர்கள் ஆவார்கள். தங்கள் சித்தத்தைச் சிவன் என்னும் பரம்பொருளிடத்துச் சேர்த்த வர்கள் இந்த ஞானியர்கள்.

"பூதமும் கரணம் பொறிகள் ஐம்புலனும் பொருந்திய குணங்கள் ஒரு மூன்றும், நாதமும் கடந்த வெளியிலே நீயும் நானுமாய் நிற்கும் நாள் உளதோ?"— எனத் தாம் அனுபவிக்க விரும்பும் ஆத்மானந்த வேட்கையைப் புலப் படுத்துகின்றார் பட்டினத்துச் சுவாமிகள்.

"ஆறு ஆறையும் நீத்து அதன் மேல்நிலை யைப் பேறு அடியேன் பெறுமாறு உளதோ?" —துரியாதீத நிலையில் பரம்பொருள் இன்பம் நுகரும் பெரும்பேறு எனக்கு உள்ளதா? வாய்க்குமா? எனவினவுகிறார் அருணகிரிநாதர்.

இறைவியாகிய மீனாட்சியம்மையின் திரு வருள் கைகூடப் பெற்றவர் குமரகுருபரர். சிவானுபவத்தைச் சுவானுபூதியாக ஆக்கிக் கொண்டவர் அவர்.

எல்லாப் பொருள்களும் இறைவன் இடத் தில் இருக்கின்றன என்னும் உள்ளாதல் தன் மையையும் [All in one] இறைவன் எல்லாப் பொருள்களினிடத்தும் இருப்பான் என்கிற புறமாதல் இயல்பையும் [One in all] உணர்ந் தவர் குமரகுருபரர்.

இறை உணர்வு, இறைக் காட்சி—அனுபவத் தால் வாய்க்கப் பெறுவது. குருவின் உபதே சத்தாலும்,குருவருளாலும் வாய்க்கப்பெறுவது.

"மூளைத்த முழுமுதலே" என இறைவியைக் குறிப்பிடுகிறார் குமரகுருபரர். "மூளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி" என இறை வன் எம்பெருமானைக் குறிப்பிடுகின்றார் அப்பர் சுவாமிகள்.

குமரகுருபரருக்கு மீனாட்சியம்மையின் தெய் வீகக் காட்சி கிடைத்தது. ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சருக்கு அம்பிகை காளிதேவியின் தெய்வீகக் காட்சி கிடைத்தது. முத்தப் பருவப் பாடலின் இன்னொரு பகுதி:

"உருகி உருகி நெக்குஉள்
உடைந்து கசிந்திட்டு அகப்பு ஊறும்
உழுவல் அன்பில் பழஅடியார்
உள்ளத் தடத்தில் ஊற்று எடுத்துப்
பெருகு பரமானந்த வெள்ளப்
பெருக்கே சிறியேம் பெற்றபெரும்
பேறே......"

—உருகி உருகி, உள்ளம் நெகிழ்ந்து நெகிழ்ந்து, அவ்வுள்ளமானது உடைந்து, பக்தியாகிய அன்பின் முதிர்ச்சி, சிறு சிறு துளிகளாகக் கசிந்து, ஊற்றுப் பெருக்கெடுக்கிறது. அவ் அடியார்களின் உள்ளம் என்னும் தடாகத்தில் பரமானந்தப் பெருவெள்ளமாகத் திகழ்பவளே! சிற்றறிவுடையவர்களாகிய யாங்கள் பெற்ற பெரும்பேறே! என ஸ்ரீ மீனாட்சியம்மையைப் போற்றுகிறார் குமரகுருபரர்.

இவ்வுலகம் அன்பினால் இயங்குகிறது. அன்பு இல்லாத உயிர் இவ்வுலகில் இருக்க முடியாது. அன்பு இல்லாத உடம்பு உயிர் உள்ள உடம்பு என ஆன்றோரால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அன்பு ஒன்றே உயிர் களை ஒன்றோடு ஒன்று பிணிக்கிறது.

இத்தகைய சிறந்த அன்பு, இறைவன் மாட் டுக்கொள்ளுகின்ற பேரன்பாக இலங்கும் பட் சத்தில் சிறப்புடையதாக ஆகிறது. சான்றோர் களின் அன்பு உயர்நெறி உடையதாய் இறை வன்பால் கொள்ளுகிற அன்பாகப் பரிண மிக்கும். அத்தகைய சான்றோர்கள் இறைவ னிடத்துப் பற்றுக்கொண்ட, ஆறாக் காதல் கொண்ட வாழையடி வாழை என வந்த திருக் கூட்டத்தினராய்ப் போற்றப்படுகிறார்கள்.

"பழஅடியார் உள்ளத் தடாகத்தில் ஊற்று எடுத்துப் பெருகும் பரமானந்த வெள்ளப் பெருக்கே" என அம்பிகையை அழைக்கிறார் சுவாமிகள்.

பழமையான அன்பினை உடைய அடியார் கள், கறை உண்ட கண்டனாகிய எம்பெரு மானின் வாமபாகத்தில் எழுந்தருளியுள்ள எம் பிராட்டிக்கு வழி வழி அடிமைகளாய்ப் பக்தி கொண்டொழுகும் அன்பர்கள் அவர்கள். உருத்தெரியாக் காலத்திலேயே உள்ளத்தில் புகுந்த உணர்வு கடந்த ஜோதியை அகம் குழைந்து வழிபட்டவர்கள் அவ் அடியார்கள்.

ஆறு, போக்கு நீரை உடையது; நீர் நிலைத்து நிற்காத இயல்பினை உடையது. தடாகம், நிலையாக நிற்கின்ற நீரை உடையது. தாமரை, அல்லி முதலான மலர்கள் மலர்வ

தற்கு இடமாக அமைவது. நிலையான அன்புடைய உள்ளமாகிய தடாகத்தில், ஊற்றுகிய பரம ஆனந்தப் பெரு வெள்ளமாகப் பொங்கி எழுந்து பேரருள் சுரப்பவள் அம்பிகை.

உண்மையான அடியார்களைப் பற்றிக் குலசேகரப்பெருமாள் என்னும் ஆழ்வார் பாடிய பாடல் இங்கு நினைவு கூரத்தக்கது.

" தூராத மனக்காதல் தொண்டர் தங்கள்
குழாம் குழுமித் திருப்புகழ்கள் பலவும்பாடி
ஆராத மனக்களிப்போடு அழுத கண்ணீர்
மழைசோர நினைந்து உருகி ஏத்தி நாளும்
சீரார்ந்த முழுவுஓசை பரவைகாட்டும்
திருவரங்கத்து அரவணையில் பள்ளிகொள்ளும்
போராழி அம்மானைக் கண்டு துள்ளிப்
பூதலத்தில் என்றுகொலோ புரளும் நாளே."

உள்ளத்திலே எந்நாளும் வற்றாத பேரன்பினை உடைய அடியார்களின் திருக் கூட்டம் ஒன்று சேர்ந்து இறைவனை, திருமாலைத் துதித்துப் பாசுரங்கள் பாடுகின்றனர். அவ்வாறு பாடித் துதித்து, தணியாத உள்ளக் களிப்புடன் ஆனந்தக் கண்ணீர் மழை வெள்ளம் போலப் பெருக்கெடுத்து நிறைகிறது. அடியார்களின் பாடுகின்ற பாடல் ஓசையும், நினைந்து உருகும் ஆனந்தக் கண்ணீரும் கடலை நினைவு ஊட்டுகிறது போலத் திருவரங்கத்தில் காட்சி தருகின்றன. திருவரங்கத்து ஆதிசேஷனில் அறிதுயில் கொள்ளும் அம்மானைக் கண்டு தரிசித்து, பூமியில் மகிழ்ச்சியுடன் விழுந்து புரளும் நாள் எந்நாளோ? அந்த நாள் என்று வருமோ?

இங்கே குலசேகராழ்வார் அடியார்களைப் பற்றிக் கூறியதும், குமர குருபரர் பல அடியார்களைப் பற்றிக் கூறியதும் இணைத்துப் பார்க்கத்தக்கது.

மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் வருகைப் பருவம் என்னும் பகுதி உண்டு. பிள்ளையை வா என அழைக்க, மகவு தளர் நடையிட்டு நடந்து வருவதைக் குறித்துப் பாடுவது வருகைப்பருவம். வருகைப் பருவத்தில் பாடல் ஒன்று:

தொடுக்கும் கடவுள் பழம்பாடல்
தொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீம் தமிழின் ஒழுகு நறும்
சுவையே அகந்தைக் கிழங்கை அகழ்ந்து
எடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்கு
ஏற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனம் கடந்து நின்ற
ஒருவன் திருஉள்ளத்தில் அழகு
ஒழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிர் ஓவியமே மதுகரம் வாய்
மடுக்கும் குழற்காடு ஏந்தும் இள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத்துவசன் பெற்ற பெரு
வாழ்வே வருக வருகவே.''

வேதத்தின் பயனாக, வேதப் பொருளாக விளங்குபவள் மீனாட்சியம்மை. கடவுளைப் பற்றித் தொகுத்துக் கூறும் பழமையான வேதத்தின் பொருளாக இலங்குகிறாள் அவள். தேவர்கள் எனச் சொல்லப்படுகிற பஞ்சப்பிரம்மாக்களும், ஏனைய இந்திரன், அக்கினி முதலியவர்களும் தங்கள் தங்கள் சக்தியினாலே தொழிற்படுகின்றனர். எனவே, சக்தியே பிரதானம் ஆகிறது. சக்தியை வழிபடுவது மற்றெல்லாத் தெய்வங்களையும் வழிபடுவதற்கு நிகர் ஆகும். தைத்ரிய உபநிஷதத்தில் சொல்லப்பட்ட பிரகாரம் அவளே பிரம்மம் ஆகத் திகழ்கிறாள். அம்பாளை வழிபட்டாலேபோதும்.

எனவே, குமரகுருபரர், கடவுளர்களைப்பற்றிச் சொல்லப்படுகின்ற பழைய வேதங்களின் பொருளாக மீனாட்சியம்மை இலங்குவதாகக் கூறுகிறார்.

வடமொழியாகிய சம்ஸ்கிருதம், தென்மொழியாகிய தமிழ் என்னும் வேறுபாட்டு எண்ணம் இல்லாதவர் குமரகுருபரர். சம்ஸ்கிருத மொழியிலே அமைந்த வேதப்பொருளாக அம்பிகை விளங்குகிறாள் என்று சொன்னவர், தமிழின் சுவையாகவும் அவள் திகழ்வதைக் குறிப்பிடுகிறார். "நறைபழுத்த துறைத்தீம் தமிழின் ஒழுகுநறும் சுவையே!" —தேன் போன்று முதிர்ந்த இனிமையான, அகத்துறை, புறத்துறை என்னும் இரண்டு துறைகளையும் விளக்கிக்கூறும் செந்தமிழிலிருந்து தோன்றுகிற இனிய சுவையாக விளங்குகிறாள் என்கிறார்.

பொதுவாக இனிப்புப் பண்டம் உடலுக்குக் கெடுதியை உண்டுபண்ணும். ஆனால் தேன் உடலுக்கு நலனைத்தருகிறது. தேன்போன்று தமிழ்ச்சுவை உள்ளத்துக்கு நலனைத்தருகிறது.

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-149

864. कनत्कनकताटङ्का கனத்கனக தாடங்கா— பிரகாசிக்கின்ற தங்கத்தோடு களை உடையவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

உலோகங்களுள் தங்கம் மிகவும் பிரகாசம் பொருந்தியது. ஆத்மப் பிரகாசத்துக்கு ஓரளவு அது பொருத்தமான உபமானமாக அமைந்துள்ளது. உலோகங்களுள் தங்கம் சுல பத்தில் மாசுபடியாதது. அது யாண்டும் மினு மினுத்துக்கொண்டேயிருக்கிறது. ஆத்மப் பிர காசம் அத்தகையது. அதை மறைக்க எதற்கும் இயலாது. பிரளயகாலத்தில் பிரபஞ்ச சம் பந்தமானஅனைத்தும் மறைந்துபட்டுப்போகின் றன. நித்திரையில் நாம் அனுபவிக்கும் கார் இருள் மயமானது பிரளயம். ஆனால் அக்கார் இருள் ஆத்மப் பிரகாசத்தை மறைக்க வல்ல தன்று. அன்னை பராசக்தி யாண்டும் ஆத்மப் பிரகாசமே வடிவெடுத்தவள் என்னும் கோட் பாடு இந்த நாமத்தில் அடங்கியிருக்கிறது.

865. लीलाविग्रहधारिणी லீலா விக்ரஹ தாரிணீ—விளையாட்டாக உடலங்களை எடுத் திருப்பவள் என்பதுஇந்த நாமத்தின் பொருள்.

அன்னை பராசக்திக்கு அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயகி என்பது ஒரு பெயர். பிர பஞ்சத்தில் க்ஷரம் அக்ஷரமாகவும், சேதனம் அசேதனமாகவும் என்னென்ன வடிவங்களைக் காண்கின்றோமோ அவை யாவும் அன்னையின் வடிவங்களாம். உபமானம் ஒன்றன் மூலம் அன்னையின் பாங்கை இனிது விளக்கலாம். இப்பூமியின்கண் நீர்ப்பரப்பு முக்கால் பாகத் துக்கு வியாபித்திருக்கிறது.இந்தப் பூதமானது பெருக்கெடுத்தோடும் நீர்மயமாகவும் கற் பாறைக்கு நிகரான உறைபனி மயமாகவும் கட்புலனாகாத ஆவி மயமாகவும் கட்புலனா கின்ற மேகம் மயமாகவும் மேலும் முடுபனி, மஞ்சு இப்படியெல்லாம் வடிவெடுத்து இருக் கிறது. இத்தனை வடிவங்களில் இலங்குதற்கு ஜலம் என்னும் பூதத்துக்குச் சிரமம் ஏதுமில்லை. அதேவிதத்தில் அன்னை பராசக்தி புல் முதல் பிரம்மா பரியந்தம் உள்ள இத்தனை கோடி ஜீவர்களாக வடிவெடுத்து இருக்கின் றாள். இத்தனை உயிர்களாகத் தன்னைத் தோற்றுவித்துக் கொள்ளுதலால் அவளுக்குச் சிரமம் ஏதுமில்லை. விளையாட்டாக இவை யாவையும் அவள் செய்து சாதிக்கிறாள். இவ் வுண்மையை உள்ளபடி அறிகிற ஆத்மசாதகர் கள் தோன்றியுள்ள ஜீவர்களனைத்தையும் அம்பிகையின் சொரூபங்களாகவே கருதிப் போற்றுவார்கள். இப்படிப் போற்றுவதன் வாயிலாகச் சாதகனுடைய மனது அதிவிரை வில் அகண்டாகாரத்துக்கு விரிந்தோட வல்ல தாகிறது.

866. अजाया அஜாயா—பிறப்பெடுக்காத வள் என்பது இந்த நாமத்தின்பொருள்.

மேலே பகர்ந்துள்ள நாமமும் இந்த நாமமும் ஒன்றுடொன்று முரண்படுபவை போன்று தென்படுகின்றன. ஆனால் உண்மையில் முரண் பாடு ஒன்றுமில்லை. பரந்த கடல்நீரானது அனந்தங்கோடி அலைகளாக உருவெடுத்து உருண்டோடி விளையாடுகிறது. நீர் மட்டத் திலிருந்து பார்க்கின்ற பொழுது இக்காட்சி புலனாகிறது. பின்பு விமானத்தில் ஊர்ந்து வானத்தில் மிக மேலேயிருந்து பார்த்தால் நீர்ப்பரப்பு ஒரே சமனாகத் தென்படுகிறது. அலையின் தோற்றம் எதையும் மிக உயரத்தி லிருப்பவர்கள் காண்பதில்லை. அன்னை பரா சக்தியைப் பிரபஞ்சமயமாக நாம் பொருள் படுத்துகிற பொழுது அவள் இத்தனை கோடி உயிர்களாக வடிவெடுத்து விளையாடுகிறாள். அதே பராசக்தியைத் தன்மயமாகப் பார்க்கு மிடத்து அவள் பிறப்பு, இறப்பு ஆகிய விகா ரங்களை யெல்லாம் கடந்துள்ள பரதேவதை யாக இலங்குகின்றாள். இதற்கேற்ற உபமானம் ஒன்றை எடுத்துக்கொள்வோம். தங்கம் யாண் டும் தங்கமாகவே இலங்குகிறது. அத்தங்கத் தைக் கொண்டு அமைக்கிற நகைகளுக்கு என் ணிறந்த வடிவங்களிருக்கின்றன. அவ்வடிவங் களை முன்னிட்டுத் தங்கம் எந்த விதத்திலும் பாதிக்கப்படுவதில்லை. அன்னை பராசக்தியின் நிஜ நிலை அத்தகையதாம்.

867 क्षयविनिर्मुक्ता க்ஷயவிநிர்முக்தா— மரணமில்லாதவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

உள்ளது ஒன்று இல்லாது போய் விடுமா

கில் அது நாசம் எனவும் மரணம் எனவும் இயம்பப்படுகிறது. இயற்கையை உள்ளபடி ஆராய்ந்து பார்த்தால் அதற்கு அழிவு இல்லை என்பது வெளியாகிறது. சான்று ஒன்று எடுத்துக் கொள்வோம். கோடை காலத்தில் வெப்பம் அதிகரிக்கிறது. கற்பாறையில் சூடு தட்டுகிறது. அதன் மீது ஒரு சொட்டுத் தண்ணீர் விட்டால் சிறிது நேரத்தில் இருக்கும் இடம் தெரியாது அது மறைந்துபட்டுப் போகிறது. உண்மையில் அத்துளி நீர் சூனியமாகப் போய்விட்டதா என்பது கேள்வி. அது சூனியமாகவில்லை. ஆவியாக மாறிவிட்டது. அது கட்புலனாவதில்லை. ஆயினும் அது அழிந்து பட்டுப்போகவில்லை. காற்றோடு அது கலந்து இருக்கிறது. காற்றில் நிரம்பப் பெற்ற நீராவி பிறகு மேகமாக வடிவெடுக்கிறது. அதைத் தொடர்ந்து மழையாகமாறி மண்ணுலகில்வந்து விழ்கிறது. இந்த ஒரு சொட்டு நீருக்குள்ள மாறுபாடே உலகெங்கும் வியாபித்துள்ள நீருக்கும் வந்து அமைகிறது. ஆக, தோற்றத்தில் உள்ள நிலை, தோன்றா நிலை என இரண்டு நிலைகளில் நீரானது மாறி மாறியமைந்து கொண்டிருக்கிறது. அதற்கு அழிவுஇல்லை. இவ்வுண்மை பிரபஞ்சம் முழுதுக்குமே உரியதாம். பிரபஞ்சத்துக்குத்தோற்றமும்,இருப்பும்,மறைவும்உண்டு. ஆனால் அது அழிந்துபட்டுப் போவதில்லை. இப்பிரபஞ்சம் வேறு; அன்னை பராசக்தி வேறு அல்ல. எனவே பிரபஞ்ச மயமாகக் காட்சி கொடுக்கும் அன்னை பராசக்தி வெறும் தோற்றத்தளவில் கட்புலனாவதும் மறைந்து பட்டுப் போவதும் ஆகிய செயல்களில் ஈடுபட்டிருக்கிறாள். உண்மையில் தோற்றத்துக்கும் மறைவுக்குமிடையில் அவள் யாண்டும் தன்மயமாயிருந்து வருகிறாள். அன்னை பராசக்திக்குரிய இவ்வுண்மையானது அவளுடைய ஓர் அம்சமாக அமைந்திருக்கும் ஜீவாத்மனுக்கும் பொருந்தியதாகிறது. ஜீவாத்மன் பிறக்கிறான், பிறந்து இறக்கிறான், வளர்கிறான், தேய்வு அடைகிறான். பிறகு மரணத்துக்கு ஆளாகிறான். இந்த விகாரங்கள் யாவும் நாம ரூபத்திற்கு உண்டு. அதற்கு ஏதுவாயுள்ள ஜீவாத்மனுக்கு இல்லை. எங்ஙனம் அன்னை பராசக்தி மரணமிலாப் பெருநிலையில் யாண்டும் திளைத்திருக்கின்றாளோ அதே பெரிய நிலையை ஆத்ம சாதனத்தில்ஈடுபடும் ஜீவாத்மன் ஒருவன் தனக்கும் அமைத்துக்கொள்ள முடியும். தான் எடுத்துள்ள தேகத்தில் கருத்து வைக்காது தன் சொரூபத்திலேயே நிலைத்திருக்க அவன் பழகுவானாகில் மரணமிலாப் பெரு நிலையை அனுபூதியின் வாயிலாக அறிந்துகொள்ள அவன் வல்லவனாகிறான்.

க்ஷயம் என்னும் சொல்லைக் கிரஹம் அல்லது வீடு எனப் பொருள்படுத்தி கிரஹஸ்தாச்ரமத்திலிருக்கும் ஆத்ம சாதகனுக்கும் அன்னை பராசக்தி முக்தியை நல்குகிறாள் என்று இந்த நாமத்தைஒருசாரார் பொருள்படுத்துகின்றனர்.

868. முுகா முக்தா—கட்டழகே வடிவெடுத்தவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

பிரபஞ்சத்திலுள்ள பொருள் ஒன்று ஸ்தூல வடிவெடுத்துத் தோன்றவும், சூட்சும வடிவெடுத்து மறையவும் செய்கிறது. ஜலத்தையே அதற்குச் சான்றாக எடுத்துக்கொள்ளலாம். ஆவியாக மாறுகிறபொழுது நீர் கட்புலனாவதில்லை. அந்நிலையில் அதனுடைய சௌந்தரியமும் மறைந்துபட்டுப் போகிறது. அங்ஙனம் மறைந்துள்ள ஆவி மிக எளிதில் வெண்மேகமாகவும், கார்மேகமாகவும் மாறியமைகிறது. மேகமாக வடிவெடுத்துத் தன் அழகை அது வாரிக்கொட்டுகிறது. உறைபனியாக மண்ணுலகில் வருகிறபொழுது புஷ்பவிருஷ்டியாகத் தன் அழகை அது வெளிப்படுத்துகிறது. ஹிமாசலத்தில் வானளாவும் உறைபனிக்கட்டியாகவிருந்து தன் அழகை அது வெளிப்படுத்துகிறது. பிறகு அருவியின் வாயிலாகவும், நதியாகப் பெருக்கெடுத்து ஓடுவதின் வாயிலாகவும் தன் அழகை அது வெளிப்படுத்துகிறது. தோற்றத்துக்கு வந்துள்ள பிரபஞ்சம் முழுவதிலும் அழகு தாண்டவமாடுகிறது.

அன்னைபராசக்தி சின்னஞ்சிறுசிசுக்களாகத் தோற்றத்துக்கு வருகிறபொழுது அகங்காரம், மமகாரமற்ற நிலையில் தெய்விகப் பொலிவில் அவள் திகழ்ந்துகொண்டிருக்கிறாள். கள்ளம் கபடமற்ற அத்தூய அழகு உலகத்தவர்களுடைய உள்ளத்தைக்கொள்ளை கொண்டு போகிறது. சிரமம் ஏதுமின்றி அழகை உயிர்வகைகளனைத்தும் பாராட்டுகின்றன. அத்தகைய பாராட்டுதல் உண்மையில்

பரதேவதையின்கண் செலுத்துகின்ற ஆராதனையாம். கண்ணனுடைய அழகிலே உயிர்வகைகளனைத்தும் தங்களுடைய ஜீவ வியக்திகளை மறந்துவிட்டுச் சொக்கியிருந்தன வென்பது ஐதிகம். அழகின் உச்சநிலையிலிருப்பவள் லலிதாம்பிகை. அவளுடைய அழகே பிரபஞ்சமெங்கும் பலப்பல இடங்களில் பலப்பல பாங்குகளில் வெளியாகிக் கொண்டிருக்கிறது. அத்தகைய அழகில் ஆத்ம சாதகன் ஒருவன் தன்னை மறந்து ஈடுபட்டிருப்பானாகில் அது அம்பிகையின் நல்லதொரு வழிபாடு ஆகிறது.

869. क्षिप्रप्रसादिनी க்ஷிப்ரப்ரசாதினீ — அதிவிரைவில் அனுக்ரஹம் செய்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

அறையொன்று நெடுநாளாக மூடப்பட்டுக் கார் இருள் செறிந்திருக்கிறது. பிறகு அதனுள் தீப வெளிச்சம் வருகிறபொழுது நெடுநாளாக அதிலிருந்த இருள் நொடிப் பொழுதில் அகன்று போகிறது. வெளிச்சம் வருவதும் இருள் இல்லாது போவதும் ஏககாலத்தில் நிகழ்கின்றன. அம்பிகையின் அருளைப் பெறுவது இருள் சூழ்ந்த அறைக்குள் தீப வெளிச்சத்தைக்கொண்டு வருவதற்கு நிகராகிறது. பின்பு அன்னையின் அருள் எப்பொழுது வந்து அமைகிறது என்னும் கேள்வி எழலாம். சாதகன் ஒருவன் எவ்வளவு விரைவில் தன்னைத் தகுதியுடையவனாக மாற்றியமைத்துக்கொள்கிறானோ அவ்வளவு விரைவில் அவன் அனுக்ரஹத்துக்குப் பாத்திரமாகிறான். தன்னை மாற்றியமைக்கும் செயல் ஒரு நொடிப்பொழுதில் நிகழலாம் அல்லது சாதனம் புரிந்து வருகிற பல பிறவிகளுக்குப் பிறகு நிகழலாம். நெடுங்காலம், குறுகியகாலம் என்பதே மனதின் கற்பனையாம்.

நெறி பிறழாத நல்வாழ்வு வாழ்ந்து வருகிற மானுடனொருவன் இரவில் உறங்கப் போகிறான். உறக்கத்தில் அவன் சொப்பனம் ஒன்று காண்கின்றான். அந்தக் கனவு உலகிலே அவன் ஆழ்ந்து ஆத்ம சாதனத்திலே ஈடுபட்டான். பூஜையில் அவன்பயன்படுத்திய பாத்திரங்களையும்ஏனைய பண்டங்களையும் திருடர்கள் வந்து இடையிடையே அபகரித்துச் சென்றார்கள். துப்பறிந்து அவர்கள் இருக்கும் இடத்தைக் கண்டறிந்து அவர்கள்மீது வழக்குத் தொடுத்துத் தனக்குரிய பூஜா பாத்திரங்களை மீட்டெடுத்தான். சில ஆண்டுகளாக மழையே பெய்யாது, அவனுடைய வழிபாட்டுக்கு இடைஞ்சலை உண்டுபண்ணியது. அதன் பிறகு சமுதாயத்தில் நாஸ்திகர்கள் கூட்டம் அதிகரித்தது. கடவுள் வழிபாடு என்பது மூடநம்பிக்கை என்று அந்த ஆத்ம சாதகனோடு நாஸ்திகர்களும் சூனியவாதிகளும் இடையிடையே வாதாடினர். அங்ஙனம் சில காலம் கழிந்தது.

அதன் பிறகு அந்த ஆத்மசாதகன் ஒழுங்காகச் சாதனத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொழுது நோய்வாய்ப்பட்டான். சாதனத்துக்குப் பேரிடைஞ்சலாயிருப்பவைகளுள் நோய் மிகக் கொடியது. நல்வாழ்வில் ஈடுபடுவதற்கு அது இடம் தருவதில்லை. வாழ்நாள் முழுவதையும் வீண்நாளாகக் கழிக்கின்ற நெருக்கடியை அது உண்டுபண்ணுகிறது. வருத்தத்துடன் அவன் அந்த நோய்க்குப் பரிகாரங்கள் பல தேடினான். மருத்துவர்களைச் சந்தித்தான். பலப்பல மருந்துகளை அருந்தினான். சிரமப்பட்டுத்தனக்குற்ற நோயை அவன் தவிர்த்தான். அதன் பிறகு திடகாத்திரத்துடன் அவன் சாதனத்தில் ஈடுபட்டான். நல்லார்களுடைய கூட்டுறவு அம்பிகையின் அருளால் அவனுக்கு வாய்த்தது. ஆத்மசாதனத்தில் இனிது முன்னேற்றமடைந்து வந்தான். அதைக் குறித்து அவன் மகிழ்வுற்றிருந்தபொழுது கனவினின்று திடீரென்று விழித்தெழுந்தான். அவன் கனவு கண்டது நள்ளிரவில் சுமார் அரைமணிநேரம். அந்த அரைமணி நேரம் கனவு அவனுக்குப் பல ஆண்டுகளாக விரிவடைந்தது. நலனும் கேடும் வாய்ந்த அனுபவங்கள் பல பெற்றான். விழித்தெழுந்தவுடன் அவனுக்கு விவேகமும் உதயமானது. அக்கணமே அதிகாலையில் அன்னையின் அருளுக்குப் பாத்திரமானான். அதற்கிடையில் உண்மையொன்று அவன் உள்ளத்தில் உதயமானது. க்ஷிப்ரம் என்பதும் யுகாந்தரம் என்பதும் வெறும் மனநிலைகளாம். ஆத்மபோதத்தில் விழித்து எழுந்திருப்பதற்குக் காலம் இடைஞ்சல் அன்று. எக்கணத்தில் வேண்டுமென்றாலும் ஆத்ம போதம் பெறலாம் என்னும் உண்மையை அனுபூதியின் வாயிலாக அவன் அறியலானான்.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (261) ஜீவன் முக்தரை அறிவது எப்படி?

ஜீவன் முக்தரை அறியும் உபாயத்தை ஒரு உபமானத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம் என்று பரமஹம்சதேவர் பகர்ந்திருக்கிறார். பணக்காரன் ஒருவன் தான் பணம் படைத்தவன் என்று தன்னைப்பற்றி ஒன்றும் சொல்லிக் கொள்வதில்லை. ஆயினும் அவனுடைய வீட்டைப் பார்த்தால் அவனுடைய பாங்கு அதன் மூலம் வெளியாகிறது. இரவில் அறைகள் எல்லாவற்றிலும் தீபம் எரிந்து கொண்டிருக்கும். அவ்வீட்டில் ,எப்பகுதியும் இருள் படிந்து இராது. அதே விதத்தில் நிறைஞானி ஒருவன் ஜீவன் முக்தனாகிறான். சரீரத்தில் இருக்கின்ற பொழுதே சரீரத்தின் கூறுகளில் ஜீவன் முக்தன் கட்டுண்டு போவதில்லை. உடலைத் தான் என்று கருதுகிறவன் தேகாத்ம புத்தி படைத்திருப்பது மட்டுமன்று; அந்தத் தேகத்தின்மீது அவன் அணிந்திருக்கும் ஆடை ஆபரணங்களுக்கேற்ற ஆடம்பரமான மனப்பான்மையும் அவனுக்கு உண்டாகிறது. இதற்கு நேர்மாறாகப் பேராசிரியர் ஒருவர் நேர்த்தியாகத் தூய ஆடை அணிந்திருந்தும் அந்த ஆடையைப் பற்றிய உணர்ச்சி அவருக்குச் சிறிதேனும் வருவதில்லை. அதே விதத்தில் ஜீவன் முக்தன் ஒருவனுக்கு உடலைப் பற்றிய அபிமானமோ, பற்றுதலோ உண்டாவதில்லை. வெயிலில் நடந்து செல்லுகிற மனிதன் ஒருவன் தன் உடல் உண்டுபண்ணும் நிழலை எங்ஙனம் பொருள்படுத்தாது போகிறானோ அங்ஙனம் ஜீவன் முக்தன் ஒருவனை அவனுடைய உடல் நிழல் போன்று சார்ந்திருக்கிறது. உடலைத் தான் என்று அபிமானிப்பதால் காமக் குரோதாதிகள் உருவெடுக்கின்றன. ஜீவன் முக்தன் ஒருவனுக்கு அங்ஙனம் மனோவிகாரங்கள் உண்டாவதில்லை. நிந்தையும் ஸ்துதியும் அவனை எந்த விதத்திலும் பாதிக்கமாட்டா. வாழ்க்கையில் வந்து அமைகின்ற வெற்றியும் தோல்வியும் எந்த விதமான மனமாற்றத்தையும் அவனிடத்து உண்டுபண்ணமாட்டா. தாமரை இலை தண்ணீரில் தோயாது தண்ணீரில் நிலைத்திருப்பது போன்று ஜீவன் முக்தனொருவன் உலகில் கட்டுப்படாது உலக வாழ்க்கையை நடாத்தி வருகிறான். உடலில் வாழ்ந்திருப்பதையும் உடல் அழிந்து பட்டுப்போவதையும் ஒரே பாங்கில் ஜீவன் முக்தன் பொருள்படுத்துகிறான்.

கேள்வி (262): பிறர் மனம் புகாத நிலையே கற்பு என்றால் சீதாபிராட்டி இராவணனுடைய மனத்தில் புகுந்ததால் அவள் கற்பு பாதிக்கப்படவில்லையா?

சீதாபிராட்டியாரைப் பற்றிய காம நுகர்ச்சி இராவணனுடைய மனதில் புகுந்தது. ஆனால் சீதாப்பிராட்டிதானே இராவணனைத் தன்கருத்தில் காதலோடு வாங்கியவள் அல்லள். அவளுடைய மனது யாண்டும் இராமனையே சார்ந்திருந்தது. இராவணன் அவளை இராமனிடமிருந்து சிறிது காலம் பிரித்து வைத்ததன் விளைவாக இராமபக்தி அவளிடத்துப் பன்மடங்கு ஓங்கியது. அவளுடைய தவவலிவும் மேன்மையுறுவதாயிற்று. இராவணன் மீது அவள் சீற்றம் கொண்டிருந்தால் அவளுடைய கற்பின் வேகத்தால் இராவணன் அழிந்துபட்டுப் போயிருந்திருப்பான். காதல் கண்கொண்டு அவளைப் பார்த்த இராவணனை அவள் கருணை கர மூர்த்தியாயிருந்து, தாய் ஒருத்தியின் உளம் பூண்டு புத்திமதி புகட்டினாள். அப்படிப் புகட்டியதற்கிடையில் அவனை அவள் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. ஏராளமான மின்சக்தியை எடுத்துச் செல்லுகிற கம்பி ஒன்று பீங்கான் கோப்பையினால் தாங்கப் பெறுகிறது. ஆயினும் கம்பியில் உள்ள மின்சக்தி பீங்கான் கோப்பையினால் பாதிக்கப்படுவதில்லை. அக்கம்பியானது தண்ணீரின் வழியாக எடுத்துச் செல்லப்பட வேண்டியிருந்தால் அதற்கு (இன்சுலேட்டர்)Insulator என்னும் கவசம் போடப்பட்டிருக்கிறது. அந்தக் கவசம் கம்பியிலுள்ள மின்சக்தியை எந்த விதத்திலும் பாழ்படுத்துவதில்லை. இலங்காபுரியில் சிறை கிடந்த சீதாபிராட்டி அந்த மின்கம்பிக்கு நிகராக இலங்கினாள். இராவணனுடைய தொடர்பு என்னும் பீங்கான் கோப்பை அவளுடைய கற்பு என்னும் மின்சக்தியைச்

சிறிதேனும் சிதறடையச் செய்யவில்லை. சிறை வாசம் என்னும் பொருந்தாத சூழ்நிலை மின் கம்பிக்குப் போடப்பட்டிருக்கும் கவசத்துக்கு நிகராக சீதாபிராட்டியாருடைய கற்புக்கு எந்தவிதமான தீங்கும் செய்ய அதற்கு இயல வில்லை.எனவே கற்பு என்பதுஅவரவர் சொந்த மான நிலையாகிறது. கற்பரசி ஒருத்தியைப் பிறர் காமக்கண்கொண்டு பார்ப்பதால் அவ ளுடைய கற்பு எந்த விதத்திலும் கலைவதில்லை. ஆகவே பிறருடைய காமக்கண்ணில் படுகிற பெண்பாலர்களெல்லாரும் கற்பை இழக்கிறார் கள் என்கிற கோட்பாடு உண்மையன்று. உமா தேவி உலகெங்குமுள்ள மாதர்கள் வடிவத்தில் இலங்கிக்கொண்டிருக்கிறாள். உலக மாதர் களில் பலர் காமக்கண்ணுக்கு இலக்காகின்ற னர். அதை முன்னிட்டு உமாதேவியாரைக் கற்பரசி அல்லளென்று பொருள்படுத்தினால் அது பெரும்பிழையாகும். தன்னுடைய நிறை மனதை எக்காரணத்தை முன்னிட்டும் சித றடைந்து போகாது காப்பாற்றுபவள் கற்பரசி யாம். பூரணியாயுள்ள உமாதேவி யாண்டும் நிறை மனது படைத்தவள். அவளுடைய சொரூபமாக இலங்குகின்ற சீதாபிராட்டியாரும் நிறை மனது படைத்தவள். அவளுடைய நிறைவு ராவணனுடைய இருபது கண்களால் சிறிதளவும் பாதிக்கப்படமாட்டாது. இதுவே கற்பு என்னும் நிறைவுக்கு விளக்கமாம்.

கேள்வி: (263) மானுட வாழ்க்கை சோதனைகள் நிறைந்ததாக இருக்கிறது. நல்லவர்களுக்குச் சோதனைகள் வருமென் றால், அவை ஏன் மிகுதியாக இருக்க வேண்டும்?

உடல் எடுத்துள்ள உயிர்வகைகளனைத்துக் குமே வாழ்க்கையில் சோதனைகள் மிக அமைந் திருக்கின்றன. தகுதி மிக வாய்ந்தவைகளே வாழ்க்கையில் தாக்குப் பிடிக்கின்றன. தகுதி யற்றவைகள் துடைத்துத் தள்ளப்படுகின்றன. பக்கம் பக்கம் வளரும் மரம் செடி கொடிகளில் உறுதி படைத்தவை மேலோங்கி வளருகின் றன. உறுதியற்றவை க்ஷீணித்துப் போய்ப் பிறகு மறைந்துபட்டுப்போகின்றன. வனத் தில் வசிக்கும் விலங்குகளுள் வல்லமை வாய்ந் தவைகள் நிலைத்திருக்கின்றன. வல்லமையற் றவை அழிந்துபட்டுப் போகின்றன. மானுட சமுதாயத்தில் ஒரு நாடு மற்றொரு நாட்டின்மீது படையெடுத்துப் போய் அதை அடிமைப் படுத்துவதும் அல்லது ஒதுக்கித் தள்ளுவதும் காலமெல்லாம் நிகழ்ந்து வருகிறது. எனவே எல்லாப் படித்தரத்திலும் உடல்வாழ்க்கை என்பது ஓயாத போராட்டமாம். போராட் டத்தின் வாயிலாக ஒவ்வொரு படித்தரத்திலும் உள்ள உயிர்வகைகள்வலிவுபெற்றுவருகின்றன

மனிதன் பசியோடு போராடியாகவேண்டும், நோயோடு போராடியாக வேண்டும், எதிரிக ளோடுபோராடியாகவேண்டும். இதற்கெல்லாம் மேலாக அக்ஞானத்தோடுபோராடியாகவேண் டும். அக்ஞானத்தோடு செய்கிற போராட் டமே சோதனை என்கிற பெயர் பெறுகிறது.

கல்வித்துறையில் மேல் நிலைக்கு வரவர பரீக்ஷை என்னும் சோதனை அதிகரிக்கிறது. சாமானியப் படிப்புப் போதும் என்பவனுக்குச் சோதனை மிகக் குறைவு. ஒழுக்கத்தில் மேல் நிலைக்கு வருகின்றவனுக்குச் சோதனைகள் அதிகம். கீழ்த்தரமான வாழ்க்கையில் உழன்று கொண்டிருப்பவனுக்குச் சோதனையும் மிகக் குறைவாக அமைகிறது. உலோகங்களில் அமைந்துள்ள அழுக்குகளை அகற்றுவதற்கு ஏற்ப அவைகளைப் பல தடவை உலையில் இட்டு உருக்குதல் வேண்டும். அதே விதத்தில் மானுடனொருவன் பண்பாட்டில் மேன்மை யடைந்து உள்ளான் என்பது சோதனையின் வாயிலாகவே வெளியாகிறது. விளையாட்டில் தேர்ச்சி பெற்றவன் தேர்ச்சி பெற்ற மற்றவர் களோடு போராடியே தன் திறமையை வெளிப் படுத்துகின்றான். அறிவில் ஓங்கியிருப்பவன் ஆராய்ச்சியின் வாயிலாகவே தன் அறிவுத் திறனை வெளிப்படுத்துகிறான். உறுதி படைத் துள்ள சமுதாயம் ஒன்று தாக்கவரும் எதிரி களோடு போர் புரிந்து அவர்களைத் தோற் கடித்தே தங்களைப் பாதுகாத்துக் கொள்ளு கின்றது. இங்ஙனம் உலக வாழ்வு முழுதும் சோதனை மயமாக அமைந்திருக்கிறது. பண் பாட்டில் மேலே வருவதற்கேற்பச் சோதனை களைச் சமாளிக்கும் திறமை தானாக வந்து அமைகிறது. இக்கோட்பாட்டின்படி நல்லவர் களுக்குத்தான்சோதனை அதிகம்."வலிவுபடைத் தவன் வாழ்வுக்குரியவன்'' என்னும்கோட்பாடு சோதனையின் மூலம் நிரூபிக்கப்படுகிறது.

ஜாதகக் கதைகள்

(திரு. V. S. நரசிம்மன்)

4. தவறிழைத்த நாய்கள்

பிறப்புக்கள் பல இருக்கின்றன என்று பெரியோர்கள் பகர்ந்திருக்கின்ருர்கள். திருவாசகத்தில் சிவபுராணப்பகுதியில் 'புல்லாகிப் பூடாகி' என்று தொடங்கிப் பல பிறப்புக்களைப் பற்றிய ஜாபிதா அங்குத் தரப்பட்டிருக்கிறது. போதி சத்துவரும் பல பிறப்புக்கள் எடுத்துப் பல அரியசெயல்களைச் செய்திருக்கிருர். அப்படி எடுத்த பிறப்புக்களுள் நாயாக ஒரு பிறவி எடுத்திருக்கிருர். அப்பொழுது அவர் செய்த நற்செயல் ஒன்றை விளக்கும் கதை வருமாறு:

காசியில் ஒரு முறை போதிசத்துவர் நாயாகப் பிறவி எடுத்து மயானத்தின் அருகே தமது கூட்டத்தின் தலைவராக வாழ்ந்தார். காசி மன்னன் வேட்டையாடி திரிந்து அரண்மனை சென்ருன். அப்போது பணியாட்கள் ரதத்துடன் குதிரை சேணத்தையும் அவிழ்க்காது விட்டுச் சென்றனர். இரவு பெய்த மழையில் அவை நனைந்தன; அரசனின் அரண்மனையில் வளரும் நாய்கள் அவற்றைக் கடித்துப் பாழாக்கின. அரண்மனை நாய்கள் குதிரையின் சேணத்தைக் கடித்த செயல் அரசனுக்கோ, அரசனுடைய வேலை ஆட்களுக்கோ தெரியாது. காலையில் அரசனுடைய வேலை ஆட்கள் சேணம் கடிக்கப்பட்டுப் பாழாக்கப்பட்டிருப்பதைப் பார்த்தனர். உடனே அரசனிடம் வேலையாட்கள் செய்தியைத் தெரிவித்தனர். செய்தியைக் கேட்ட அரசன் நாய்கள்தாம் சேணத்தைக் கடித்திருக்கவேண்டும் என்று தீர்மானித்தான். ஆனல் அந்தத் தீர்மானம் நன்குஆராயப்படாததாக இருந்தது. அரண்மனை நாய்களை விட்டுவிட்டு மற்ற நாய்கள்மீது அரசன் கோபம் அடைந்தான். நாய்களின் செய்கையால் வெகுண்ட அரசன், கண்களில் படும் நாய் எதுவாகினும் அதைக் கொன்றுவிடுமாறு ஆணையிட்டான். அப்பாவி விலங்குகள் பல கொல்லப்பட்டன. ஒரு சில தப்பித்துஓடித் தமது தலைவனிடம் முறையிட, போதிசத்துவர் இதற்குத் தீர்வு காண வேண்டி அரண்மனையை நோக்கி ஓடினர். 'என்னைக் காண்பவன் மனதில் என்னைத் தாக்கும் எண்ணம் எழவேண்டாம்' என்று சங்கல்பம் செய்தார். அதன்படி யாரும் அவருக்குத் தீங்கிழைக்கவில்லை.

அரசன் தனது அரியாசனத்தில் வீற்றிருக்க நேரே அவனை அடைந்து, அநியாயமாகத் தனது கூட்டத்தினரைக் கொல்வது ஏன் எனக் கேட்டார் நாயின் வடிவில் இருந்த போதிசத்துவர். அரசன் நடந்ததை உரைத்தான். "தவறிழைத்த நாய்கள் எவை எனத் தெரியாமல், கண்ணில் கண்டதைக் கொல்வது அநீதி. உன்னுடைய ஆணைக்கு உட்படுத்தாத நாய்கள் உள்ளனவா?" "ஆம். எனது அரண்மனையில் வளரும் விலங்குகளுக்கு விதிவிலக்கு அளித்துள்ளேன்." "அரசே, நீ ஆராயாது செயல்படத் துணிந்துள்ளாய். உன் செயலில் நேர்மை இல்லை. உன் வீட்டு விளக்கு என்று அதில் கை வைத்தால் அது கையைச் சுடாமல் இருக்குமா? உன் அரண்மனை நாய்களுக்கு மட்டும் எப்படி விதி விலக்குச் செய்தாய்? நாயினுடைய இயல்பு அவைகளினிடத்தில் மட்டும் இல்லாமல் போய்விடுமா? அரசன் என்பவன் அனைவருக்கும் பொதுவானவன் என்பதைச் செயலில் காட்டவேண்டும். தவறு செய்தவர்களை மட்டும்தான் அரசன் தண்டிக்கவேண்டும். தவறு செய்தவரைத் தேடித் தண்டிக்காது விதிவிலக்கு வேறு தந்துள்ளாய். பாரபட்சம், வெறுப்பு, அறியாமை, அச்சம் ஆகிய தோஷங்களை நீ களையவில்லை. காரணமின்றி எனது கூட்டத்தையும் கொலை செய்கின்ருய்." "அப்படியெனின் எனது அரண்மனையில் வளரும் விலங்குகளே தவறிழைத்தன என்று நிரூபிக்க இயலுமா?" என்ருன் அரசன். போதிசத்துவர் அவற்றை வரவழைத்து, குசா என்ற புல்லை மோரில் கரைத்துப் பருகுமாறு செய்தார். அந்த விலங்குகள் அனைத்தும் வாந்தி எடுத்ததில், குதிரை சேணங்களின் பகுதிகள் இருப்பதை அவையோர் கண்டனர். அரசன் தனது செயலுக்கு வருந்தி மன்னிப்புக் கோரினன். அரசனுக்கு நல்ல அறிவுரை கூறிப் போதிசத்துவர் தம் இருப்பிடம் அடைந்தார். அவரையும் அவர் கூட்டத்தையும் நன்கு பராமரிக்குமாறு அரசன் ஆணையிட்டான்.

பகவத்கீதையும் காந்தியடிகளும்

(சுவாமி துருவானந்தர்)

மதம் ஒன்று நீடித்து வலுப்பெற்று இருக்க வேண்டுமானல் அதற்குச் சாஸ்திரம் ஒன்று இருக்கவேண்டும். சாஸ்திரம் இல்லாத சமயம் நாளடைவில் க்ஷீணித்துப் போகும். ஒவ்வொரு மதத்திற்கும் அந்தந்த மதக் கோட்பாடுகளை உடைய நூல்களே வேதங்களாக மதிக்கப் பெற்று வணங்கப்பெற்று வருகின்றன; பக்தியோடு ஓதப்பெற்று வருகின்றன. கிறிஸ்தவன் ஒருவனை உன்னுடைய மதத்துக்குரிய வேதம் எது என்று கேட்டால் பைபிள் என்று கூறுவான். முஸ்லீம் ஒருவனை உன் சமயத்துக்குரிய வேதம் எது என்று கேட்டால் சிறிதும் தாமதிக்காது குர்ஆன் என்று கூறுவான். ஆனல் இந்து ஒருவனைக் கேட்டால் அவன் என்ன சொல்லுவான்? ஒவ்வொரு இந்துவும் ஆளுக்கொரு நூலைச் சாஸ்திரமாகக் கூறுவார்கள். வேதங்களின் ஒரு பகுதியான உபநிஷதங்களின் சாரமாகப் பகவத்கீதை அமைந்துள்ளது. இவ்வுலகுக்கு அப்பால் உள்ள பரதத்துவத்தை அடைவதற்கு இந்நூல் நமக்கு வழிகாட்டுகிறது. துவாபரயுகத்தில் நடந்த நிகழ்ச்சியை மையமாக வைத்து ஆத்ம தத்துவத்தை மானுடர் அனைவர்க்கும் புகட்டி அவர்களைச் சான்றோர்களாக்குவதற்காகவே வந்தது பகவத்கீதை.

குழந்தை யொன்றுக்குக் காய்ச்சல் வந்தால் தாய் உடனே அதற்குரிய மருந்தைக் குழந்தைக்குத் தருகிறாள். தன்னுடைய நோய் குணமாகத்தான் தாய் தனக்கு மருந்து தருகிறாள் என்று குழந்தை மனப்பூர்வமாக நினைத்தாலும், மருந்தினுடைய கசப்புத் தன்மையை நினைத்தவுடனே அம்மருந்தை வேண்டாமென வெறுத்து ஒதுக்குகிறது. உடனே தாய் அக்கசப்பு மருந்தைத் தேனிலே குழைத்துத் தன் குழந்தைக்குத் தருகிறாள். தேனிலே குழைத்த அம்மருந்தை குழந்தையும் ஏற்றுக்கொள்கிறது. குழந்தையின் நோயும் குணமாகிறது. அது போன்று மானுட வாழ்க்கையின் இலட்சியமாகிய இறைவனை அடைய உயர்ந்த கருத்துக்கள் உபநிடதங்களில் ஏராளமாகச் சொல்லப்பட்டுள்ளன. அக்கருத்துக்களை எல்லாராலும் கிரஹிக்க இயலாது. கிரஹிக்க இயலாத கருத்துக்களை எங்ஙனம் ஆராய்ச்சிபண்ண முடியும்? ஆகவே நமது ரிஷிகள் தங்கள் அனுபவத்தில் கண்ட உண்மைகளைக் கதைகளாக அமைத்துத் தருகிறபொழுது எல்லாரும் விரும்பிப் படிக்கிறார்கள். பகவத்கீதையும் மகாபாரதத்தினூடே கலந்துவருகிற கிருஷ்ண அர்ஜுன சம்பாஷணை ஆகும். மகாபாரதம் என்ற பெட்டகத்திலே பகவத்கீதை என்ற ரத்தினம் அடங்கியுள்ளது. குருக்ஷேத்திரம் என்றபோர்க்களத்திலே போரிடத்தயங்கிய அர்ஜுனனுக்குப் பகவான் கிருஷ்ணனல் பகவத்கீதை உபதேசம் செய்யப்பட்டது. ஒருவன் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்தால் இப்பிறவி, மறுமை முதலியவற்றில் புகழுடன் மேன்மையடைய முடியும் என்பதைக் கூறுகிறது இந்நூல். இது சாதி, சமயம், வகுப்பு, இனம், நாடு முதலியவற்றிற்கு அப்பாலிருந்து மானுட இனம் அனைத்துக்கும் கலங்கரை விளக்கமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. இது சமயங்களனைத்துக்கும் பொது நூலாக **(Universal Scripture)** இருப்பதால் கிறிஸ்தவன் ஒருவன் இதைப் படித்து அதன்படி நடப்பானனல் அவன் பண்பட்ட கிறிஸ்தவன் ஆக முடியும். முஸ்லீம் ஒருவன் கீதையை முறையாகப் படித்து அதன்படி நடக்க ஆரம்பித்தால் இஸ்லாம் காட்டுகிற பெருநிலையை அவன் அடைய முடியும். ஒரு மாணவன் கீதை புகட்டும் பாங்கில் தன் வாழ்க்கையைத் திருத்தியமைத்தால் தலை சிறந்த மாணவனாக வரமுடியும். ஒரு மீனவன் கீதையைப் படித்து அதன்படி நடந்தால் அவன் உயர்ந்தவனாக மாறுவது உறுதி. இப்படி அவரவர் தொழில், இனம், சமயம் முதலியவற்றையெல்லாம் கடந்து மக்களை உயர்த்துவதற்கே எழுந்த உன்னத நூல் பகவத்கீதை.

இந்தியன் ஒருவன் பகவத்கீதையைச் சிறப்பித்துப் பேசினல் அதில் வியப்படைவதற்கு ஒன்றுமில்லை. ஆனல் மேல் நாட்டில் கீதையை நன்கு கற்று அதன் சிறப்பை உணர்ந்து அதன் பெருமையை எடுத்து இயம்பும் பொழுதுதான் அதன் உண்மையான தன்மையை நம்மால்

புரிந்து கொள்ளமுடியும். தங்கள் மதக் கொள்கைகளிலோ, கோட்பாடுகளிலோ குறைகளிருந்தால் அக்குறையை மறைத்து அதைப் புகழ்ந்து பேசி மற்றைய மதத்தைத் தாக்குவது புல்லிய மனப்பாங்கு படைத்தவருடைய செயலாகும். ஆனல் தங்கள் மதத்திலுள்ள குற்றங் குறைகளை மறுக்காது ஒப்புக்கொண்டு பிற மதக் கொள்கையில் உள்ள சிறப்பை ஏற்றுப் போற்றுவது சான்றேர் செயல். கீதையின் ஆங்கில மொழிபெயர்ப்பு முதன் முதலில் **East India Company** என்ற கழகத்தாரால் வெளியிடப்பெற்றது. அந்த மொழி பெயர்ப்புக்கு வாரன் ஹேஸ்டிங்ஸ் என்ற ஆட்சித் தலைவர் முன்னுரை யொன்று கொடுத்தார். அதில் அவர் எழுதியிருப்பதாவது: "இங்கிலாந்து ஒரு காலத்தில் இந்தியாவை இழக்க நேரிடலாம். ஆனல் இந்தியாவில் தோன்றிய பகவத்கீதையின் கோட்பாடுகளை இங்கிலாந்து நடைமுறையில் கடைப்பிடிக்குமானல் இங்கிலாந்து என்றைக்கும் மேன்மையுற்று விளங்கும்." இது உண்மையான வாசகம் என்பதை நிரூபித்துவிட்டது காந்தியினுடைய சத்தியாக்கிரஹம். எவரைக் கறுப்பர், அடிமையர், கூலிகள் என வெள்ளையன் எண்ணினனே அதே இந்தியர் இனத்தில் பிறந்த காந்தியடிகள் கீதையைக் கற்றார். அதன் கோட்பாடுகளைக் கடைப்பிடித்தார். நம்மை அடிமைகளாக்கிய வெள்ளையனை வெளியேற்றக் கத்தியின்றி ரத்தமின்றிச் சத்தியப்போர் புரிந்து சுயராஜ்யம் வாங்கித் தந்தார். கீதையின் சாரமும் அவர் வாழ்க்கையும் ஒன்ருகி விட்டன.

'கீதா' என்பதைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தால் அது 'தாகி, தாகி' என்று மாறுவதைக் காணலாம். 'தியாகம் செய்' என்று கீதா சாஸ்திரம் புகட்டுகிறது. த்யாகேனைகே அம்ருதத்துவ மானசு: என்பது சுருதி வாக்யம். ஆகவே தியாகம் ஒன்ருல்தான் எதையும் பெறமுடியும். கீதை காட்டிய பிரகாரம் தம் வாழ்க்கையைத் திருத்தியமைத்தார் காந்தி. எல்லா மதத்தினருக்கும், எல்லா இனத்தினருக்கும், எல்லா நாட்டவர்களுக்கும் கீதை எங்ஙனம் பொது நூலோ அங்ஙனமே அதைப் படித்து அதன்படி வாழ்ந்த காந்தியடிகளும் எல்லா மதத்தினருக்கும், எல்லா இனத்தினருக்கும், எல்லா நாட்டினருக்கும் பொதுவானவராகக் கருதப்பட்டார்.

'உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்'

என்ற குறள்பாவுக்கு ஒப்பத் தம் வாழ்வைப் பிறர் நலனுக்காக அர்ப்பணித்த அம்மகான் மக்கள் உள்ளத்தில் நீங்காது இடம் பெற்ருர். நல்ல நண்பனுக்கு நிகர் நல்ல நூல். நல்ல நூலை நாடுபவனுக்கு அது யாண்டும் துணையிருந்து வழுக்கி விழும்பொழுதெல்லாம் கைகொடுத்துக் காப்பாற்ற முன்வரும் என்பதில் சந்தேகமில்லை. நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணு என்னும் நாமம் என்கிருர் திருமங்கையாழ்வார். அதேபோன்று நலம் தரும் நூலை நான் கண்டுகொண்டேன் என்ருர் மகாத்மா காந்தியடிகள். "கீதைதான் என் தாய். இந்தப் பூமியில் என்னைப் பெற்றெடுத்த தாயாரை நான் இழந்து வெகு காலமாகிறது. ஆனல், அதிலிருந்து அந்த ஸ்தானத்தை இந்த அழிவற்ற தாய் (கீதை) பூரணமாக ஏற்றுக்கொண்டு விட்டாள். அவள் என்னை எக்காலத்திலும் கை விட்டதில்லை. எனக்குக் கஷ்டமோ துன்பமோ நேரும்போது, நான் அவள் மடியில் அடைக்கலம் அடைகிறேன்" என்று கீதையிடம் தாம் கொண்டிருந்த இணக்கத்தைப்பற்றிக் காந்தி கூறுகிருர். காந்தி ஓர் அரசியல் துறவி. அரசியல் என்பதே பொய் பித்தலாட்டங்களுக்கு இருப்பிடம் என்ற கொள்கை பொதுவாகப் பரவியுள்ள இக்காலத்தில் சத்தியத்தையும் அகிம்சையையும் கடைப்பிடித்தால் எந்தத் துறையிலும் புனிதமான வாழ்க்கை வாழமுடியும் என்பதைக் காந்தியடிகள் நிரூபித்துள்ளார்.

கீதையிலே இரண்டாவது அத்தியாயத்தில் ஏழாவது சுலோகமாக வருவதைப் பிரார்த்தனை மந்த்ரமாக எடுத்துக்கொள்ளுவார் காந்தி. தமக்குச் சொந்த வாழ்க்கையில் ஏற்படுகிற எத்தகைய துன்பங்களுக்கும், குழப்பங்களுக்கும் நடுவே, முடிவு தெரியாது தவிக்கிறபொழுதும் அவர் இந்தச் சுலோகத்தைப் பயன்படுத்தி அனைத்திலிருந்தும் மீண்டு வந்ததாகக் கூறுகிருர். இதைச் செய்வதா, வேண்டாமா என்ற குழப்பமான நிலை உருவெடுக்கிறபொழுது அன்றைய தினம் உணவு ஏற்காது தனியாக

இருந்து கண்ணீரும் கம்பலையுமாகக் கசிந்து உருகி "**கார்பண்ய தோஷோபஹதஸ்வபாவ: ப்ருச்சாமி த்வாம் தர்மஸம்மூட சேதா:யச்ரேய: ஸ்யாந்நிஸ்சிதம் ப்ருஹி தன்மே சிஷ்யஸ்தேஹம் சாதி மாம் த்வாம் ப்ரபன்னம்.**" என்று பிரார்த்திப்பார். "சிறுமை என்ற கேட்டினல் - நல்லியல்பை இழந்த நான் அறநெறியை அறியப்பெருது மயங்கி உம்மை வினவுகிறேன். எனக்குச் சிறப்பினுவதை உறுதியாக இயம்பும். நான் உமது சிஷ்யன், தஞ்சமடைகிறேன், உபதேசித்தருளும்." அந்தரங்க சுத்தமான பிரார்த்தனையை ஆண்டவன் இனிது நிறைவேற்றுகிருர். ஆகவே காந்தியின் வேண்டுகோளும் அங்ஙனமே அவ்வப்போது நிறைவேறி வந்தது. தம் விருப்பு வெறுப்பை ஒதுக்கி இறைவனையே சார்ந்து அவர் காட்டிய வழியில் போகலாம் என்று இருந்த காந்தியடிகளுக்குத் தொட்ட காரியங்களனைத்தும் அனுகூலமானவையாக இருந்தன. தீர்த்து வைக்கமுடியாத பிரச்னையோ,அணுகமுடியாத வழிமுறைகளோ இல்லை.உப்புச்சத்தியாக்கிரஹத்தைக் காந்திஜி ஆரம்பித்தார். அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் இயக்கத்தை முடுக்கி ஆங்காங்கே உள்ள கடல் நீரை எடுத்து உப்புக் காய்ச்சும் புரட்சியை நாடு முழுதும் ஆரம்பித்தார். நாடு முழுதும் பெரிய அளவில் மக்கள் கூட்டம் உப்புக் காய்ச்ச அணிதிரண்டு சென்றனர். இவற்றைப் பார்த்து நடுக்கமுற்ற வெள்ளைய அரசாங்கம் என்ன செய்வது என்று தெரியாது தங்களுக்குள் ஆலோசித்தார்கள். "இந்தக் கிளர்ச்சிக்கெல்லாம் அடிப்படைக் காரணம் வல்லபாய்படேல்தான். அந்த ஆசாமிதான் இந்த இயக்கத்தின் பின்னணியில்இருந்து தீவிரமாக வேலை செய்கிருன். இந்தக் கிழவனுகிய காந்திக்கு என்னதெரியும்? முதலில் படேலைக்கைது செய்யுங்கள். அந்தக் கிழவனை அவன் போக்கில் விட்டு விடுங்கள்" என்று படேலைக் கைது பண்ணினுர்கள். முற்றிலும் சத்தியப் பொருளாகிய சர்வேசுவரனைச் சார்ந்திருப்பவர்களுக்கு ஒருநாளும் ஏமாற்றமோ, தோல்வியோ, அவமானமோ ஏற்படாது என்பதற்கு இதுவே சான்று. காந்தியின் ஆணைக்குக் கட்டுப்பட்ட இந்திய மக்கள் வெற்றிகரமாக உப்புச் சத்தியாக்கிரஹத்தை நிறைவேற்றி வெள்ளையர் அரசாங்கத்தை எச்சரித்து வைத்தனர்.

பதஞ்சலி யோக சூத்ரம் ஆத்ம தரிசனம் பெறத் தெய்விகப் பண்பை வலியுறுத்துகிறது. இயமம் என்று சொல்லப்படுவதில் ஐந்து பிரிவுகள் இருக்கின்றன. அவை அஹிம்சை, சத்தியம், பிரம்மச்சரியம், அஸ்தேயம், அபரிக்கிரஹம் என்பனவாம். மகாத்மா காந்திக்குச் சத்திய யுத்தத்திற்கு அஹிம்சைதான் கேடயம் ஆக இருந்தது.

ஒரு சமயம் கண்காட்சி சாலை ஒன்றைக் காந்திக்குச் சுற்றிக் காண்பித்தனர். சுற்றிக் காண்பித்தவர் பக்கம் பக்கம் இருந்த இரண்டு தேன் பெட்டிகளைக் காந்திக்குக் காட்டி "ஒரு பெட்டியில் உள்ள தேனீ மறந்தும்கூட அடுத்த பெட்டிக்குள் போகாது. அப்படிப் போவதாகத் தெரிந்தால் அடுத்த பெட்டியிலுள்ள தேனீக்கள் புதியதாக வந்த தேனீயைக் கொன்றுவிடும்" என்று விளக்கிக்கூறினர். இதைக் கேள்விப்பட்ட காந்திஜிக்கு வாயில்லாத பூச்சியாயிருந்தாலும் அதற்குண்டான அறிவுத்திறமையை வியந்து கொண்டிருந்த பொழுது இதுகாறும் பேசிக் கொண்டிருந்தவர் முதல் பெட்டியின் வாயிலில் உள்ள தேனீயைப் பிடித்து இரண்டாம் பெட்டியின் நுழைவாயிலில் வைக்கப்போனுர். உடனே காந்தி குறுக்கிட்டு "வேண்டாம், நீங்கள் சொல்லியது போதும், புரிந்துகொண்டேன், அந்த உயிரை ஹிம்சை பண்ணவேண்டாம்" என்றுர். அதற்குள் அந்த ஆசாமி அந்தத் தேனீயை மற்ற தேனீயினுடைய பெட்டியின் நுழைவாயிலில் வைத்தவுடனே வேறு தேனீக்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து இந்தத் தேனீயைக் கொட்டிக் கொன்று தள்ளி விட்டன. அந்த நேரம் அந்தத் தனியாக இருந்த ஒற்றைத் தேனீ என்ன பாடுபட்டிருக்கும்? இந்தக் காட்சியைக் கண்ட அண்ணலின் கண்களில் நீர் நிறைந்து விட்டது. கண்ணுடியைக் கழற்றிக் கண்களைத் துடைத்துக் கொண்டே அந்த மனிதரை நோக்கி "ஓர் உயிர் மாண்டுபோகக் காரணமாக இருந்து விட்டீர். உம்மால் உயிர் கொடுத்து அதைப் பிழைக்க வைக்க முடியுமா? இனி நான் கண்காட்சியைக் காண வரமாட்டேன்" என்று துக்கத்தோடு தம் இருப்பிடம் சென்றுர் அண்ணல். (தொடரும்)

அமரநாத யாத்திரை

(சுவாமி குஹானந்தர்)

"அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்" என்று புகன்ற ஔவைப் பிராட்டியார் அடுத்து "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்று அறிவுறுத்தியுள்ளார். இதை முன்னிட்டே தென்னுட்டில் ஆலயங்கள் அமைப்பதைப் புண்ணியம் எனக் கருதிப் பலர் அதில் ஈடு படுகின்றனர். உயர்ந்த கோபுரம் எழுப்பு கின்றனர். அது விஸ்வலிங்கம் எனக் கருதப் படுகின்றது. அதைக் கண்டதும் பல பேர் கைகுவித்து வணங்குகின்றனர். வெகுதூரத் திற்குக் கண்ணுக்குத்தெரியும்படி மலையின்மீது கோயில்கள் கட்டுவித்துள்ளார்கள். மக்க ளுடைய மனதில் சதாசர்வகாலமும் இறை வனைப்பற்றிய எண்ணம் இருந்துகொண்டு இருக்கவேண்டும் என்னும் அடிப்படை யிலேயே இவற்றை அமைத்துள்ளனர். ஆல யங்களுக்குச் சென்று வழிபடும்போது இந்த எண்ணம் ஆழ்ந்த பதிவை மக்கள் மனதில் உண்டாக்குகிறது. இதுபற்றி ஸ்ரீ ராமகிருஷ் ணரும் "பசுவின் உடல் முழுதும் பால் பரவி இருந்தாலும் மடியில் கறந்தால்தான் பால் கிடைக்கும். மற்ற உறுப்புக்களில் பால் கிடைக் காது. அதுபோன்று இறைவன் நீக்கமற எங் கும் நிறைந்திருந்தாலும், ஆலயங்களில் சென்று வழிபடுவது அவனருளைப் பெறுவதற்கு எளிது" என்று கூறியுள்ளார். அவரும் காசிக் கும் பிருந்தாவனத்திற்கும் யாத்திரைசென்று வந்தார். அன்னை ஸ்ரீ சாரதா தேவியாரையும் முக்கிய ஸ்தலங்களுக்கு யாத்திரை போய் வரும்படி சொன்னர். அதிலும் பெரியமஹான் களால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்தலங்களிலும், பெரியோர்கள் வழிபாடு செய்த இடங்களிலும், அதிகமான மக்கள்கூடித் தினந்தோறும் வழி படுகின்ற இடங்களிலும் அங்குள்ள எண்ணத் தின் சக்தி அங்குச் செல்வோரின் மனதில் தெய்வசிந்தனையையுண்டாக்குகிறது. இக்கருத் தையொட்டியே ஸ்ரீ தாயுமானசுவாமிகளும்,

"மூர்த்திதலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கு [ஓர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

என்று கூறியுள்ளார். நம் பாரதநாட்டில் தீர்த்த யாத்திரை தொன்றுதொட்டுப் பக்தர் கள் வாழ்க்கையில் முக்கிய இடம் பெற்று வருகிறது. பக்தர்களிடம் அருள் உணர்வை உண்டாக்குவதில் மற்ற எல்லா இடங்களைக் காட்டிலும் இமயமலை ஈடு இணையற்று விளங்குகிறது. அதற்குக் காரணம் பல ரிஷி களும் மகான்களும் அங்குப் பழங்காலந் தொட்டு ஆத்ம சிந்தனையிலேயே ஆழ்ந்து தவமியற்றி வந்துள்ளதுதான்.

அமரநாத்

அமரநாத் என்பது காஷ்மீர் மாநிலத்தில் இமயமலையில் இயற்கையாக அமைந்துள்ள ஒரு பெரிய குகை ஆகும். அக்குகை கடல் மட்டத்தில் இருந்து சுமார் 12000 அடிஉயரத் தில் உள்ளது. 60 அடி நீளமும் 30 அடி அகல மும் 20 அடி உயரமும் உள்ளதாக அப்பனிக் குகை அமைந்திருக்கிறது. அக்குகைதான் மக்களின் மருளை நீக்கி, தாங்கள் என்றும் அழியாத ஆன்ம சொரூபம் என்பதை உணர வைக்கும் அருள்மிகு அமரநாதனின் ஆலய மாக விளங்குகிறது. அக்குகையின் முகட்டி லிருந்து சொட்டும் தண்ணீர் பனிப்பாறையாக இறுகி அதுவே பீடமாகவும் லிங்கமாகவும் ஸ்வயம்புவாக அமைந்துள்ளது. இந்தியாவி லுள்ள சக்திபீடங்களுள் அதுவும் ஒன்று என்று புராணம் கூறுகிறது.

குகையின் முகட்டிலிருந்து சொட்டும் தண் ணீர் குளிரினல் இறுகி லிங்கமாக அமைந்துள் ளது. சீதோஷ்ண நிலைக்கேற்ப லிங்கத்தின் உயரம் கூடவும் குறையவும் செய்யும்.

அமரநாத் செல்வதற்குச் சென்னையிலிருந்து ஜம்புவரை சுமார் 2000 மைல் ரயிலில் சென்று அங்கிருந்து 182 மைல் ஸ்ரீநகருக்குப் பஸ்ஸில் சென்று அங்கிருந்து 60 மைல் பஹல்காமிற்குச் சென்று அங்கிருந்து முப்பதுமைல் நடந்து செல்ல வேண்டும். இரண்டொரு நாட்கள் பஹல்காமில் தங்கி யாத்திரைக்கு வேண்டிய கூடாரம், உடை, உணவு, கூலியாள், குதிரை முதலியவற்றிற்கு ஏற்பாடு செய்துகொண்டு கரடு முரடான குறுகிய மலைப்பாதையில் நடந்தும், குதிரையில் அல்லது தண்டியிலும்

போய்வர வேண்டும். ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் 1897ம் ஆண்டு ஆங்குச் சென்று வந்துள்ளார். பத்து ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் வருஷத்திற்கு ஒரு நாள் ஆவணிப் பௌர்ணமி அன்றுதான் அமரநாத தரிசனம் கிடைக்கும். காஷ்மீர் அரசாங்கமே பாதையைச் சரி செய்து வழியில் வைத்திய உதவி முதலியன ஏற்பாடு செய்து நடத்துவார்கள். பஹல்காமில் புறப்பட்டு 10 மைல் தூரத்திலுள்ள சந்தன்வாரி என்னும் இடத்தில் ஓரிரவு தங்கி மறுநாள் 8 மைல் தூரத்திலுள்ள சேஷநாத்தில் தங்கி, மூன்ருவது நாள் 8 மைல் சென்று பஞ்சதரணி யென்னும் இடத்தில் தங்கி, 4வது நாள் அங்கிருந்து குகைக்குச் சென்று தரிசனம் செய்து திரும்பவும் பஞ்சதரணி, சேஷநாத், சந்தனவாரி வழியாக வந்து சேர்வார்கள். அப்பொழுதெல்லாம் யாத்ரிகர்கள் நூற்றுக்கணக்கில்தான் சென்று வந்தார்கள். நாளாக ஆக ஆயிரம், பல ஆயிரம் என்று கூட்டம் பெருகியதால் பெருங்கூட்டம் போகும்போது வழி நெடுக நிறைய சிரமங்கள் ஏற்பட்டு வந்தன. ஆதலால் இப்போது ஆடிப் பௌர்ணமிக்குச் சுமார் ஒரு வாரத்திற்கு முன்பு ஆரம்பித்து ஆவணிப் பௌர்ணமியுடன் முடிக்கின்றனர். ஆவணிப் பௌர்ணமியன்று பெரிய கூட்டமும், மழையும் இருப்பதால் பலபேர் ஆடிப் பௌர்ணமியன்று தர்சனம் செய்வதை விரும்புகின்றனர். மற்றக் காலங்களில் மழையாலும், பனியாலும் பாதை அடைபட்டுவிடுகிறது.

1977 ஆம் ஆண்டு ஸ்ரீமத் சாந்தானந்த சுவாமிகள் தலைமையில் 40 பேர் அன்பர்கள் தாய்மார்களுடன் ஆடிப்பௌர்ணமிக்கு அமர்நாத் சென்று தரிசனம் செய்து வந்தனர். 1979ஆம் ஆண்டே அமர்நாத் யாத்திரை செல்ல ஏற்பாடுகள் செய்தோம். சிலவேலைகளை முன்னிட்டு அது 1980ஆம் ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டது. அதனல் எல்லாருக்கும் யாத்திரையைப் பற்றிய ஆர்வம் அதிகமாயிற்று. உணவு, வாகன வசதிகளுக்கு ஒரு யாத்திரை சர்வீஸ் நடத்தும் கம்பெனியிடம் 30 நாள் யாத்திரைக்கு ரூ. 1250ம், பசுபதிநாத் விமானத்தில் போய் வருவது, தங்கும் இடம், உணவு வசதிகளுக்குத் தனியாக ரூ. 500ம் பேசி முடித்தோம். அந்தர் யோகத்தில் அடிக்கடி கலந்துகொண்ட அன்பர்களும் தாய்மார்களுமாக 1980ஆம் ஆண்டு ஜூலைமாதம் 13ஆம் தேதி அமர்நாத், பசுபதி நாத் சென்று வழியில் உள்ள ஸ்தலங்களையும் தரிசித்து வர 30 நாட்கள் யாத்திரை சென்று வரத் திட்டம் போடப்பட்டது.

தமிழ்நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் 34 அன்பர்களும் 28 தாய்மார்களும் 1980 ஜூலை மாதம் 13ம் தேதி காலையில் தபோவனம் வந்து சேர்ந்தனர். காலை 8 மணிக்குப் பிரார்த்தனை மண்டபத்தில் ஐக்கிய வணக்கம் நடைபெற்றது. ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் யாத்திரையின் முக்கியத்துவம்பற்றி உரை நிகழ்த்தினர்கள். அவர்கள் குறிப்பிட்டதாவது : யாத்திரையில் செல்பவர்கள் சுயநலத் தியாகம் செய்யும் அளவிற்கு யாத்திரை சிறப்பாக அமையும். ஒவ்வொருவருடைய உண்மை சுபாவம் அப்போதுதான் வெளிப்படும். பல பேர் சேர்ந்து செய்யும் யாத்திரையில் சில சமயங்களில் மனத்தாங்கல் உண்டாகும். அதை உடனே மறந்துவிட்டு ஒருவர்க்கொருவர் இனிய மனத்துடன் பழகவேண்டும். அதுதான் மனதைப் பண்படுத்துவதற்கு ஏற்ற வழி. நீங்கள் மேற்கொண்டிருப்பது உல்லாசப் பிரயாணமன்று. இது ஒரு புனிதயாத்திரை. இது ஒரு திட்டத்திற்கு உட்பட்டதாக எண்ணி ஏகோபித்தமனதுடன் நடக்கவேண்டும். ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளுக்குக் கன்னியாகுமரி, க்ஷீர் பவானி யாத்திரைகளே பெரிய மன மாறுதல்களை உண்டாக்கின. அதுபோன்று இந்த யாத்திரை உங்கள் எல்லாருடைய மனதும்பண்பாடு அடையக்கூடிய முறையில் அமையவேண்டும். யாத்திரை சிரமம் தெரியாது இனிதே நடைபெற இறைவனுடைய நாம ஜபமே உற்றவழி என்று கூறியும், 1934ஆம் வருஷத்தில் தங்கள் கேதாரநாத் யாத்திரையிலும் 1937ல் கைலாய யாத்திரையிலும் ஏற்பட்ட சில முக்கிய அனுபவங்களைக்கூறியும் அமரநாதன் அருளால் யாத்திரை இனிதே நடைபெற வேண்டுமென்று அனைவரையும் ஆசிர்வதித்தார்கள். அடுத்துப் பேசிய சுவாமி ஸதானந்தர் அவர்கள் தம்முடைய யாத்திரை அனுபவத்தைச் சொல்லி ஆசி கூறினர்கள்.

அன்று பகல் உணவு தபோவனத்தில் அனைவரும் உண்டபின் பகல் 2-30 மணிக்கு எலம

னூர் ரயில் நிலையத்தைச் சேர்ந்தோம். எங்கள் யாத்திரைக்கு 75 படுக்கைகள் வசதிகொண்ட (3 Tier Sleeper) பிராட்கேஜ் ரயில் பெட்டி திருச்சியிலிருந்து புறப்பட்டு எலமனூர் வந்து சேர்வதற்கு ஏற்பாடு செய்திருந்தோம். யாத்திரிகர்கள் திருச்சி செல்லாது எலமனூர் ரயில் நிலையத்திலேயே ஏறிக்கொள்வதற்கு அனுமதி பெற்றிருந்தோம். அவ்வண்ணமே பிற்பகல் 3 மணிக்கு ரயில் வந்த உடன் அனைவரும் சாமான்களுடன் ஏறி அமர்ந்தோம். பல அன்பர்களும், தாய்மார்களும், தபோவனத்தைச் சேர்ந்தவர்களும் ரயில் நிலையம் வந்து "ஸ்ரீ அமரநாத சுவாமிக்கு ஜே" என்று உரக்கக் கூறி உற்சாகப்படுத்தி வழி அனுப்பிவைத்தார்கள்.

எங்கள் ரயில் பெட்டியில் பேட்டரியால் இயங்கும் ஒலி பெருக்கி கருவி அமைத்திருந்தோம். எல்லாரும் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் அமர்ந்த பிறகு நாமஜபம் தொடங்கப்பட்டது. எல்லாரும் உற்சாகத்துடனும், பக்தி பரவசத்துடனும் இறைவனின் நாமஜபத்தில் ஈடுபட்டார்கள். இரவு 7-30 மணிக்கு ஈரோடு ஜங்ஷனை அடைந்தோம். அங்கு இரவு சிற்றுண்டி அருந்தினோம். எங்கள் ரயில் பெட்டி ஏற்காடு எக்ஸ்பிரஸில் இணைக்கப்பட்டது. ஈரோட்டில் பல அன்பர்களும், தாய்மார்களும் வந்திருந்து வாழ்த்துக் கூறி அனுப்பி வைத்தார்கள். நள்ளிரவில் சேலம் அடைந்தோம். அங்கும் பல அன்பர்களும், தாய்மார்களும் வந்திருந்து வாழ்த்துக் கூறி அனுப்பினார்கள். 14ஆம் தேதி காலை 8 மணிக்குச் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தை அடைந்தோம். அங்கு அனைவரும் ரயிலுக்குத் தண்ணீர் பிடிக்கும் குழாய்களில் வசதியாகக் குளித்தோம். காலை பிரார்த்தனையைப் பிளாட்பாரத்தில் முடித்தோம். சிற்றுண்டி அருந்திய பிறகு சென்னை மயிலையில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்திற்குச் சென்றோம். அங்குத் தலைவர் ஸ்ரீமத் தபஸ்யானந்த சுவாமிகளின் ஆசியைப் பெற்றோம். ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஆலயத்தில் அமர்ந்து நாமஜபம், தியானம் செய்தோம். ஸ்ரீ ராமகிருஷ்ணரைத் தரிசித்த பிறகு கபாலீஸ்வரர் ஆலயத்திற்குச் சென்றோம். அங்கு வழிபாடு முடித்த பிறகு சென்ட்ரல் ரயில் நிலையத்தை அடைந்தோம்.

எங்கள் பெட்டி ஜம்முதாவி எக்ஸ்பிரஸில் இணைக்கப்பட்டது. பகல் உணவை வண்டியிலேயே சாப்பிட்டோம். பிற்பகல் 2 மணிக்கு வண்டி புறப்பட்டது. வழக்கம்போல் பஜனை, நாமஜபத்தில் ஈடுபட்டோம். வண்டி நாயுடு பேட், கூடூர், நெல்லூர், விஜயவாடா வழியாகச் சென்று 15ஆம் தேதி காலை 8 மணிக்குக் காகிபேட் ஜங்ஷனை அடைந்தது. பிளாட்பாரத்தில் குளித்தோம். காலைப் பிரார்த்தனையில் சிவ புராணம், லிங்காஷ்டகம், அக்ஷர மாலை ஆகியவற்றைப் பாடினோம். பிறகு சிற்றுண்டியை முடித்தோம். பத்து மணி முதல் பன்னிரண்டு மணிவரை சத்காலக்ஷேபம், பஜனை, தனிப் பாடல்கள் ஆகியவற்றில் ஈடுபட்டோம். பகல் உணவு வண்டியிலேயே அருந்தினோம். ஓய்வுக்குப் பிறகும் பஜனையும், நாமாவளியும் தொடர்ந்து செய்துகொண்டே ராமகுண்டம், சிர்பூர், வார்கா வழியாகச்சென்றோம்.

இந்த முறையிலேயே மறுநாளும் (*16 7-80*) காலத்தைக் கடவுள் சம்பந்தமான விஷயங்களில் கழித்துக்கொண்டு நாக்பூர், போபால், ஜான்ஸி, குவாலியர் வழியாக மாலை 6 மணிக்கு ஆக்ரா கண்டோன்மெண்டை அடைந்தோம். ஆங்கு மாலை வழிபாட்டுக்குப் பிறகு உணவருந்திவிட்டு வண்டியிலேயே படுத்துறங்கினோம்.

இரண்டு நாட்கள் தொடர்ந்து பிரயாணம் நிகழ்ந்தது. இடையிடையே மழை பெய்துகொண்டிருந்தது. பெரும்பகுதி நேரத்தை ஆன்மிக சிந்தனையிலேயே செலவழித்ததால் காலம் கடந்ததும் பிரயாணக்களைப்பும் தெரியவில்லை.

17—7—80 காலை 6 மணிக்குச் சிற்றுண்டி தயார் செய்து எடுத்துக்கொண்டு இரண்டு பேருந்துகள் மூலமாக மதுராவை நோக்கிப் புறப்பட்டோம். 55 கி. மீ. தூரமுள்ள மதுராவை 8-15 மணிக்கு அடைந்தோம். தொடர்ந்து பெய்த மழையினால் யமுனையில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. யமுனையில் எல்லாரும் ஸ்நானம் செய்துவிட்டுத் துவாரகாநாத் கோயிலில் ஐக்கிய வழிபாடு செய்தோம். மூலஸ்தானத்தில் கறுப்புச் சலவைக் கல்லாலான ஸ்ரீகிருஷ்ணர், புல்லாங்குழலுடன் தனியாகவும், பக்கங்களில் ராதாகிருஷ்ணனாகவும் காட்சியளிக்கிறார். நாள்தோறும் பக்தர்

கள் நூற்றுக்கணக்கில் வந்துபக்தியோடு வழி பாடு செய்கிருர்கள். கோயில் முழுவதும் சல வைக் கல்லால் கட்டப்பட்டுள்ளது. கோயிலே மிகவும் சுத்தமாக வைத்திருக்கிருர்கள்.

எங்களுடன் எடுத்துக்கொண்டு வந்திருந்த சிற்றுண்டியைப்பெங்கால்சத்திரத்தில் வைத்து அருந்திவிட்டுப் பஸ் மூலமாக ஸ்ரீ கிருஷ்ணன் பிறந்த இடத்தை அடைந்தோம். அங்கு இருந்த பழைய கோயில் மொகலாயர் படை யெடுப்பின்போது அழிக்கப்பட்டது. அதைத் தற்போது பெரும்தொகை செலவுசெய்து சலவைக் கற்களால் கட்டிக்கொண்டிருக்கிருர் கள். அங்கிருந்து பிருந்தாவனத்திலுள்ள பிர்லா மந்திரையடைந்தோம். அங்கு 6 அடி உயரமுள்ள ஸ்ரீ ராதாகிருஷ்ண சிலே அழகாகச் சலவைக் கல்லால் செய்யப்பட்டிருக்கிறது. அங்குள்ள கீதோபதேசச் சிலே மிகவும் குறிப் பிடத்தக்கது. அங்கிருந்து ஸ்ரீரங்கநாதர் கோயிலேயடைந்தோம். ஆலயம் தமிழ் நாட்டுப் பாணியில் உயரமான ராஜ கோபுரத்துடன் அமைந்திருக்கிறது. பூஜையும் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களால் தமிழ் நாட்டு முறையிலேயே நடைபெற்று வருகிறது: அங்குச் சிறிது நேரம் ஐக்கிய வணக்கம் செய்தோம். அங்கிருந்து யமுனே நதிக்கரையில் ஸ்ரீ கிருஷ்ணன் காளிங்க நர்த்தனம் புரிந்த இடத்தைச் சென்று பார்த் தோம். பிற்பகல் மூன்று மணிக்கு ஆக்ரா கண்டோன்மென்டிற்கு வந்து உணவு அருந்தி னேம். மீண்டும் பஸ் மூலம் நான்கு மணிக்குப் புறப்பட்டுப் தாஜ்மஹாலே அடைந்தோம். நபர் ஒன்றுக்கு இரண்டுருபாய் நுழைவுக் கட்டணம் செலுத்தி உள்ளே சென்ருேம். முழுதும் சலவைக் கல்லால் அழகாகக் கட்டப்பட்டுள்ள இந்த நினேவுச் சின்னத்தில் பல வர்ணங்களில் உருது எழுத்துக்கள் பதிக்கப்பட்டுள்ளன. பலர் புகைப்படங்கள் எடுத்துக் கொண்டார் கள்.

அங்கிருந்து புறப்பட்டுத் தயாள் பாக் என்ற பகுதியிலுள்ள ராதா சுவாமி ஆலயத்திற்குச் சென்ருேம். இக்கோயில் ஹிந்து சாது ஒருவ ருடைய சமாதிமீது கட்டப்பட்டுள்ளது. முழுவ தும் சலவைக் கல்லினுல் சித்திர வேலேப்பாடு களுடன் அமைக்கப்பட்டுள்ள ஆலயம் இது. 1904ஆம் ஆண்டு கட்டத்தொடங்கி ஒரு பகுதி மட்டுமே பூர்த்தியடைந்துள்ளது. பல வர்ணங் களில் கற்களே இத்தாலி போன்ற வெளிநாடு களிலிருந்தும் வரவழைத்துச் சித்திரவேலேப் பாடுகள் சிறப்பாகச் செய்யப்பட்டுள்ளன. அங்கிருந்து ஆக்ரா கண்டோன்மென்டிற்குச் சென்ருேம்.

இரவு ஒரு மணிக்குப் புறப்பட்டுச் சென்ற விரைவு வண்டியில் எங்கள் பெட்டி இணேக்கப் பட்டுக் காலேயில் ஏழு மணிக்குப் புதுடில்லி ஸ்டேஷனே அடைந்தோம். ஒன்பது மணிக்கு இரண்டு பஸ்கள் மூலமாக டில்லி நகரைச் சுற்றிப்பார்க்கப் புறப்பட்டோம். அங்குத் தமிழ் நாட்டுப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் உதவியுடன் பாராளுமன்றம், ராஷ்டிரபதி பவன் பார்த்தோம். பிறகு சிறிய குன்றின் மீது உள்ள முருகன் கோயிலேயடைந்தோம். இது கிரேட் கைலாஸ் என்னும் பகுதியிலுள்ளது. ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமியைத் தரிசிக்க நாள் தோறும்அங்குள்ள தமிழர்கள் திரண்டுவருவது குறிப்பிடத்தக்கது. அங்கிருந்து குதுப்மினரை அடைந்தோம். அதனருகே கி. பி. நான்காம் நூற்ருண்டில்கட்டப்பட்ட ஒரு விஷ்ணு ஆலயம் மசூதியாக மாற்றப்பட்டிருந்ததைக் கண்டோம். அங்கிருந்து மகாத்மா காந்தி சுடப்பட்ட இட மான பிர்லா வீட்டிற்குச் சென்ருேம். அங்கே காந்திஜியின் வாழ்க்கையின் முக்கிய நிகழ்ச்சி கள்பலபொம்மைகள் உருவங்களாகச் சித்திரிக் கப்பட்டிருந்தவை மனதைக் கவர்ந்தன. அந்த இடம் மனதிற்கு மிகவும் சாந்தியையளிக்கக் கூடியதாக உள்ளது. அங்கிருந்து பாராளுமன் றத்திற்குச் சென்ருேம். சபை நடந்துகொண்டி ருந்ததைப் பார்வையாளர் பகுதியில் இருந்து கண்ணுற்ருேம். அங்கிருந்து ரயில் நிலேயத்திற் குத்திரும்பி வந்து பகல் உணவு அருந்தினேம்.

மாலே நான்கு மணிக்குப் புறப்பட்டு ஸ்ரீ ராம கிருஷ்ண மடத்திற்குச் சென்ருேம். மடத்தின் தலேவர் ஸ்ரீமத் புதானந்தர் அவர்கள் அனே வரையும் அன்புடன் வரவேற்ருர். ஸ்ரீ ராம கிருஷ்ணர் ஆலயம் பெரியதாகவும் சலவைக் கற்களால் கட்டப்பட்டதாகவும் அமைந்திருக் கின்றது. ஆலயத்திற்கு நேர் கீழே சொற் பொழிவு மண்டபம் உள்ளது. அங்குச் சுவாமி புதானந்தர் அவர்கள் பதினேந்து நிமிடங்கள் ஆங்கிலத்தில் உரையாற்றினர். (தொடரும்)

கைம்முதல் சிவமே என்னும் தைம்முதற் பொங்கல் வாழி!

(புலவர் க. தில்லைக்கோவிந்தன்)

உலகெலாம் உய்தி காண ஓங்குமெய்ஞ் ஞானச் செல்வம்
குலவுசீர் பரம ஹம்ஸர் கொள்கையின் வடிவு தாங்கி
நிலமிசை வந்த அன்னை நின்மலன் விவேகா னந்தன்
இலகுமும் மூர்த்தி தம்மால் இசைந்தமெய்ப் பொங்கல் வாழி!

பரவுவார் சமய மார்க்கம் பலப்பல கிளைத்த வேனும்
கரவிலார் தெளிவு கொள்ளக் கடவுளொன் றென்று காட்டும்
மரபினில் இந்து மார்க்கம் மகம்மதோ டேசு மார்க்கம்
வரன்முறை ஒழுகிப் போந்த வள்ளியோர் பொங்கல் வாழி!

தாயவள் சுட்டச் சேய்கள் தந்தையை அறிவு மாபோல்
தூயசெம் பொருளைப் பற்றத் துணையதன் சக்தி ஆகும்;
நேயமார் ஆணும் பெண்ணும் நினைசிவ சக்தி என்றே
ஆயநற் சாத னத்தால் அருள்தவப் பொங்கல் வாழி!

முக்குண வாழ்வைத் தூண்டி முடுக்கிடும் காமப் பேயின்
சிக்கினை அவிழ்க்கும் செய்தி: சித்தமே சிவமாய் நிற்றல்;
நெக்குநெக் குருகி மக்கள் நிலையறிந் தாற்றும் தொண்டே
அக்கணம் சரமற் கென்னும் அற்புதப் பொங்கல் வாழி!

ஐம்புலக் கதவைச் சாத்தி அகத்தொளிர் ஞான பானு
மெய்ம்முதற் பொருளைக் காட்ட மிகைத்தெழும் பேரா னந்தம்;
''கைம்முதல் சிவமே'' என்னும் தைம்முதற் பொங்கல் வாழி!
மும்மணி குருதேவ் - அன்னை - முதன்மகன் அருளே வாழி!

செய்திகள்

நிகழ்பவை:

ஜனவரி மாதம் 17, 18 தேதிகளில் திருச்செந்தூரில் ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள் அந்தர்யோகம் நடாத்துவார்கள். இதன் முழு விவரம் மார்கழி மாத இதழில் அட்டை இரண்டாம் பக்கத்தில் வெளிவந்துள்ளது.

ஜனவரி மாதம் 18-ஆம் தேதி கரூர் பசுபதி பாளையம் ஸ்ரீ ராமகிருஷ்ண ஆசிரமத்தில் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் ஒரு நாள் அந்தர்யோகம் நடாத்துவார்கள்.

27-1-81 அன்று ஸ்ரீ விவேகானந்த ஜயந்தியை முன்னிட்டுக் குருகுலமாணவர்கள் 24 மணி நேரம் அகண்ட நாம பஜனையும் நண்பகல் ஒரு மணிநேரம் ஐக்கிய வணக்கமும் செய்வார்கள்.

ஜனவரி 30-ம் தேதி காலை 6-00 மணிமுதல் இரவு 7-30 மணிவரையில் இராமநாதபுரம் ஸ்ரீ தாயுமானசுவாமி தபோவனத்தில் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் அந்தர்யோகம் நடாத்துவார்கள். இதில் கலந்து கொள்ள விரும்பும அன்பர்களும், தாய்மார்களும் முன்கூட்டியே ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம் திருப்பராய்த்துறைக்கு எழுதி அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும். அனுமதி பெற்றவர்கள் உணவுச் செலவிற்காக ருபாய் ஏழு இராமநாதபுரம் ஸ்ரீ தாயுமானசுவாமி தபோவனத்தில் நேரில் செலுத்தவேண்டும்.

பிப்ரவரி 8ஆம் தேதி மாலை வட ஆற்காடு ஜில்லா வேலூரில் அருள்நெறிச் சங்கத்தார் கொண்டாடும் ஸ்ரீ விவேகானந்த ஜயந்தி விழாவில் ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள் சொற்பொழிவாற்றுவார்கள்.

9-2-81 அன்று வட ஆற்காடு ஜில்லா மதினப்பள்ளியில் ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள் லட்சார்ச்சனையும், அந்தர்யோகமும் நடாத்துவார்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

இயற்றிய நூல்கள்

ஸ்ரீமத் பகவத்கீதை	பிரசார விலை	ரூ. 16-00
திருவாசகம்	பிரசார விலை	14-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள்	,,	6-00
இராமாயணம்	,,	5-00
கர்மயோக விளக்கம்		10-00
ஞானயோக விளக்கம்		8-00
ராஜயோக விளக்கம்		8-00
பக்தியோக விளக்கம்		6-00
பரமஹம்சரின் பெருமை		6-00
விவேகானந்த விவரணம்		4-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்		4-00
விவேகானந்த உபநிஷதம்		4-00
கடவுளின் வடிவங்கள்		4-00
சந்தேகம் தெளிதல் பாகம்-I		3-50
சந்தேகம் தெளிதல் பாகம்-II		3-50
தினசரி தியானம்	பிரசார விலை	3-25
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரீ	,,	3-00
அநுஷ்டான வேதாந்தம்		3-00
எதிர்கால இந்தியா		3-00
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம்		3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை		3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)		2-00
ஸ்ரீ சாரதா தேவியார் சரிதம்		2-00
கண்ணன் என்னும் கடவுள்		2-00
தாயுமானவர் இயற்றிய		
கருணாகரக் கடவுள்	விரிவுரை	3-50
பரிபூரணானந்தம்	ஷை	3-00
சின்மயானந்த குரு	ஷை	3-00
ஆனந்தமானபரம்	ஷை	3-00
சுகவாரி	ஷை	3-00
மௌனகுரு வணக்கம்	ஷை	3-00
எங்கும்நிறைகின்றபொருள்	ஷை	2-50
பரசிவ வணக்கம்	ஷை	1-00
பஜனைப் பாடல்கள்		2-50
விரதவீரர் பீஷ்மர்	(நாடகம்)	1-50
விபீஷணன் சரணாகதி	ஷை	1-50
பரமஹம்சர் பாமாலை		1-50
சந்நியாசி		1-25
குழந்தைகளின் களிக்கூடம்		1-00
சகோதரி நிவேதிதை		1-00
காயத்ரீ		1-00
இராவண தத்துவம்		1-00
வாலி மோட்சம்	(நாடகம்)	1-00
தவப்புதல்வர்கள்	(நாடகம்)	1-00
ஏகலைவ்யனின் குருபக்தி	(நாடகம்)	1-00
தானவீரன் கர்ணன்	(நாடகம்)	1-00

பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம்		ரூ. 1-00
பிரஹ்லாதன்	(நாடகம்)	1-00
மார்க்கண்டேயன்	(நாடகம்)	1-00
இந்துமதமும் கிறிஸ்துவ மதமும்		1-00
பாண்டவ கௌரவபெருமை	(நாடகம்)	0-80
நன்மக்களைப் பெறுதல்		0-80
நோய்க்கு இடம் கொடேல்		0-80
பாதுகா பட்டாபிஷேகம்	(நாடகம்)	0-75
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா?		0-75
*ஆத்ம சக்தி		0-75
*சக்தி தத்துவம்		0-70
*ஈசன் எங்கும் நிறைந்துள்ளான்		0-60
*ஆலய வழிபாடு		0-60
*சூரிய நாராயணன்		0-50
*முருகக் கடவுள்		0-50
*விஷ்ணு தத்துவம்		0-50
தெய்வீக மகிமைகள்		0-50
சைவன் யார்?		0-50
கர்மகாண்டம் எது? ஞானகாண்டம் எது?		0-50
*கணபதி		0-40
நன்னெறிகளும் அருள்வாக்குகளும்		0-40
வர்ணாச்ரம தர்மம்		0-30
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்		0-30
The Bhagavad Gita (10th Imp.)		20-00
Sri Lalitambika Sahasranama Stotram		10-00
The Indian National Education		8-00
Ramakrishna Lives Vedanta		8-00
Facets of Brahman or The Hindu Gods		5-00
Daily Divine Digest (DELUXE)		4-50
Daily Divine Digest (Ordinary)		2-50
Mahabharata (with plastic cover)		4-00
Ramayana	(do)	4-00
The man Making Message of Vivekananda (with Plastic cover)		4-00
Sri Vishnu Sahasranama Stotram		4-00
The Bahagavad Gita (Small Size)		4-00
Siva Sahasranama Stotram		3-50
Bheeshma The Superman		3-50
Hinduism Hosts Christianity		3-00
Holy Bible—In the Light of Vedanta		1-50
*Introducing the Gita		1-50
The Garland of Paraaparam		1-50
TAT TVAM ASI *That Thou Art* IN Tayumana Swami		1-00
*Key to Higher Life		0-75

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபால் கட்டணத்திற்காக கீதை, திருவாசகத்திற்கு ரூ. 3-25ம் மஞ்ஜரீக்கு ரூ. 1-40ம் இராமாயணத்திற்கு ரூ. 1-30ம் தினசரி தியானத்திற்கு ரூ. 1-20ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 2-50 முதல் 3-50 வரையும் சேர்த்து அனுப்புங்கள்.

*இக்குறியிட்ட புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன,

அந்தர்யோக விவரங்கள் (தொடர்ச்சி)

ஒட்டன்சத்திரத்தில் 25—1—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பிரணவ பஞ்சாட்சர மாசாந்தி அன்பு நிலையம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—ஸ்ரீவைகுண்டத்தில் 1—2—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ கைலாசநாதர் திருக்கோவில்
நேரம்; காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

நீலகிரி ஜில்லா—கோத்தகிரியில் 5—2—81 வியாழக்கிழமை

இடம்: சாந்தி ஆஸ்ரமம்
நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி குஹானந்தர்
உணவு வசதி: நேரில் ரு. 2-50 செலுத்தி கலந்து கொள்ளலாம்.

வடஆர்காடு ஜில்லா—மேக்களூரில் 7—2—81 சனிக்கிழமை

இடம்: ஸ்ரீநவநீத கோபாலகிருஷ்ண ஆலயம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

சேலத்தில் 8—2—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ சாரதா கல்லூரியின் பிரார்த்தனை கொட்டகை
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

வடஆர்காடு ஜில்லா—ஆரணியில் 8—2—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: கோட்டை ஸ்ரீ கைலாசநாதர் ஆலயம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்; ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

கோவை ஜில்லா—வையம்பாளையத்தில் 8—2—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: சுதந்திர உயர்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்

ராமநாதபுரம் ஜில்லா—சிவகாசியில் 14—2—81 சனிக்கிழமை

இடம்: அன்னை சாரதா ஆச்ரமம்; வெள்ளையாபுரம் ரோடு
நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

ராமநாதபுரம் ஜில்லா—ராஜபாளையத்தில் 15—2—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ பாரதி கல்யாண மண்டபம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்
உணவு வசதி: மதிய உணவுக்கு ரு. 1-50 செலுத்தி சீட்டுப்பெற்றுக்கொள்ளலாம்.

Edited by SWAMI NITHYANANDA
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.